கிராம நலம்

மார்ச் - 1965

தேன் இனியது எனல், தேனீ வளர்ப்பு எளியது —
யாரும் எங்கும் செய்யக்கூடிய ஒரு குடிசைத் தொழில்.

பஞ்சாயத்து ஆட்சியில், கிராமப் பொருளாதார வளர்ச்சிக்கான தொழில்கள்

மூங்கிலைக் கிழித்துக் கூடை, முறம் முடைதல் புதிய தொழில் அல்ல. ஆனால்,இத்தகைய தொழில்களில் ஈடுபடுவோரின் வருவாய் பெருகவும், தொடர்ந்து — நிரந்தரமாகக் கிடைக்கவும், இப்போது கூட்டுறவு மூலம் வழி செய்யப்படுகிறது.

கிராமநலம்

மாடி 10 மார்ச், 1965 படி 6

பொருளடக்கம்

விவசாய உற்பத்தி பெருக குறுகிய கால திட்டங்கள் 2
முதல் வெற்றி முழுதும் வெற்றி 8
பாலேம் ; சுயமுயற்சியின் சின்னம் 12
நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் 14
'தன்வினை தன்னைச் சுடும்' 17
மண்ணிலிருந்து உருவாகும் வண்ணப்பொருட்கள் 25
விவசாயி விளைவித்த விநோதம் 30

வெளியிடுபவர் :
திரு என். அனந்தபத்மநாபன், ஐ. ஏ. எஸ்.

ஆசிரியர் :
திரு எஸ். வேங்கடசாமி, எம்.ஏ.

ஆண்டு சந்தா ரூ. 1·50.

சந்தா மற்றும் நிர்வாக சம்பந்தமான எல்லா விவரங்களுக்கும் "பொதுஜனத் தொடர்பு அதிகாரி, கிராம நல—தல நிர்வாகத் துறை, சென்னை-9" என்ற முகவரிக்கு எழுதவும்.

தமிழ்நாடு அரசாங்க

நிதிநிலை அறிக்கை

தமிழ்நாடு அரசாங்கத்தின் 1965-66-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை, சட்டசபையில் சமர்ப்பித்து, உரை நிகழ்த்திய முதலமைச்சர் அவர்கள், பல்வேறு பணித்துறைகள் மூலம் நடப்பு ஆண்டில் நடைபெற்ற பணிகள், அடுத்த ஆண்டில் மேற்கொள்ளப்படவிருக்கும் முக்கிய பணிகள் ஆகியவற்றைப் பற்றிய பொதுவான விளக்கம் தந்துள்ளார். இவற்றில் கிராமப்புற மக்களுக்கு நெருங்கிய தொடர்புடைய விவசாயம், ஆரம்பக் கல்வி, பஞ்சாயத்து முதலியவை சம்பந்தப்பட்ட பகுதிகள் அடுத்து வரும் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.

உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கான ஏற்பாடுகள், அதற்கான சாத்தியக்கூறுகள் பற்றி, முதலமைச்சர் தம் பேச்சில் தெளிவுபடுத்தியுள்ளார். குறிப்பாக, ரசாயன உர வகைகள் குடியானவர்களுக்கு உரிய காலத்தில் கிடைப்பதற்கான ஏற்பாடுகளையும் அவர் விளக்கியுள்ளார். சிறு பாசனத் திட்டத்தின் கீழ், அதிக அளவில் கிணறுகளைத் தோண்டும் ஒரு திட்டத்தை அரசாங்கம் விரைந்து செயல்படுத்த ஏற்பாடுகள் செய்துள்ளதையும், அவர் குறிப்பிட்டுள்ளார். அதேபோல், தீவிர உற்பத்திப் பெருக்கத்திற்காக, தனிப் பண்ணை உற்பத்தித் திட்டத்தின் கீழ், விவசாயிகளுக்குக் கூடுதலான கடன் வசதிகளும், பிற வசதிகளும் அளிக்கப்பட விருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

ஆரம்பக் கல்வி சம்பந்தமாக, கல்வி பயில்விக்கும் தரத்தை உயர்த்த, 'மாநிலக் கல்விக் கழகம்' (State Institute of Education) நிறுவப்பட்டிருப்பதைப் பற்றி குறிப்பிட்ட முதலமைச்சர், அந்தக் கழகத்தின் அலுவல்களை விவரித்திருக்கிறார்.

கிராமப்புற மக்கள் அறிந்து கொள்ள வேண்டிய இச் செய்திகள் அடங்கிய முதலமைச்சரின் பேச்சின் சுருக்கத்துடன், வரவு-செலவுத் திட்டம் பற்றிய சில பொதுப்படையான விளக்கக் குறிப்புகளையும் (தமிழ்நாடு அரசாங்கத்தின் நிதித்துறை வெளியிட்டது), அடுத்து வரும் பக்கங்களில் காணலாம். வரவு-செலவுத் திட்டத்தின் அடிப்படைக் கூறுகளைத் தெளிவாகஅறிந்து கொள்ள, இக் குறிப்புகள் பயன்படும் என்று நம்புகிறோம்.

'பட்ஜெட்' என்ற சொல் உருவான கதை

அரசாங்க வரவு-செலவுத் திட்டத்தை, ஆங்கிலத்தில் 'பட்ஜெட்' என்று குறிப்பிடுவது வழக்கமாகி விட்டது. ஆனால், இந்த 'பட்ஜெட்' என்ற சொல் எப்படி உருவாயிற்று என்பது ஒரு சுவையுள்ள கதை.

நமது அரசியலமைப்பில் எந்த இடத்திலும் 'பட்ஜெட்' அல்லது வரவு-செலவுத் திட்டம் என்ற வார்த்தை உபயோகிக்கப் படவில்லை. முன்பு, பிரிட்டிஷ் நிதி மந்திரி அந்தந்த ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கைகளை, ஒரு தோல் பெட்டியில் வைத்து எடுத்துக்கொண்டு 'காமன்ஸ்' சபைக்குப் போவார். அந்தத் தோல் பெட்டிக்குத்தான் 'பட்ஜெட்' என்று பெயர். நாளடைவில், பழக்கம் காரணமாக, அந்தப் பெட்டியின் பெயர், அதன் உள்ளே இருந்த பத்திரங்களின் பெயராக மாறிவிட்டது. இந்திய அரசியலமைப்பில் இதற்கு "ஆண்டு நிதி நிலை அறிக்கை" என்ற வார்த்தைகளே பயன்படுத்தப்பட்டிருக்கின்றன.

卐

இந்த ஏற்பாடு எதற்காக ?

அரசாங்கம் செய்யும் செலவுகள் அனைத்தும் சட்டசபையின் திட்டமான அங்கீகாரத்தைப் பெற்றிருக்க வேண்டும் என்பது அரசாங்கத்தின் தலையாய கொள்கையாகும். அமைச்சர் உத்தரவு பிறப்பிப்பதாகக் காணப்படலாம். செலவினங்களை அனுமதிக்கும் உத்தரவில் செயலாளரும் கையொப்பமிடலாம். ஆனால், அரசாங்கப் பொது நிதியின்மீது இவர்கள் யாருக்கும் இயல்பான அதிகாரம் இல்லை. ஏற்கெனவே சட்ட மன்றம் செய்த முடிவுகளையும், செய்யக்கூடும் என்று சில வேளைகளில்

விவசாய உற்பத்தி பெருக

முதலமைச்சர்

திட்டப்பணிகளை குறைபாடுகளின்றி நிறைவேற்றும் ஒரு சில மாநிலங்களில் நமது மாநிலமும் ஒன்று. நமது மாநிலத்தில் மூன்றாம் திட்ட முன்னேற்றத்தைக் குறித்து அண்மையில் திட்டக் கமிஷன் ஆராய்ந்தபோது, நமது முயற்சிகளை வெகுவாகப் பாராட்டி இருப்பதோடு குறிப்பாக வேளாண்மை, மின்சாரம், தொழில் வளர்ச்சி, போக்குவரத்து வசதிகள் போன்ற முக்கிய வளர்ச்சித்துறைகள் அனைத்திலும் நம்முடைய சாதனைகளைப் புகழ்ந்து பாராட்டியுள்ளது.

விவசாய உற்பத்தி

விவசாய உற்பத்தி நமது பொருளாதாரத்தின் வளர்ச்சி விகிதத்தை நிர்ணயிக்கும் முக்கியமான ஓர் அம்சமாகும். நடப்புத்திட்டக் காலத்தில் விவசாயத்துறையில் அதிக முன்னேற்றம் ஏற்படவில்லை என்பதுபற்றி கவலை தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இத்துறையில் முன்னேற்றத்தை மதிப்பிடும்போது ஒன்றை நாம் நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும். வேளாண்மை உற்பத்தியைப் பெருக்குவதற்கு வேண்டிய பாசன வசதிகளை அமைத்தல், பொறுக்கு விதைகள், உரவகைகளை வழங்கல் போன்ற தேவையான வசதிகளை அரசாங்கம் திட்ட வேலைகளின் பகுதியாக வகை செய்து கொடுக்க முடியும். ஆனால், இவ்வசதிகளைத் தக்கவாறு பயன்படுத்தி, நிறைந்த விளைச்சலை அடைவது உழவர்களின் கைகளில்தான் உள்ளது. நவீன வேளாண்மை முறைகளை கையாளல் போன்ற செயல்களில் உழவர்கள் நல்லதொரு முடிவிற்கு வர அவர்களுக்கு ஊக்கமும் உற்சாகமும் பிறக்கும் வகையில் அரசாங்கம் ஆவன செய்து, மறைமுகமாகவே இத்துறையில் தனது பொறுப்புக்களை நிறைவேற்ற முடியும். விவசாய உற்பத்தியை நிர்ணயிப்பதில் பருவ நிலையும் முக்கிய பங்கு வகிக்கிறது.

இவ்வளவு தடைகள் இருந்தபோதிலும், திட்டத்தின் கடந்த 4 ஆண்டுகளில் நாம் எடுத்துக்கொண்ட முயற்சிகளின் பலனாக, உணவு தானிய உற்பத்தித் திறன் மிகவும் அதிகரித்திருக்கிறது. புள்ளிவிவரத்துறை கொடுத்துள்ள நடப்பாண்டிற்கான முன்னோடி மதிப்பீடுகளிலிருந்து, நடப்பு ஆண்டில் உணவு தானிய உற்பத்தி 60 லட்சம் மெட்ரிக் டன் அளவிலிருக்குமென்று புலனாகிறது. மூன்றாம் திட்டத்தொடக்கத்தில் இவ்வுற்பத்தி 53 லட்சம் மெட்ரிக் டன்கள்தான். நமது திட்டத்தில்

குறுகிய காலத் திட்டங்கள்

அறிவிப்பு

கூடுதலான ரசாயன உரவகைகளைப் பயன்படுத்தல், பொறுக்கு விதைகளை உபயோகித்தல் போன்ற முறைகளைப் பின்பற்றுவதன் மூலம்தான் வேளாண்மை உற்பத்தியை மேலும் பெருக்க முடியும் என்று நம்புகிறோம். குடியானவர்கள் நைட்ரஜன் உரவகைகளை மேன்மேலும் பயன்படுத்தத் தொடங்கி இருக்கிறார்கள் என்பது ஆறுதல் அளிக்கக்கூடிய செயலாகும். ரசாயன உரவகைகள் குடியானவர்களுக்கு உரிய காலத்தில் கிடைப்பதற்காக, இவற்றை வழங்கும் ஏற்பாடுகளை அடிக்கடி பரிசீலனை செய்து அவற்றை முறைப்படுத்தியும் வருகிறோம். உரவகைகளைத் தற்போது சில்லறையில் விற்பனை செய்யும் இடங்களின் எண்ணிக்கையை நாலாயிரமாக உயர்த்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. சில மாவட்டங்களில் இவற்றைத் தனிப்பட்ட வியாபாரிகளின் வாயிலாகவும் விற்பனை செய்ய முன்னோடியாக சில ஏற்பாடுகளைச் செய்திருக்கிறோம். சுற்றுவண்டி ஒன்றின்மூலம் உழவர்களுக்குத் தேவையான உரவகைகளை விற்பனை செய்ய, தஞ்சை மாவட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நீண்டகாலப் பயன் கருதி நாம் எடுக்கத் தொடங்கியுள்ள ஏற்பாடுகள் சிலவற்றில் இதுவும் ஒன்றாகும்.

4 லட்ச ரூபாய் திட்டம்

இத்தருணத்தில் ரசாயன உரங்களை அதிக அளவில் ஏற்றுக்கொண்டு கூடுதல் பலனைத் தரும் நல்ல விதைகளை மக்களிடையே பரப்புவதில் நாம் முனைய வேண்டும். ADT-27 என்கிற குறுவை ரக நெல் விதை ஒன்று அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த ரக நெல் ரசாயன உரவகைகளை அதிகமாக ஏற்றுக்கொண்டு தலை சாயாமல் அதிகவிளைச்சல் தரக்கூடியது. கடந்த பருவத்தில் இந்த நெல் பெரும் அளவில், மாதிரியாகப் பயிரிடப்பட்ட போது ADT-20 நெல் ரகத்தைப் பயிரிட்டால் கிட்டுகின்ற சராசரி 2,000 பவுண்டுகளுக்கு மாறாக ஏகராவிற்கு சுமார் 4,000 பவுண்டு விளைச்சல் கிடைக்குமென்று தெரிந்தது. எனவே 1966-67 இறுதிக்குள் சுமார் 2 லட்சம் ஏக்கர் நிலத்தில் இந்த நெல் ரகத்தைப் பயிரிடும் வகையில் காவிரி டெல்டாப் பகுதியில் இந்த நெல் விதைகளைப் பயிரிட்டுப் பெருக்குவதற்காக 4 லட்சம் ரூபாய் பெறுமான ஒரு திட்டத்திற்கு அரசாங்கம் அனுமதி அளித்திருக்கிறது. இந்தத் திட்டத்தை முற்றிலும் நிறைவேற்றினால் சுமார் 1 லட்சம் மெட்ரிக் டன் அளவிற்குக் கூடுதல் உணவு உற்பத்தி பெறுவது உறுதி.

எதிர்பார்க்கப்பட்ட முடிவுகளையும், இவர்கள் அமுலாக்குகிறார்கள். சுருக்கமாகச் சொல்வதானால், பணம் சம்பந்தப்பட்டவரை சட்ட மன்றத்தின் விருப்பங்களை நிறைவேற்றும் ஏஜெண்டுகளே அரசாங்கத்தினர். சட்ட மன்றங்களின் கூட்டம் எல்லாச் சமயங்களிலும் நடந்து கொண்டிருப்பதென்பது சாத்தியமல்ல. சட்டசபை உறுப்பினர் ஒவ்வொருவரும், அன்றாடம் பல்வேறு துறைகளில் ஆயிரக்கணக்கில் ஏற்படக்கூடிய வரவு செலவுகளை ஆராய்ந்து கொண்டிருப்ப தென்பதும் நடைமுறையில் நடக்கக் கூடியதல்ல. எனவேதான், ஆட்சி நிர்வாகத்திற்குப் பொறுப்பானவர்கள், வரப்போகும் ஆண்டுக்காக நிதிநிலை அறிக்கையைத் தயாரிப்பது என்ற முறை வகுக்கப்பட்டது. அந்த அறிக்கையில் எதிர்பார்க்கப்படும் எல்லா வரவினங்களும், செலவினங்களும் முக்கியத் தலைப்புகளின்கீழ் குறிக்கப்பட்டு, நிதி ஆண்டு துவங்குவதற்கு முன்னதாகவே சட்ட மன்றத்தின் அங்கீகாரத்துக்காக வைக்கப்படும். நிதி நிலை அறிக்கையை ஆராயவும், மாற்றவும், திருத்தவும், இறுதியில் முடிவாகத் தன் அங்கீகாரத்தைக் குறிப்பிடவும் சட்ட மன்றத்திற்கு வழி செய்யப்படுகிறது. இந்த நடைமுறை முடிந்து, கவர்னர் அங்கீகாரம் அளித்த பின்பு, நிதி நிலை அறிக்கையில் குறிப்பிட்ட நிதி வரம்புகளுக்கு உட்பட்டு, நிர்வாகத்தை இயக்குபவர்களுக்குப் போதிய அதிகாரமளிக்கப்படுகிறது.

வேண்டிய விவரத்தைக் கண்டறியும் முறை

''மானியக் கோரிக்கைகளும் விரிவான வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளும்'' அடங்கியுள்ள வரவு செலவுத் திட்ட வெளியீடு உண்மையிலேயே ஒரு பெரும் புத்தகமாகிறது. வேண்டுமான பகுதிகளை சுலபமாகக் கண்டு பிடித்து, அரசாங்க நிதி

எவ்வாறு செலவிடப்படுகிறது என்பதைக் கண்டறிய வேண்டுமானுல் இந்தப் புத்தகத்தைப் பார்த்து பழக்கப்படுத்திக்கொள்ள வேண்டும். புத்தகம் பார்வைக்குக் கனமாக இருக்கலாம். ஆனுல், இதை ஆராய மிகுந்த நேரம் தேவைப்படும் என்பதில்லே. கீழே குறிப்பிட்டுள்ளபடி செய்தால், இந்தப் புத்தகத்தை நன்கு புரிந்து கொள்ளலாம். இந்தப் புத்தகத்தின் முன்னுரைக் குறிப்பு, உள்ளே இருக்கும் விஷயங்களுக்குப் பொருளடக்கமாக உள்ளது. இதையடுத்து, மானியக் கோரிக்கைகளேக் காட்டும் அறிக்கை உள்ளது. புத்தக முடிவில் அகர வரிசைப் பொருட் குறிப்பு ஒன்று இருக்கிறது, ஒவ்வொரு செலவினமும் உள்ள பக்கங்கள் பற்றி அது வழி காட்டுகிறது.

நிதியமைச்சரின் உரை ஓர் அரசியல் பத்திரமே

நிதி அமைச்சரின் வரவு-செலவுத் திட்ட உரை மொத்தத்தில் ஓர் அரசியல் பத்திரமேயாகும். ஆண்டு முடிவிலும், ஆண்டுத் துவக்கத்திலும் நிதி நிர்வாகத்தில் முக்கிய அம்சங்களே நிதி அமைச்சர் விமர்சனம் செய்கிருர் என்பதில் சந்தேகமில்லே. ஆனுல், இதன் தலேயாய நோக்கம், தாம் எந்தக் கட்சிக்குப் பிரதிநிதித்துவம் வகிக்கிருரோ அக்கட்சியின் கொள்கைகள், வேலேத் திட்டங்கள் மீது கவனத்தைத் திருப்புவதும், அவைகள் எவ்வளவு தூரம் நிறைவேற்றப்பட்டுள்ளன என்பதையும் வரவு செலவுத் திட்ட ஆண்டில் மேற்கொண்டு அவைகளே எப்படி அமுலாக்குவது என்பதையும் குறிப்பிடுவதாகும். இந்தக் கொள்கைகள் சரியானவையா ? அமுல் முறை திட்டமானதாகவும் சிக்கனமானதாகவும் இருக்கிறதா என்பவைகளே உறுதிப்படுத்திக்கொள்வது சட்ட மன்ற உறுப்பினர் கடமை.

உணவு உற்பத்தியைக் குறுகிய காலத்தில் பெருக்குவதில் வசதிகள் உள்ள, சிறப்பாக சில குறிப்பிட்ட பகுதிகளில் நமது முயற்சிகளே ஈடுபடுத்துவதின் அவசியத்தைக் கடந்தகால அனுபவத்திலிருந்து நாம் உணர்ந்திருக்கிறேம். தீவிர உற்பத்தித் திட்டத்தின் (Package Programme) அடிப்படைக் கருத்து இதுதான். இந்தக் கருத்திற்கிணங்க, விரைவுத் திட்டத்தில் (Crash Programme) ஒரு பகுதியாகத் தீவிரச் சாகுபடிப் பகுதித் திட்டம் (Intensive Cultivation Area Programme) ஒன்றைச் செங்கற்பட்டு, கோயமுத்தூர், மதுரை, திருநெல்வேலி மாவட்டங்களில் குறிப்பிட்ட சில பகுதிகளில் நிறைவேற்ற எண்ணியுள்ளோம். இதற்காக இப்பகுதிகளில் உள்ள வேளாண்மை வளர்ச்சிப் பணியாளர்களின் எண்ணிக்கை கணிசமாக உயர்த்தப்படும். மற்றும் தனித்தனிப் பண்ணே உற்பத்தித் திட்டங்களின் (Farm Production Plans) மூலம் கூடுதல் உற்பத்திக்கான குறிக்கோள் அளவும் நிர்ணயிக்கப்படும். தனித்தனிப் பண்ணே உற்பத்தித் திட்டங்களின் (Farm Production Plans) அடிப்படையில் கடன்வசதிகள் உள்பட எல்லா வசதிகளும் அளிக்கப்படும். இந்த திட்டத்திற்கென 16 லட்சம் ரூபாய்க்கு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் வகை செய்யப்பட்டுள்ளது.

சிறுபாசனத் திட்டங்கள்

குறுகிய காலத்தில் வேளாண்மை உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்று திட்டமிடும்போது, விரைவில் பலன் தரும் திட்டங்களுக்கு நாம் முக்கியத்துவம் அளிக்கவேண்டியிருக்கிறது. சிறு பாசனத் திட்டங்களேக் கணிசமான அளவில் நிறைவேற்றுவதற்கும் இதுவே காரணமாகும். குறிப்பாக, அதிக அளவில் கிணறுகளேத் தோண்டும் ஒரு திட்டத்தை விரைந்து செயல்படுத்தி வருகிறேம். ''புதிய கிணறு உதவித் திட்டத்தின்கீழ்'' கிணறு ஒன்றிற்குக் கொடுத்துவந்த 2,000 ரூபாய் கடன் உதவியை 5,000 ரூபாய்க்கு உயர்த்தி இருக்கிறேம். சென்ற ஆண்டில் இத்தகைய கிணறுகள் சுமார் 3,000 மட்டுமே தோண்டப்பட்டன. நடப்பு ஆண்டில் சுமார் 4,000 கிணறுகள் தோண்டும் வேலே பூர்த்தியாகிவிடும் என்று தெரிகிறது. இது தவிர, விரைவுத் திட்டத்தின் ஒரு பகுதியாக தஞ்சாவூர் மாவட்டத்தில் ஒரத்தநாடு, பட்டுக்கோட்டைப் பகுதிகளில் ஏறக்குறைய 1,600 கிணறுகள் தோண்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது, இத்திட்டத்திற்கு இவ்வாண்டில் நல்ல ஆதரவு கிடைத்து வருவதையொட்டி, அடுத்த ஆண்டு, 8,000 கிணறுகள் தோண்டுவதென முடிவு செய்துள்ளோம். தஞ்சாவூர் மாவட்டத்தில் குடியானவர்கள் கோடைக் காலத்தில் கூடுதலாக ஒரு போகம் பயிர் செய்வதற்காக 87 லட்சம் ரூபாய் செலவில் 2,000 வடிமுனேக்குழாய் கிணறுகள் தோண்டுவதற்கான சிறப்புத் திட்டமொன்றிற்கும் அரசாங்கம் அனுமதி அளித்திருக்கிறது. திட்டம், எல்லா இடங்களிலும் பரவும்போது காவிரி டெல்டாப் பகுதியில் கிணற்று நீரைக்கொண்டு கூடுதலாகப் பாசனம் செய்வது சாதாரண வேளாண்மைப் பழக்கமாகிவிடும். இத்திட்டத்தினுல் முன்கூட்டியே நாற்றுவிட்டு, நடவு செய்வதற்கு வசதி ஏற்படுவதால், குறுவைச் சாகுபடியின் சராசரி விளேச்சல் மிகுதியாக உயர்வதற்கும் ஏது இருக்கிறது.

கால்நடை அபிவிருத்தி

வேளாண்மை உற்பத்தியைப் பெருக்குவதற்குரிய நடவடிக்கைகளே மேற்கொள்ளும்போது, பால், முட்டை, மீன் போன்ற துணே உணவுப் பொருட்களின் உற்பத்தியை உயர்த்த வேண்டிய

அவசியத்தையும் நாம் கருத்தில்கொள்ள வேண்டும். கால்நடை அபிவிருத்தித் துறையைச் சார்ந்த திட்டங்கள் நடப்பு ஆண்டில் விரைவில் நிறைவேற ஆவன செய்யப்பட்டுள்ளன. 1965-66-ம் ஆண்டுக்குரிய திட்டத்தில் ஏனைய பல திட்டங்களோடு பத்துக் கேந்திர கிராம வட்டாரங்களை ஏற்படுத்தவும் 24 கால்நடை மருந்தகங்களை ஏற்படுத்தவும் வகை செய்யப்பட்டிருக்கிறது. இவற்றைத்தவிர இந்திய அரசாங்கம் ஊக்குவித்துள்ள விரைவுத் திட்டத்தின் பகுதியாக பல விசேஷ வளர்ச்சித் திட்டங்களையும் நாம் நிறைவேற்றி வருகிறோம். நடப்பு ஆண்டிலும், அடுத்த ஆண்டிலும் நிறைவேற்றப் படுவதற்கான 203 லட்சம் ரூபாய் அளவிற்கு முதலீடு செய்யவேண்டிய திட்டங்களுக்கு அனுமதி அளித்திருக்கிறோம். இவற்றுள் சென்னை, மதுரை, கோயம்புத்தூர் நகரங்களைச் சார்ந்த பால் சேகரிப்புப் பகுதிகளில் மொத்தம் 134 லட்சம் ரூபாய் செலவில் தீவிர கால்நடை வளர்ச்சி வட்டாரங்கள் மூன்றினை நிறுவும் திட்டங்கள் குறிப்பிடத் தக்கவையாகும். இந்தப் பகுதிகளில் கறவை மாடுகளை அபிவிருத்தி செய்வதுதான் இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். ஜெர்ஸி காளைகள், சிவப்பு வெள்ளை சிந்திக் காளைகள், முர்ரா எருமைகள் போன்ற ஆணினங்களைக் கொண்டு பால் தரும் மாடுகளின் தரத்தை உயர்த்துவதற்கும், தீவன வசதிகளைப் பெருக்குவதற்கும் ஆங்காங்கு அதிக அளவில் கால்நடை மருத்துவ உதவிக்கு வகை செய்வதற்கும் இணைப்பாக நடவடிக்கை எடுக்கப்படும்.

மீனள வளர்ச்சி

நீண்ட கடற்கரை வசதியுள்ள நமது மாநிலத்தில் மீனள வளர்ச்சிக்கு வேண்டிய வாய்ப்புகள் நிறைய உள்ளன. விரைவுத் திட்டத்தின்கீழ் விசைப் படகுகளும், நவீன வலைகளும் மீனவர்களுக்கு வழங்கப்படும். இவை காரணமாக, இரண்டு கோடியே 75 லட்சம் ரூபாய் மதிப்புள்ள 78,000 மெட்ரிக் டன் மீன் கூடுதலாகப் பிடிக்கப்படும். நடப்பு ஆண்டில் ராயபுரத்தில், படகு கட்டும் தளம் அமைக்கும் வேலைகள் முடிவடைந்ததும், நம்முடைய மாநிலத்தில் நல்ல படகுகள் கட்டும் திறன் வெகுவாக உயரும்.

மின்சார அபிவிருத்தி

தமிழ்நாடு கடந்த 10 ஆண்டுகளில் தொழில் துறையில் தலைத்தோங்கியிருப்பதற்கு நம்முடைய மின் உற்பத்தி திட்டங்கள் விறுவிறுப்பாக நிறைவேற்றப்பட்டிருப்பதே காரணமென்றால், அது மிகையாகாது. 1965-66-ம் ஆண்டுக்குரிய திட்ட செலவில் கிராமங்களுக்கு மின்வசதி அளிப்பதற்கான திட்டங்களுக்காக 4 கோடி ரூபாய் வகை செய்யப்பட்டுள்ளது. இது தவிர வேளாண்மை உற்பத்தியைப் பெருக்குவதற்கான விரைவுத்திட்டத்தின் பகுதியாக கிராமங்களுக்கு மின்சார வசதி அளிப்பதற்கான திட்டத்திற்குப் புறம்பாக இந்திய அரசாங்கம் குறைந்தது ஒரு கோடி ரூபாயாவது நிதி ஒதுக்குமென்று எதிர்பார்க்கிறோம். மூன்றும் திட்ட இறுதிக்குள் நகரங்கள், கிராமங்கள், சிற்றூர்கள் உள்பட 20,500 ஊர்களுக்கு மின்சாரம் வழங்கப்படும். மூன்றும் திட்டத் தொடக்கத்தில் 10,760 ஊர்களுக்கே மின்சார வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருந்தது. நடப்புத் திட்டக்கால இறுதிக்குள் 2 வட்சத்து 30 ஆயிரத்

மூலதனச் செலவு என்றால் என்ன ?

வருமானம் தருகின்ற அல்லது நடைமுறைச் செலவுகள் இல்லாதிருக்கின்ற ஒரு நிலையான சொத்தை அடைவதற்கான செலவு, பொதுப்படையாக மூலதனச் செலவாகப் பாகுபடுத்தப் படலாம்.

நீர்ப் பாசனத் திட்டங்கள் இந்தப் பிரிவின்கீழ் வருகின்றன. இவை நிலையான ஆஸ்திகள் என்பதும், அரசாங்கத்துக்கு அவை வருமானம் தரும் இனங்களாக இருக்கின்றன என்பதும் இதற்குக் காரணம். அரசாங்கத்துக்கு நடைமுதல் வாடகைச் செலவு இல்லாதபடி செய்யும் ஒரு கட்டிடமும் மூலதன ஆஸ்தியாகக் கருதப்படும். ஜமீன்தார்களுக்கு நஷ்டஈடு கொடுப்பது மூலதனச் செலவாகக் கருதப்படும்; ஏனெனில் அந்தப் பண்ணைகள், அரசாங்கத்திற்குக் கூடுதல் வருமானம் வர வகை செய்கின்றன.

மூலதனச் செலவுகளை அரசாங்கத்தின் ஆண்டு வருமானங்களிலிருந்து போட்டுக் கொள்ளலாம். பொது மக்களிடமிருந்தோ, மத்திய அரசாங்கத்திடமிருந்தோ, வேறு வகைகளிலிருந்தோ கடன் பெறும் பணம் மூலமும் போட்டுக் கொள்ளலாம். சொத்து நிரந்தரமானதாக இருந்து, மூலதனத்தின் வட்டியை கட்டி வரக் கூடிய வகையில் போதுமான நிகர வருமானம் தருமானால், நிலையான கடன் என்ற அடிப்படையில் அதற்குப் பணம் போடலாம். ஆனால், ஆஸ்தியானது ஒரு சில ஆண்டுகள் மட்டுமே நிலைக்கக் கூடியதாக இருக்குமானால், பெற்ற கடனையும் உரிய வட்டியையும் அந்த ஆஸ்தியின் மதிப்பிட்ட ஆயுட்காலத்துக்குள் வருஷாந்திர தவணைகளில் செலுத்தி வர, வகை செய்ய வேண்டும். இனி வரும் தலைமுறையினருக்குப் பயன் தருகின்ற ஓர் ஆஸ்தி

அமைப்பை ஏற்படுத்துவதில் அதன் முழுப் பளுவையும், இந்தத் தலைமுறையினர்மீதே சுமத்திவிடக்கூடாது என்பதே இந்த முதலீட்டு முறையின் கொள்கையாகும்.

செலவுகளை ஒழுங்கு வகை செய்ய ஒரு கருவி

சிக்கனம், நிர்வாகத்தில் ஒழுங்கு முறை ஆகியவைகளி லும் அரசாங்கத்துக்கு, வரவு செலவுத் திட்டமானது ஒரு பயனுள்ள கருவியாக இருக் கிறது. ஒவ்வொரு துறைக்கும் பல திட்டங்கள் உண்டு. அவை அவசியமானவைகளாகவும் மிக வும் வேண்டப்படுவனவாகவும் இருக்கும். பணம் எப்படியாவது கிடைக்குமானல், எந்த ஆண்டில் வேண்டுமானலும் அந்த வேலை களை நிறைவேற்றலாம். ஆனல், அரசாங்கத்தின் பொருளாதார நிலை ஒரு வரையறைக்கு உட் பட்டதாக இருக்கிறது. எனவே வரவுக்குள் செலவை நிறுத்த, அல்லது வரவு-செலவைச் சரிக் கட்டிக்கொண்டு போகும்படிச் செய்ய, பல நல்ல திட்டங்களை ஒத்தி வைக்கும்படி நேரிடுகிறது. பல்வேறு துறைகளின் தலைவர் களும் அமைச்சர்களும் தங்கள் தங்கள் துறைகளின் திட்டங்களை எவ்வளவு வன்மையுடன் வலி யுறுத்திஞலும் திட்டங்கள் பல வற்றிலும் எது உடனடியாக அல்லது அவகாசமாக மேற் கொள்ளப்பட வேண்டியது என் பதை ஆராய வேண்டும். கல்வி முன்னேற்றத்திற்கும், புதுப் பாதைகள் போடுவதற்கும் பணம் ஒதுக்குவதற்கு முன்னதாகச் சட் டத்தையும், ஒழுங்கையும் பாது காக்க வேண்டும். வரிகளை வசூலிப்பதற்கான அமைப் பைத் திறமையும் பலமும் பொருந் தியதாக வைத்திருக்க வேண்டும், பஸ் போக்குவரத்தை அர சாங்கமே எடுத்து நடத்துவது, அருங்கலைகளுக்கு ஊக்கமளிப்பது திற்கும் சற்று அதிகமான பம்பு செட்டுகளுக்கு மின்சார இணைப்புக் கிடைக்கும். இதனல் கணிசமான அளவிற்குப் பாசன வசதியும் பெருகும்.

கல்வி வளர்ச்சி

பொருளாதார வளர்ச்சிக்கு அடிப்படை யானவற்றுள் கல்வி யின் பங்கு மிகப் பெரியது என்பதை நமது திட்டங்களைத் திட்டும் போது மனதிற்கொண்டுள்ளோம். இந்த வளர்ச்சித் துறையின்கீழ் நம் சாதனைகள் திட்ட இலக்குகளை மிஞ்சிவிடும். ஐந்தாண்டுத் திட்டத்துக்குட்பட்டும், உட்படாதும் கல்விக் காக மொத்தம் 37 கோடி ரூபாய் அளவுக்கு இவ்வரவு-செல வுத் திட்டத்தில் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டம் முடிவதற்குள்ளாக 6-11 வயதுத் தொகு தியுள்ள சிறுவர்களில் 92 சத வீதத்தினர் பள்ளிக்குச் செல்ல வசதி செய்யப்படும். உயர் தொடக்கப்பள்ளி நிலையிலும் இது வரை ஏற்பட்டுள்ள முன்னேற்றம் நாம் எதிர்பார்த்ததைவிட அதிகமானதாகும். மூன்ருவது திட்டத்தில் இரண்டு லட்சத்துப் பத்தாயிரம் மாணவர்களைப பள்ளியிற் சேர்க்க வேண்டுமென முதலில் எண்ணியதற்குப் பதிலாக, திட்ட முடிவிற்குள் 5 லட் சத்து 90 ஆயிரம் மாணவர்கள் பள்ளியிற் சேர்க்கப்படுவார்கள். மேலும், பள்ளிகளில் பயில்விக்கும் தரத்தை உயர்த்தும் நோக்கத்துடன், அண்மையில் மாநிலக் கல்விக்கழகம் (State Insti_ tute of Education) ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. தொடக்கப்பள்ளிகளை மேற்பார்வையிடும் அதிகாரிகளுக்கும், ஆசிரியப் பயிற்சிப் பள்ளி களில் பணியாற்றுபவர்களுக்கும் இந்த நிறுவனம் அகப்பணிப்பயிற்சி (In-service training) அளிக்கும். மேலும் இக்கழகம் தொடக்கப் பள்ளிகளில் பயிற்சி அளிப்பதற்கான சாதனங்களையும் வெளியீடு களையும் தயாரிக்கும். தொடக்கப் பள்ளிகளை விரைவாக விரி வாக்கி வரும் இந்தக்காலத்தில், போதிய அளவு இடவசதியுடன் அவற்றை அமைப்பது கடினமென்பது எல்லோரும் அறிந்ததே. நமக்குள்ள நிதி வசதிகளையொட்டி, இப்பெரும் பிரச்சினையைச் சமாளிப்பதற்கு இயன்ற முயற்சிகளைச்செய்து வருகிறோம். பொது மக்கள் நன்கொடையுடன் துவக்கப் பள்ளிகளுக்குக் கட்டிடங்கள் கட்டுவதற்காகக் கடந்த ஆண்டுகளைப்போல் பஞ்சாயத்து யூனி யன்களுக்கு மானியம் வழங்குவதற்கென 40 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. முன்னுள் ஜில்லா போர்டு நிர்வாகத்தின் கீழ் இருந்த உயர் நிலைப பள்ளிகளுக்குக் கட்டிடங்கள் கட்டு வதற்கான மானியம் வழங்குவதற்கென்று ரூபாய் 30 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

குடும்பக் கட்டுப்பாடு

கிராமப் பகுதிகளில் மருத்துவ வசதிகளை அதிகரிப்பதென்ற நமது கொள்கையை ஒட்டி, பல்வேறு வளர்ச்சி வட்டங் களில் 120 ஆரம்ப சுகாதார நிலையங்களைத் திறப்பதற்கு அனுமதி வழங்கியுள்ளோம். இதன் மூலம், வளர்ச்சி வட்டாரம் ஒவ்வொன் றிலும் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் திறக்கப்பட வேண்டு மென்கிற மூன்ருவது திட்டத்தின் இலட்சியம் நிறைவேறும்.

பொருளாதார முன்னேற்றத்திஞல் கிட்டும் பலன்கள், மிகுந்த மக்கட் பெருக்கத்திஞல் சிதறிப் போகாமலிருக்க வழி செய்ய வேண்டியது அவசியமாகும். எனவே தான், மூன்ருவது ஐந் தாண்டுத் திட்டத்தில் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டங்களுக்குச் சிறப்பான இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

இந்தத் திட்டம் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததால், சட்ட மன்ற உறுப்பினர்களும் பஞ்சாயத்து யூனியன் மன்றத் தலைவர்களும் இதற்கேற்ற நல்ல சூழ்நிலையை உருவாக்குவதில் பெரும் பங்கு கொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

பின்தங்கிய வகுப்பினர் நலன்

பின்தங்கிய வகுப்பினர் நலனில் அரசாங்கத்திற்கு எப்போதுமே விசேஷ அக்கறை உண்டு. ஹரிஜனங்கள், பின் தங்கிய வகுப்பினர் நலனுக்குரிய திட்டங்களுக்காக 1965-66-ம் ஆண்டில் ரூபாய் 484 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மாணவர்களுக்கு உபகாரச் சம்பளங்கள் வழங்கும் திட்டமும் தொடர்ந்து நடத்தப்படும். இதற்காகத் தக்க அளவில் முன்னிலும் கூடுதலாக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. முக்கியமாக, ஹரிஜனங்களுக்கு வீட்டுமனை வசதிக்காக நில ஆர்ஜிதம் செய்யும் வேலையைத் துரிதப்படுத்தியுள்ளோம். இதற்காக, வரும் ஆண்டில் ரூபாய் 38 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

நம் மாநிலத்தில் விவசாயத்தில் ஈடுபட்டுள்ளவர் ஒவ்வொருவருக்கும் கிடைக்கும் சாகுபடிக்கேற்ற சராசரி நிலப்பரப்பு தேசிய சராசரியைக் காட்டிலும் குறைவாகவே உள்ளது. நீர்ப்பாசன வசதியைப் போன்று அரசாங்கம் அமைத்துக்கொடுக்கும் பொருளாதாரப்பொது வசதிகளை மட்டும் கொண்டு உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கான வாய்ப்புகளும் நமது மாநிலத்தில் குறைவாகும். எனவே, பொறுக்கு விதைகள், செயற்கை உரங்கள், பசுந்தாள் உரங்கள் போன்ற திருத்திய சாதனங்களைப் பெருமளவில் பயன்படுத்துவதன் மூலம் தான் உற்பத்தியை நமது மாநிலத்தில் பெருக்க முடியும்.

இது போன்று பல கோணங்களிலிருந்தும் விவசாய உற்பத்திப் பிரச்சினையை ஆராய்ந்து பார்த்து, நான்காவது திட்ட காலத்தில் உணவு தானிய உற்பத்தியை 65 லட்சம் மெட்ரிக் டன்களிலிருந்து 80 லட்சம் மெட்ரிக் டன்களாக உயர்த்தக் கூடுமென மதிப்பிட்டிருக்கிறோம்.

அமைதியான சூழ்நிலை-ஆக்க வேலைக்கு அவசியம்

இவை அனைத்திற்கும் மேலாக திட்டத்தின் வெற்றி, நாட்டில் அமைதி நிறைந்த சூழ்நிலை நிலவுவதைப் பொறுத்தே இருக்கும். அத்தகைய சூழ்நிலையில் தான் நமது நிர்வாக இயந்திரம் ஆக்கப் பணிகளில் தனது சிந்தை முழுவதையும் செலுத்த முடியும். கடந்த பத்துப் பதினைந்து ஆண்டுகளாக, அரசியல் கொள்கை வேறுபாடுகள் இருந்தபோதிலும், நமது மாநில வளர்ச்சி பற்றிய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் ஒருமித்த சிந்தனையுடன் செயலாற்றி வந்துள்ளோம். இவ்வொருமித்த மனப்பான்மையினால் தான், இயற்கை வளக்குறைபாடுகளையும் கடந்து, நமது மாநிலத்தில், பற்பல துறைகளில் போற்றத்தக்க அளவிற்கு வளர்ச்சி காண நம்மால் முடிந்தது.

நாம் அனைவரும் பாராட்டிப் பேணி வரும் நம் தமிழ்நாட்டில் வளர்ச்சிக்கு நம்மை அர்ப்பணம் செய்து கொள்ளக்கூடிய ஓர் அமைதியான சூழ்நிலையைத் தோற்றுவிப்பதற்கு நாம் எல்லோருமே பாடுபட வேண்டும்.

ஆகியவைகளைவிட, புதிய செல்வ வளங்களின் உற்பத்தி, அதிக உணவு உற்பத்தி ஆகியவைகளுக்கு முதலிடம் கொடுக்க வேண்டும். எனவே, குறிப்பிட்ட நாளில் அல்லது அதற்கு முன்னதாக பல்வேறு துறைத் தலைவர்கள், வரப்போகும் ஆண்டுக்கு தங்கள் கோரிக்கைகளை அரசாங்கத்திற்குத் தெரிவிக்கிறார்கள். அவற்றை நிதி அமைச்சரே தற்காலிகமாக முடிவு செய்து, அப்பால் அங்கீகாரத்துக்காக அமைச்சர் அவை முன்பு வைக்கிறார்.

✠

கணக்கு முறையும் இரகசியமும்

வரவு செலவுத் திட்டத்தின் நோக்கங்கள் பல:— (1) வரப்போகும் ஆண்டில் பல விதங்களிலிருந்தும் கிடைக்கக் கூடிய வருமானத்தை மதிப்பிடுதல் (2) இந்தப் பணத்தையும் முந்தின ஆண்டின் கையிருப்பையும் ஒருங்கு சேர்த்தால், எதிர்பார்க்கப்படும் எல்லாச் செலவுகளுக்கும் ஈடுகட்டுமா என்பதை மதிப்பிடுதல் (3) வரவையும் செலவையும் சமன்படுத்த வரி விதிப்பை எந்த அளவுக்கு உயர்த்துவது அல்லது குறைப்பது என்பதை நிச்சயித்தல் ஆகியனவாகும்.

வரவு-செலவு திட்டத்தைச் சட்டசபையில் சமர்ப்பிக்கும் வரை, அதை ரகசியமாக வைத்திருப்பதின் முக்கிய நோக்கம் புதிய வரித் திட்டங்கள், பொது மக்களுக்குத் தெரியாமல் இருக்க வேண்டும் என்பதேயாகும். புதிய வரிகள் பல, பங்கு மார்க்கெட்டின் நிலையையும், அன்றாடத் தேவைப் பொருட்களின் விலைகளையும் பாதிக்கின்றன. அரசாங்கத்தின் புது வரி விதிப்பு விவரங்கள் வெளியாகுமானால், சமூக விரோத சக்திகள் பண்டங்களை முன் கூட்டியே பதுக்கி வைத்துக் கொள்ள ஏதுவாகும்.

முதல் வெற்றி முழுதும் வெற்றி

மகாராஷ்டிர மாநிலத்தின் உட்புறப் பகுதியில், பூனாவிலிருந்து சங்லிக்கு ரயிலில் செல்லும் எவரும், சன்னல் வழியாகச் சற்றே தம் பார்வையை வெளியே செலுத்தினால் போதும், அந்த வட்டாரத்தின் செல்வ வளத்தை உணர முடியும். ரயில் பாதையின் இரு பக்கங்களிலும், செழிப்பாக வளர்ந்து நிற்கும் கரும்புப் பயிரைக் காணலாம். அதோடு சற்றுத் தொலைவில் பார்த்தால், வான் நோக்கி மெல்லப் புகை எழுப்பிக் கொண்டிருக்கும் ஒரு தொழிற்சாலையையும், அங்கு சூரிய ஒளியில் பளபளக்கும் பிரமாண்ட இயந்திரங்கள் இயங்கிக் கொண்டிருப்பதையும் பார்க்க முடியும்.

சங்லி ஆறு ஆண்டுகளுக்கு முன் இருந்த நிலைமை வேறு; இன்றுள்ள நிலைமை வேறு. இந்த மாவட்ட மக்கள் தங்கள் வாழ்க்கை நிலையை உயர்த்திக் கொள்வதற்காக கூட்டுறவு இயக்க ரீதியிலும், சமுதாய நல அபிவிருத்தித் திட்டத்தைப் பயன்படுத்தியும், அரும்பாடுபட்டு வருகிறார்கள். வாழ்க்கைக்குரிய வருவாய்ச் சாதனமாக விவசாயத்தை மட்டும் நம்பியிருக்க அவர்கள் விரும்பவில்லை. நிலத்திலிருந்து பெறக்கூடிய வருமானம் அதிகரிக்க வேண்டுமானால், தாங்கள் உற்பத்தி செய்யும் விவசாயப் பொருளைக் கொண்டு, நவீன முறையில் வேறு பொருள் தயாரிக்க வேண்டும் என்பதையும், அதற்கான தொழிற்சாலையைத் தாங்களே சொந்தமாக நடத்த வேண்டும் என்பதையும் அவர்கள் உணர்ந்து கொண்டனர்.

எனவே, சங்லி விவசாயிகள் ஒன்று சேர்ந்து கூட்டுறவு சர்க்கரை ஆலை ஒன்றை நிறுவினர். இந்த ஆலையில் நாள் ஒன்றுக்கு 1,000 டன் கரும்பை ஆட்டி, சர்க்கரை உற்பத்தி செய்யலாம். ஆலை நிறுவப்பட்டதையொட்டி, வேறு பல பணிகள் சங்கிலித் தொடர்போல் ஆரம்பமாயின. ஆலைக்குப் போதுமான கரும்பு கிடைக்கும்படி செய்ய, கூட்டுறவு நீர்ப்பாசன சங்கங்கள் சுமார் 60 அமைக்கப்பட்டன. பம்பு செட்டு, மோட்டார் முதலிய சாதனங்கள், வாங்குதல், பாசனக் குழாய்கள் அமைத்தல் போன்ற செலவுகள் உள்பட, இச்சங்கங்கள் அமைக்க 90 லட்சம் ரூபாய் செலவாயிற்று. இவற்றின் பலனாக 23,000 ஏக்கர் நிலங்களுக்குப் பாசன வசதி கிடைத்தது. இவற்றில் 7,500 ஏக்கர் நிலங்கள் கரும்பு சாகுபடி செய்யப்படுபவை. இந்த இரைவைப் பாசனத்திற்கான மூலதனச் செலவு, ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 500 முதல் ரூ. 800 ஆகும். ஆனால் ஏக்கர் ஒன்றுக்கு வருடம் ரூ. 2,000 வருமானம் கிடைக்கிறது. நீர்ப்பாசன ஏற்பாடு திட்டங்களுக்கான செலவை சர்க்கரை ஆலை ஏற்கிறது. பாசனத்திற்கு தேவையான சிமெண்ட் குழாய்கள் கிடைப்பது கடினமாயிருந்தது. எனவே, குழாய்களைத் தயாரிப்பதற்கான சிறு தொழிற்சாலை அமைக்கப்பட்டது.

சர்க்கரை ஆலையையொட்டி உருவான சங்கிலித் தொடர்பான தொழில்களில் ஒன்று எரி ரசாயன உற்பத்திச்சாலை. இந்தப் பகுதியில் உள்ள மூன்று கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் ஒன்று சேர்ந்து இந்தத் தொழிற்சாலையை அமைத்தன. மூன்று ஆலைகளிலும் வெளிப்படும் சர்க்கரை வண்டல் பாகு முழுவதும் உபயோகிக்கப்பட்டு, 10 லட்சம் காலன் எரி சாராயம் உற்பத்தி செய்யப்படுகிறது. இந்த எரி சாராயத்தை அடிப்படைப் பொருளாகக் கொண்ட ரசாயன பொருட்கள் உற்பத்திச்சாலை ஒன்றை அமைக்கலாம் என்று இம்மாவட்டத்திலுள்ள கூட்டுறவுத் துறையினர் எதிர் பார்க்கின்றனர்.

சர்க்கரை ஆலையில் வெளிப்படும் இன்னொரு கழிவுப் பொருள் கரும்புச் சக்கை. இதை இப்போது எரிப்பதற்குரிய ஒரு பொருளாக உபயோகிக்கிறார்கள். அதற்குப் பதிலாக, கரும்புச் சக்கையிலிருந்து காகிதம் செய்ய முடியும். எனவே சங்லி, கோலாப்பூர், சதாரா ஆகிய மாவட்டங்களில் உள்ள நான்கு கூட்டுறவு சர்க்கரை ஆலைகள், தங்களது கரும்புச் சக்கை முழுவதையும் காகிதமாக மாற்றுவதற்கான காகித ஆலையை நிறுவ முடிவு செய்திருக்கின்றன. இந்த நான்கு சர்க்கரை ஆலைகளின் பிரதிநிதிகள் சமீபத்தில் 11 அயல் நாடுகளில் சுற்றுப்பயணம் செய்து காகிதத் தொழில் சம்பந்தமான பல அம்சங்களையும் ஆய்ந்தறிந்தனர்.

கரும்புச் சாகுபடியாளர்கள், தங்கள் நிலங்களுக்கு அவ்வப்போது புத்தம் புதியதாக நல்ல தரமுள்ள பிண்ணாக்குகள் வேண்டும் என விரும்பியதால், கூட்டுறவு ரீதியில் 30 எண்ணெய் மில்கள் நிறுவ உத்தேசிக்கப்பட்டு 10 மில்கள் கட்டி முடிக்கப்பட்டன. மிகுதி 20 மில்கள் சம்பந்தப்பட்ட கட்டுமான வேலை நடைபெற்று வருகிறது.

இந்த எண்ணெய் மில்கள், அந்தந்த கிராமங்களில் நிலமில்லாமல் இருக்கும் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கிறது. அதன் பலனாக, நகர்ப்புறங்களில் ஜன நெருக்கடி குறைகிறது. மேலும் கிராமங்களில் உற்பத்தியாகும் வேர்க்கடலையை எல்லாம் நகருக்குக் கொண்டுவருவது என்பது பெருஞ் சங்கடமான ஒன்று. ஆகையால், அந்தப் பிரச்னையைத் தவிர்க்க, மில்களை, வேர்க்கடலை அதிகமாக உற்பத்தியாகும் கிராமப் பகுதிகளிலேயே அமைக்க முடிவு செய்தனர். இவ்வாறு செய்வதால் கிராமப்புறங்களில் கூட்டுறவு இயக்கம் பரவவும் வழி ஏற்படுகிறது.

இந்த எண்ணெய் மில்களில் பங்குதாரர்களாயிருப்பவர்கள் அனைவரும் வேர்க்கடலை உற்பத்தியாளர்கள். அவரவருக்குச் சொந்தமான ஏக்கர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப, பங்குகளின் அளவும் நிர்ணயிக்கப்படுகிறது. இதையே வேறு விதமாகச் சொல்வதானல், ஒவ்வொரு உறுப்பினரும் தாங்கள் எடுத்துள்ள பங்குகளின் அளவுக்கு ஏற்ப வேர்க்கடலையை, மில்லுக்குச் சப்ளை செய்யவேண்டும். ஒவ்வொரு மில்லுடனும் மூன்று முதல் நான்கு ஆயிரம் ஏக்கர் நிலம் இணைக்கப்பட்டிருக்கிறது. இந்த மில்களில் கிடைக்கும் பிண்ணாக்கில் 8 சத விகித எண்ணெய் கலந்திருக்கும். அந்த எண்ணெய் சத்தையும் பிழிந்தெடுக்க (எல்லா மில்களுக்கும் பொதுவாக) ஒரு ஆலை அமைக்கப்பட்டிருக்கிறது. அங்கு தயாராகும் வரண்ட பிண்ணாக்கு (Deoil Cake) கரும்பு சாகுபடிக்கு மிகவும் ஏற்ற உரமாகும். இந்த ஆலை இப்போது முழு அளவில் வேலை செய்யவில்லை. காரணம், மொத்தம் உத்தேசிக்கப்பட்ட 30 எண்ணெய் மில்களில் ஏற்கனவே குறிப்பிட்டபடி 10 மில்கள்தான் இப்போது வேலை செய்யத் தொடங்கியிருக்கின்றன. மற்ற இருபதும் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன.

இந்தக் கூட்டுறவு எண்ணெய் மில்கள், வரண்ட பிண்ணாக்கு தயாரிக்கும் ஆலை முதலியவற்ருல் கரும்புச் சாகுபடியாளர்களுக்கு மிகவும் தேவையான பிண்ணாக்குத் தாராளமாகக் கிடைப்பதோடு, இந்த ஏற்பாட்டால் வேர்க்கடலை பயிரிடுபவர்களும் நன்மையடைகிருர்கள். ஏனெனில் அவர்களது பொருளுக்கு இப்போது நிச்சயமான மார்க்கெட் உண்டு. தனிப்பட்ட வியாபாரிகள் கையில் இருக்கும் வேர்க்கடலை மார்க்கெட் நிலவரம் அவ்வப்போது திடீரென ஏறுவதும் இறங்குவதுமாக இருக்கும். ஆகையால் சரக்கு வைத்திருக்கும் விவசாயிகள் விலை ஏறுமோ என்ற சபலத்திற்கும், திடீரென விழுமோ என்ற பயத்திற்கும் இடையே ஊசலாடுவார்கள். இப்போது அவ்வாறு ஊசலாடத் தேவையில்லை. கூட்டுறவு எண்ணெய் மில், ஒவ்வொரு ஆண்டும் வேர்க்கடலை விலையை நிர்ணயம் செய்து விடுகிறது—அந்த விலை அந்தப் பருவகாலம் முழுவதும் மாறுவதில்லை. எனவே இந்த 30 எண்ணெய் மில்களும், அவற்றிற்குப் பொதுவாக உள்ள வரண்ட பிண்ணாக்கு தயாரிப்பு ஆலையும் இந்த வட்டாரத்தில் வேர்க்கடலை உற்பத்தியாளர்

கிராம ஊழியர்களுக்கு விவசாயப் பட்டப் படிப்பு

பஞ்சாப் மாநிலத்தில் உள்ள கிராம ஊழியர்கள் (Village Level Workers) விவசாயப் பட்டப் படிப்பு பெற இப்போது வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. அவர்கள், பஞ்சாப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த விவசாயப் பட்டப் படிப்புக்காக [B.Sc. (Agriculture)] வகுப்பில் சேர்ந்து கல்வி பெறலாம். கிராம ஊழியர்களுக்கு, நேரடி அனுபவம் இருப்பதால், சில பாடங்கள் பயில்வதனின்றும் அவர்களுக்கு விலக்கு அளிக்கப்படுகிறது. இதனுல், கல்லூரிப் படிப்பு காலம் நான்காண்டிலிருந்து மூன்ருண்டாகக் குறைகிறது. இப்போதைக்கு 100 பேர்கள், லூதியாளுவில் 50 பேரும், ஹிஸாரில் 50 பேரும் கல்லூரியில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். பட்டப் படிப்பு பெற விரும்பும் கிராம ஊழியர்கள் மெட்ரிகுலேஷனில் தேர்வு பெற்றவர்களாகவும், 35 வயதுக்கு உட்பட்டவர்களாகவும் இருக்க வேண்டும். இந்த அடிப்படையில், யார் யாருக்கு இடம் தரலாம் என்ற சிபாரிசை அனுப்பும்படி, விவசாய உற்பத்திக்கான கமிஷனர் (Commissioner for Agricultural Production) கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிருர்.

இப்போது பஞ்சாப் மாநிலத்தில் வேலை பார்க்கும் 2,370 கிராம ஊழியர்களில் 21 பேர் பட்டதாரிகளாகவோ, இன்டர்மீடியட் தேர்வு பெற்றவர்களாகவோ இருக்கிருர்கள். சுமார் 400 பேர் மெட்ரிகுலேஷனுக்கு ஒரு வகுப்பு குறைந்த படிப்புள்ளவர்கள். மற்றவர்கள் மெட்ரிகுலேஷன் தேர்வு பெற்றவர்கள். இந்த கிராம ஊழியர்களின் கல்வித்தரத்தை, காலப்போக்கில் விவசாயப் பட்டப் படிப்புக்குச் சமமாக ஆக்குவதே நோக்கம்.

களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும். இந்தத் திட்டத்தின்கீழ் சுமார் 40 ஆயிரம் விவசாயக் குடும்பங்களால் வேர்க்கடலை பயிரிடப்படும் ஒரு லட்சத்து 20 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பயனடைகின்றன.

இந்த மாவட்டத்தில் கூட்டுறவுத் துறையைச் சேர்ந்த பிரமுகர்கள், வேர்க்கடலையுடன் சம்பந்தப்பட்ட வேறு சில தொழில்களை ஆரம்பிக்கவும் திட்டமிட்டு வருகின்றனர். வனஸ்பதி உற்பத்திச்சாலை, கிளிசரின் சோப் உற்பத்திச்சாலை, கோழித் தீவனங்கள் தயாரிப்புச் சாலை முதலியவற்றைத் தொடங்குவது அவர்கள் உத்தேசம்.

இப்படி ஒன்றையொட்டி ஒன்று என்ற முறையில் தொழில்களைத் தொடங்கும் சங்கிலித் தொடர் நீண்டு கொண்டே போகிறது. அதில் முக்கியமான ஒன்று, கூட்டுறவு நூற்பாலை நிறுவ தீவிர முயற்சி நடந்து வருவதாகும்.

கரும்பு வளமாக இருப்பதற்கு, அதை ஒரே நிலத்தில் தொடர்ந்து பயிர் செய்வதற்குப் பதிலாக, மத்தியில் கொஞ்சம் இடைவெளிக் காலம் விட்டு விட்டுப் பயிர் செய்வது விரும்பத்தக்கது. அத்தகைய இடைவெளிக் காலத்தில், அந்த நிலத்தில் பருத்தி சாகுபடி செய்வது பயனுள்ளதாகும். இவ்வகையில், கூட்டுறவு சர்க்கரை ஆலை, ஒரு ஆரம்ப முயற்சியில் இறங்கியிருக்கிறது. இப்போது சில ஏக்கர்களில் பருத்தி பயிரிடப்படுகிறது. ஆலை காட்டிய வழியில் இவ்வாறு மாற்றுப் பயிர் வைக்கும் முறை பரவி, விரைவில் 50 ஆயிரம் ஏக்கர்களில் பருத்தி சாகுபடி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. அந்த அளவுக்குப் பருத்தி பரவலாக விளையும்போது, அந்தப் பஞ்சை எல்லாம் நூலாக நூற்க 85 ஆயிரம் கதிர்கள் கொண்ட ஒரு நூற்பாலை தேவை. எனவே, பருத்தி உற்பத்தியாளர்களின் கூட்டு முயற்சியாக கூட்டுறவு நூற்பாலை நிறுவுவதற்காக அமைப்பு வேலை ஆரம்பமாகியிருக்கிறது.

சங்லி மாவட்ட விவசாய தொழில் முன்னேற்றப் பணிகள் அத்துடன் நின்றுவிடவில்லை. ஏற்கனவே குறிப்பிட்டபடி பல புதிய தொழில்கள் மேற்கொள்ளப்பட்டிருப்பதால் அவை சம்பந்தமாக பல இயந்திர சாதனங்களும் சிறு சிறு பாகங்களும், பழுது பார்க்கும் வசதிகளும் தேவைப்படுகின்றன. இந்தத் தேவையை அடிப்படையாகக் கொண்டு, கூட்டுறவு தொழில்பேட்டை ஒன்று பெரிய அளவில் உருவாகியிருக்கிறது. சர்க்கரை ஆலை, எரி சாராயத் தொழிற்சாலை, வரண்ட பிண்ணாக்குத் தயாரிப்புச்சாலை ஆகியவற்றிற்கு அருகில் அமைந்துள்ள தொழில்பேட்டையில் சுமார் 300 வகையுள்ள சிறு சிறு தொழில்கள் உள்ளன. அங்கு திருகு ஆணிகள், கம்பி வலை போன்ற பொருட்களும், பல ரகமான இயந்திர பாகங்களும் உற்பத்தி செய்யப்படுகின்றன. இந்தத் தொழிலகங்களில் வேலை செய்யும் கைவினைஞர்களுக்குப் பயிற்சிகள் அளிக்க, தொழில் பயிற்சி நிலையம் ஒன்று இருக்கிறது.

சங்லி மாவட்ட மக்களில் 85 சதவிகிதம் பேர் கிராமங்களில் வாழ்கிறார்கள். அவர்கள் அனைவரும் சீரான வாழ்வு வாழ, போதுமான விவசாய நிலம் இருக்கவில்லை. எனவே இந்த மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டுமானால், பல கிராமத் தொழில்களை ஆரம்பிக்க வேண்டும் என்பது உணரப்பட்டது. இந்த மாவட்ட கூட்டுறவுத் துறையில் பிரதம அங்கம் வகிக்கும் சர்க்கரை ஆலை, இத்தகைய முயற்சிகளுக்கு ஆரம்ப ஊக்கத்தைத் தந்தது. இப்போது, கூட்டுறவு கோழி வளர்ப்புச் சங்கம் அமைக்கப்பட்டிருக்கிறது. இதன் அலுவல் வரம்பில் சுமார் 8 கிராமங்கள் அடங்கும். இத்திட்டம், இரண்டு பகுதிகளைக் கொண்டது. ஒன்று மத்திய நிலையம். மற்றது, சுமார் 700 கோழிப் பண்ணைகள். ஒவ்வொரு பண்ணையிலும் சுமார் 1,000 பறவைகள் இருக்கும். மத்திய நிலையம் குஞ்சுகளை வளர்த்து, பண்ணைகளுக்கு விநியோகம் செய்யும். கோழி வளர்க்கும் விவசாயிகளுக்கு கோழித் தீவனமும் வழங்கப்படுகிறது. அதோடு பண்ணைகளிலிருந்து, முட்டைகள் சேகரித்து, விற்பனை செய்து தரும் பொறுப்பையும் மத்திய நிலையம் ஏற்கிறது. மேலும் ஒரு வகையான இன்சூரன்ஸ் முறையும் கையாளப்படுகிறது. அதன்படி ஒவ்வொரு கோழி வளர்ப்பாளரும் சிறு இன்சூரன்ஸ் கட்டணம் செலுத்த வேண்டும். அவர்களது பண்ணையில் ஒரு கோழி இறந்துவிட்டால், இன்சூரன்ஸ் திட்டத்தின்படி, புதிய கோழி இனமாகக் கிடைக்கிறது. சங்கத்தின் இத்தகைய உதவிகளோடு கோழிப் பண்ணை நடத்தும் ஒவ்வொரு குடும்பமும் மாதம் ரூ. 150 வரை சம்பாதிக்கிறது.

சங்லியில் இத்தகைய பொருளாதார முன்னேற்றம் மட்டுமல்லாமல் முதியோர் கல்வி போன்ற சமூக நல வேலைகளும் சிறப்பாக நடைபெறுகின்றன.

ஆக, சங்லி மாவட்டம் சமூகப் பொருளாதார முன்னேற்றப் பணிகள் பலவற்றிற்கு ஒரு சோதனைக்கூடமாகத் திகழ்கிறது எனலாம்.

நேபா பகுதி மக்களின் நேர்த்தி மிகு சாதனை

இந்திய நாட்டின் வடகிழக்கு எல்லையில், 'நேபா' என வழங்கப்படும் பகுதியில் வாழும் மக்கள் நாகரிக ஆதிக்கத்திற்கு உள்ளாகாதவர்கள்: நாட்டின் பிற பகுதிகளுடன் அதிகத் தொடர்பு இல்லாமல் தனித்து வாழ்பவர்கள். ஆனால், செல்வ வளத்தை நோக்கி முன்னேறுவதில், தங்கள் எதிர்கால சந்ததியார் நல்வாழ்வு வாழ்வதற்கான சூழ்நிலையை உருவாக்குவதில், நாட்டின் பிறபகுதிகளில், —சமவெளியிலோ, மலைப் பிரதேசத்திலோ—வாழும் மக்களுக்குத் தாங்கள் பின்தங்கியவர்களல்ல என்பதைச் செயல் முறையில் காட்டி வருகிறார்கள்.

இயற்கைச் சூழ்நிலையில் வாழும் அவர்கள் வாழ்க்கை முறை, இயல்பாகவே கூட்டுறவு ரீதியில் அமைந்திருக்கிறது. இயற்கையின் விபத்துக்கள், ஆபத்துக்கள், தீங்குகளை எதிர்த்துப் போராடுவதில் அவர்கள் ஒன்றுபட்டு நிற்கிறார்கள். எனவே, கூட்டாகச் செயல் புரிவது—கூட்டுறவு முறை—என்பது அவர்களது ரத்தத்தில் ஊறிய ஒன்றாக இருக்கிறது. ஆனால் தங்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக்கொள்ள, பொருளாதாரத் துறையில், இந்தக் கூட்டு முறையை அவர்கள் இதற்குமுன் ஒருபோதும் பயன்படுத்தியதில்லை. தேச சுதந்திரத்திற்குப் பிறகுதான், நேபா பகுதி மக்கள் மீது, முதன் முறையாக அரசாங்க கவனம் விழுந்தது. அந்த மக்களின் பொருளாதார நிலையை அபிவிருத்தி செய்ய, கூட்டுறவு இயக்கத்தை அங்கு பரப்ப ஏற்பாடு செய்யப்பட்டது.

இவ்வாறு, நேபாவில் ஆரம்பமான கூட்டுறவு இயக்கம் ஒரு குறிப்பிட்ட பிரதேசத்திற்கோ, மக்கள் பிரிவுக்கோ என்றிராமல், எல்லாப் பகுதிகளிலும் இன்று வியாபித்திருக்கிறது. வாஞ்சுக்கள், நாக்டோக்கள், கங்சாக்கள், நிஷிமிகள், டப்ளாக்கள், ஆதிகள், மான்பாக்கள், அபடானிகள் என்றுள்ள பல ஜாதியினரும், தங்கள் பொருளாதாரப் புனர் வாழ்வுக்கு ஒரு சாதனமாக கூட்டுறவு இயக்கத்தைப் பயன்படுத்தி வருகின்றனர்.

சீன ஆக்கிரமிப்பு

மக்கள் கூட்டு முயற்சியை பிரதிபலிக்கும் இந்த நிறுவனங்கள் நல்ல முறையில் முன்னேற்றம் அடைந்து கொண்டிருந்த நிலையில்தான் பிரளயம் போல் வந்தது சீன ஆக்கிரமிப்பு. அதன் விளைவாக நேபா பகுதியில் அமைதி வாழ்வு பெரிதும் பாதிக்கப்பட்டது. மக்களது வாழ்வு சீர்குலைந்தது. அவர்களது வீடுகள் சூறையாடப்பட்டன. கால்நடைகளை சீனர்கள் அடித்துச் சாப்பிட்டனர், கூட்டுறவு நிறுவனங்கள் கொள்ளையிடப்பட்டன, ஆக்கிரமிப்பாளர்களின் வெறியாட்டத்திற்குள்ளான கூட்டுறவு ஸ்டோரில் ஒரு மணி தானியங்கூட விட்டு வைக்கப்படவில்லை.

இந்த அளவுக்கு நாசம் விளைவித்துவிட்டுச் சீனர்கள் திரும்பியபோது, நேபாவின் பொருளாதாரமே சீர்குலைந்து போய் இருந்தது. எனினும், அங்குள்ள மக்கள் மன உறுதியை இழக்காமல், இரட்டிப்புத் தீவிரத்துடன் செயல்படத் தொடங்கி, தங்கள் கூட்டுறவு நிறுவனங்களை மீண்டும் புதுப்பித்தனர். எனவே எல்லா கூட்டுறவு ஸ்டோர்களும் பழையபடி இயங்கத் தொடங்கின, அங்கு முன்பைவிட, புதிது புதிதாக பல்வேறு பொருட்கள் விற்பனையும் ஆரம்பிக்கப்பட்டது. பிரதான கூட்டுறவு ஸ்டோர்களுக்குப் புதிதாகப் பல கிளைகள் திறக்கப்பட்டன.

ஆகையால் முன்பெல்லாம் நெடுந்தூரம் அசாம் சமவெளிப் பகுதிகளுக்குச் சென்று பொருட்கள் வாங்கி வந்து கொண்டிருந்த அந்தச் சிரமத்திலிருந்து மக்கள் விடுவிக்கப்பட்டு நிம்மதியடைந்துள்ளனர்.

போக்குவரத்து கூட்டுறவுகள்

அதிக போக்குவரத்து வசதி இல்லாதிருந்த நேபாவில், இப்போது கூட்டுறவு முறையில் போக்குவரத்து சர்வீசுகள் ஆரம்பமாகியுள்ளன. வடக்கு லட்சுமிப்பூர், கிமின், ரோயிங், சதியா ஆகிய இடங்களுக்கிடையே ஏற்கனவே பஸ் போக்குவரத்து இருக்கிறது. விரைவில் காமெங் மக்கள், தங்கள் சொந்த கூட்டுறவு பஸ் மூலம், போம்டி-லாவிலிருந்து டெஜ்பூருக்கு செல்லமுடியும்.

அத்துடன் அவர்கள் நிற்கவில்லை. நாகரீக நகர்ப்புறங்களில் உள்ளதுபோல், மக்களின் பண விவகாரங்களைக் கவனிக்கும் பாங்குகளைக்கூட, கூட்டுறவு முறையில் அமைத்திருக்கிறார்கள். இப்போது தபோரிஜோவில் ஒன்றும், யூலிங்கில் ஒன்றுமாக இரு பாங்குகள் வெற்றிகரமாக இயங்கி வருகின்றன.

நேபா பகுதி மக்கள் காட்டி வரும் இந்த உற்சாகத்திற்கேற்ப, கூட்டுறவு இயக்கத்தை மென்மேலும் பரப்புவதற்காக, நேபா நிர்வாகம் ரூ. 11·18 லட்சம் நிதியை 1963—64-ல் ஒதுக்கியது.

நேபா மக்கள் நாகரீகமற்றவர்கள், காட்டுமிராண்டிகள் என்றுகூடக் கருதப்படலாம். ஆனால் அவர்கள்தான் இன்று கூட்டுறவு பண்டகசாலை, கடன் வழங்கும் சங்கம், கூட்டுறவு பஸ் சர்வீஸ், பாங்கு முதலிய பலவற்றை ஏற்படுத்திச் செல்வ வள வாழ்வை நோக்கித் துரித நடைபோட்டு வருகிறார்கள். அவர்கள், தங்கள் நல்வாழ்வு இலட்சியத்தை அடைவார்கள் என்பதில் ஐயமில்லை.

பாலேம் : சுயமுயற்சியின் சின்னம்

பன்னெடுங்காலமாக வறுமையில் வாடி வந்த ஒரு கிராமம்—திடீரென செல்வ வளப் பாதையை நோக்கி நடை போடத்தொடங்கிய கதையை விவரிக்கிறது, இக் கட்டுரை.

ஆந்திர மாநிலம், மாபூப் நகர் மாவட்ட மத்தியில் அமைந்துள்ள பிஜனப்பள்ளி பஞ்சாயத்து சமிதியைச் சேர்ந்தது பாலேம் கிராமம். அங்கு, முதல் கிராமப் பஞ்சாயத்து 1959-ல்தான் ஆரம்பமாயிற்று. ஆனால் பஞ்சாயத்து ஆட்சி முறையில் உள்ளூர் மக்கள் உற்சாகமான ஈடுபாடு கொண்டதன் பலனாக மூன்றே ஆண்டுகளுக்குள் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டது. 1961-62-ல் மாநிலத்திலேயே மிகச் சிறந்த பஞ்சாயத்து எனத் தேர்ந்தெடுக்கப்பட்ட பாலேம், அரசாங்கத்திடம் இருந்து ரூ. 5,000 ரொக்கப் பரிசைப் பெற்றது. இவ்வளவுக்கும் காரணம், சுய முயற்சி மூலம் தங்கள் வாழ்க்கை நிலையை உயர்த்திக்கொள்ள முடியும் என அவ்வூர் மக்கள் உறுதி பூண்டு, அதற்கேற்பச் செயல்படத் தொடங்கியதுதான்.

துன்பம், துன்பம்—அதைத் தவிர வேறொன்றுமில்லை என்பதாக வரண்ட வாழ்வு வாழ்ந்துகொண்டிருந்த பழைய பயங்கர நாட்களை, இன்று எண்ணிப் பார்க்கவும் பாலேம் மக்கள் விரும்பவில்லை. பெரும்பாலும் விவசாயிகளான இந்த மக்கள், அப்போது வாழ்க்கையின் அத்தியாவசியத்தேவைகளைப் பெறுவதற்கே அரும்பாடுபட்டு வந்தனர். அன்று பள்ளிக்கூடம் எதுவும் இருக்கவில்லை. கல்வியறிவின்மை தாண்டவமாடிற்று. பாலேம் கிராமம், கோடை காலத்தில்கூட பார்க்கச் சகிக்காது. சந்துபோன்ற கிராமத்தெருக்கள், மாட்டு வண்டிகளின் போக்குவரத்தால் புழுதியாகி மேடும் பள்ளமுமாகக் கிடக்கும். சுற்றுச்சுவர் இல்லாத தரைக் கிணறுகளில், சுற்றுவட்டாரத்திலிருந்து வடிந்து வரும் வண்டலும் கரைசலுமான அழுக்குத் தண்ணீர் சேர்ந்துவிடும். சுத்தமில்லாத இத் தண்ணீரை உபயோகப்படுத்திய கிராம மக்களிடையே காலரா நோய் பரவிற்று. மலேரியாவால் பலர் மாண்டனர்.

நிலைமை மாறியது

இத்தகைய தோற்றத்துடன் இருந்த பாலேம் கிராமத்தில், அதிர்ஷ்டவசமாக, சமூக சேவையில் ஆர்வமிக்க ஊழியர்கள் சிலர், கிராம அபிவிருத்திக் காரியங்களில் முழு மூச்சுடன் இறங்கினர். தன்னலமற்ற அந்த ஊழியர்களுக்கு திரு. சுப்ரமணியம் என்பவர் தலைவராக விளங்கினார். அவர்தான் கிராம மக்களுக்கு புத்துணர்வூட்டினார். "நாம்தான் துன்ப வாழ்வு வாழ்ந்து வருகிறோம் என்றால், நம் எதிர்காலச் சந்ததியாராவது நல்வாழ்வு வாழ நாம் வழி செய்தாக வேண்டும். இதே நிலை என்றும் நீடிக்கவிடக்கூடாது. நாம் கடின உழைப்பில் ஈடுபட்டால், திட சித்தத்துடன் பாடுபட்டால், நாளைய இக்கிராம மக்களாகிய நம் குழந்தைகள், நன்மை அடைவது திண்ணம். ஆக அவர்கள் நாளை நமக்கு நன்றி செலுத்தும்படியாக நாம் இன்று நடந்துகொள்ளவேண்டும்" என்று உற்சாகமூட்டினார். அவரது முயற்சி வீண்போகவில்லை.

பாலேம் கிராமத்தில், பிறகு என்னென்ன காரியங்கள், சாதனைகள் நடைபெற்றிருக்கின்றன என்பதற்குக் கிராமத்தின் இன்றைய தோற்றமே சாட்சியம் கூறுகிறது. உயர்நிலைப்பள்ளி, சாதிமத பேதமற்ற முறையில் நடத்தப்பெறும் மாணவர் விடுதி, பிரதம சுகாதார நிலையம், விஞ்ஞானக் கல்லூரி, ஸ்ரீவெங்கடேசுவரர் ஆலயம் முதலியவை கூட்டு மனித முயற்சி, தன்னலமற்ற தியாகம், நாளை—இந்தியாவை உருவாக்கும் பொறுப்பு பற்றி விழிப்புணர்வு ஆகியவற்றிற்கு ஒரு சில உதாரணங்களாக நின்று காட்சியளிக்கின்றன.

சுகாதார நிலையம்

கிராமத்தில் பிரதம சுகாதார நிலையம் ஆரம்பிப்பது பற்றி 1959-ல் யோசனை எழுந்தபோது உள்ளூர் மக்கள் ரூ. 10,000 ரொக்கமும், இரண்டு ஏக்கர் நிலமும் நன்கொடையாக அளித்தனர். இதைக்கொண்டு கட்டடம் எழுப்பும் வேலை நடைபெற்றுக்கொண்டிருக்கையிலேயே வாடகையில்லாத வேறொரு கட்டிடத்தில் 1959 நவம்பரில் சுகாதார நிலையம் வேலை செய்யத் தொடங்கியது. இப்போது அங்குள்ள கட்டிடம் ரூ. 25,000 செலவில் கட்டப்

பெற்றதாகும். ஆறு படுக்கைகள் கொண்ட இந்த நிலையத்தில், பிரசவ வைத்தியத்திற்காக மூன்று படுக்கைகள் ஒதுக்கப்பட்டுள்ளன. பிறகு காச நோய்ப் பிரிவு ஒன்று அமைப்பதற்காக கிராம மக்கள் ஒரு ஏக்கர் நிலமும், ரூ. 2,000 பணமும் தந்தனர். இந்த நிலையத்தின் இன்னொரு முக்கிய மான அம்சம் இங்கு குடும்பக் கட்டுப்பாடு பிரச்சாரம் வெற்றிகரமாக இயங்கி வருவதாகும்.

பிரதம சுகாதார நிலையம் ஆரம்பிக்கப்பட்ட அதே ஆண்டில், ஆரம்பப் பள்ளி ஒன்றைக் கட்டும் வேலையும் ஆரம்பமாயிற்று. இதற்கும் பொது மக்கள் மனமுவந்து உதவி அளித்தனர். இதற்காக ரூ. 6,800 ரொக்கமும் இரண்டு ஏக்கர் நிலமும் நன்கொடை தந்தனர். இந்தப் பள்ளி பிறகு நடுத்தரப் பள்ளியாகி, அடுத்து 1961-62ல் உயர்நிலைப் பள்ளியாகவும் வளர்ச்சியடைந்தது. இந்தப்பள்ளி அரசாங்க மானியத்துடன் தனியார் நிர்வாகத்தில் நடந்து வருகிறது. எனினும் பள்ளிக்கூடப் பராமரிப்புச் செலவிற்காக, கிராமப் பஞ்சாயத்து ஆண்டுதோறும் ரூ. 9,000 வழங்கி வருகிறது.

அதே 1959-ம் ஆண்டில், கிராமத்தில் இரண்டு கிணறுகள் வெட்டப்பட்டன. ஒன்று ஹரிஜனங்களுக்காக; மற்றது உயர்நிலைப் பள்ளிக்காக. பள்ளிக்கூடக் கிணற்றுக்கு மோட்டார் பம்பு செட் பொருத்தப்பட்டு அதன் மூலம் மேல்நிலை தண்ணீர் தொட்டி நிரப்பப்படுகிறது. இங்கிருந்த பள்ளிக்கூடம், ஆஸ்பத்திரி, பக்கத்திலுள்ள சில வீடுகள் ஆகியவற்றிற்குத் தண்ணீர் வழங்கப்படுகிறது.

சுகாதார நிலையம், பள்ளிக்கூடம் முதலியவற்றைப் போன்றே, மாணவர் விடுதியொன்றும் பொதுமக்களின் சுய முயற்சியால் உருவாயிற்று. ஹரிஜன மாணவர்களும் பிற்பட்ட வகுப்பு மாணவர்களுமாக 100 பேர் இங்கு இருக்கிறார்கள். விடுதிக்கு ஆண்டுதோறும் ரூ. 22,000 செலவாகிறது. இதில் ரூ. 6,000 அரசாங்க மானியமாகக் கிடைக்கிறது. மிச்ச செலவை மக்கள்தான் ஏற்கிறார்கள். பஞ்சாயத்தின் கல்வி வளர்ச்சிக் குழு இந்த விடுதியை நடத்துகிறது.

விவசாயிகள் சங்கம்

விவசாயிகள் சங்கம் ஒன்று இங்கு இயங்கி வருகிறது. ரொக்கக் கையிருப்பாக ரூ. 1,700 அதனிடம் இருக்கிறது. இச்சங்கம் எடுத்துக்கொண்ட முயற்சிகளின் பலனாக இப்போது 460 ஏக்கர் நிலத்தில் ஜப்பானிய முறை சாகுபடி நடந்துவருகிறது. 3000 கிளிரிசிடியா செடிகள் வளர்க்கப்பட்டு வருகின்றன. அரசாங்க உதவி மானியத்துடன் 6 கிணறுகள் எடுக்கவும், 15 மின்சார பம்பு செட்டுகள் அமைக்கவும் இச்சங்கம் உறுதுணை புரிந்தது. விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படும் ரசாயன உரங்களுக்கான கிடங்கு ஒன்று 1961-ல் நிர்மாணிக்கப்பட்டது.

இத்தகைய முயற்சிகளினால் நல்ல பலன்கள் விளைந்திருக்கின்றன. திருந்திய விவசாய முறைகளைப் பின்பற்றுவதில், இன்று பாலேம் கிராமந்தான் இந்த பிஜ்னு பள்ளி அபிவிருத்தி வட்டாரத்திலேயே முதலிடம் வகிக்கிறது. இக்கிராமத்தில் சராசரி நெல் மாகூல் விகிதம் ஏக்கர் ஒன்றுக்கு 2,400 ராத்தல்களாக உயர்ந்திருக்கிறது.

பூசணிக்காய் அளவில் கத்தரிக்காய்

பீகாரில் உள்ள சிந்திரி ரசாயன உரத் தொழிற்சாலையில் உரத்தின் வளத்தை அறிவதற்காக பரிசோதனை விவசாயப் பண்ணை ஒன்று இருக்கிறது. அங்கு கத்திரி, உருளை, தக்காளி போன்ற காய்கறிகள் நல்ல செழுமையுடன் வளர்கின்றன. ஒவ்வொன்றும் பிரம்மாண்ட அளவில் இருக்கின்றன. உதாரணமாக, கத்தரிக்காய்களை எடுத்துக்கொண்டால், ஒரு பையில் மூன்று தான் அடங்கும் — அந்த அளவுக்குப் பெரிதாய் இருக்கின்றன. இந்தப் பண்ணையில் நெல்லும் சாகுபடி செய்யப்படுகிறது. அவ்வாறு செய்ததில் ஏக்கர் ஒன்றுக்கு 12·4 மணங்கு மாகூல் கிடைத்தது. பீகார் மாநிலத்தில் நெல் மாகூலில் இது தான் பெரிய சாதனை என்பது குறிப்பிடத்தக்கது.

மக்களிடையே தெய்வபக்தியை வளர்ப்பதற்காக ரூ. 15,000 செலவில் ஸ்ரீ வெங்கடேசுவரர் ஆலயம் நிர்மாணிக்கப்பட்டது. இப்போது பாலேம், பக்தர்களுக்குரிய ஒரு யாத்திரை ஸ்தலமாக விளங்கி வருகிறது. இந்த யாத்திரிகர்களுக்காக தரும சத்திரம் ஒன்று கட்டப்பட்டிருக்கிறது. 1963-ல் நடைபெற்ற ஒரு திருவிழாவிற்கு 30 ஆயிரம் பேர் வந்திருந்தனர்.

செல்வ வளத்துடன், தெய்வ மணம் கமழும் பாலேம், பூலோகத்தில் ஒரு சிறு 'சொர்க்கம்' என்று சொன்னால் அது மிகையாகாது.



நேதாஜி சுபாஷ் சந்திர போஸ்

(திரு. எ. கலைமுகிலன், சென்னை–14)

அன்னையின் அடிமை விலங்கொடிக்க, ஆர்ப்பரித்து எழுந்து, போர்முரசு கொட்டிய தியாக சிலர்களின் பட்டியலிலே முதல் இடம் பெறுபவர், நேதாஜி சுபாஷ் சந்திர போஸ். அஞ்சா நெஞ்சன்—சுதந்திரக் கனல்—வீரத்தின் விளைநிலம்—வங்கம் தந்த சிங்கம்—சுபாஷ் சந்திர போஸின் தியாகம், பாரதம் உள்ளளவும் நின்று நிலைத்து நிற்கும். மாசுமருவற்ற அந்த மாணிக்கத்தின்—ஒப்புயர்வற்ற அந்தப் போராட்ட வீரனின்—வீர வரலாறு, தியாகத்தீயிலே புடம் போட்டு எடுத்த அந்த வீர காதை, இந்த நாட்டின் சுதந்திரப் போராட்ட வரலாற்றிலே, பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியதாகும்.

இந்திய தேசிய வரலாற்றில், சுதந்திரப் போராட்டத் தலைவர்கள் வரிசையில் தனித்து நிற்பவர் நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் அவர்கள். நாட்டின் விடுதலைக்கு அவர் வகுத்த போராட்ட முறையே தனியானது, மற்ற தலைவர்களின் கருத்துக்கு முற்றிலும் மாறுபட்டது. நேதாஜியின் எண்ணத்தில் பழுது சொல்ல முடியாது. அவர் வேண்டி நின்றதும் சுதந்திரந்தான்; அதிலும் அச்சுதந்திரம் விரைவாக வந்து சேர வேண்டும் என விரும்பினார். பொறுமை காட்ட அவரால் இயலவில்லை. பலாத்கார அந்நிய ஆட்சியை ஒழிக்க, பலாத்கார எதிர்ப்பணியைத் திரட்டுவதே வழி என்பது அவரது வாதம்—அவர் வகுத்துக்கொண்ட செயல் முறை.

துடிப்புள்ள காளை—அஞ்சாமையே உருக்கொண்ட அடலேறு

நேதாஜியின் இந்தப் போக்குக்கெல்லாம் காரணம், அவர் தமது இளம் வயது முதற்கொண்டே துடிப்பு மிக்கவராகவும், எதிலும் 'வெட்டு ஒன்று துண்டு இரண்டென' முடிவெடுப்பவராகவும் விளங்கியதுதான். அவரது இந்த இயல்பினை, அவருடைய வாலிபப் பருவ நிகழ்ச்சிகள் நன்கு புலப்படுத்துகின்றன.

சுபாஷ் போஸ், கல்லூரியில் (எப். ஏ. வகுப்பில்) படித்துக் கொண்டிருந்த சமயம், அவரது உள்ளம் ஆன்மீகத் துறையில் ஈடுபாடு கொள்ளத் தொடங்கியது. கல்வியில் கவனம் மங்கியது. துறவறம் பூண்டு, ஆன்மீகப் பணி புரிய அவாவுற்றார். எனவே, ஒருவருக்கும் தெரியாமல் வீட்டை விட்டு வெளியேறினார். தக்கதொரு குருவைத் தேடி அலைந்தார். ஆனால் அவர் சந்திக்க நேரிட்ட சந்நியாசிகள் எல்லாம் சமுதாயத்தை ஏமாற்றும் எத்தர்களாக, கபட வேடதாரிகளாக இருக்கக் கண்டார். மனம் முறிந்தது, வீடு திரும்பி, மறுபடியும் கல்லூரிப் படிப்பைத் தொடர்ந்தார்.

பஞ்சாப் படுகொலை

1919 பஞ்சாப் படுகொலை செய்தி கேட்டு நாடே குமுறியது. நாடு முழுவதும் தேசியக் கனல் கொழுந்து விட்டெரிந்தது. சுபாஷ் போஸின்

உள்ளம் தேசிய போராட்டத்தின் பால் ஈர்க்கப் பட்டது. மகனின் வாழ்க்கைப் பாதை இனி எப்படித் திரும்புமோ என அஞ்சிய தந்தை, சுபாஷ் போஸை ஐ. ஸி. எஸ். படிப்புக்காக லண்டனுக்கு அனுப்பி வைத்தார். ஆனால் மகனின் இதயத்தில் ஆழப்பதிந்து விட்ட தேசிய உணர்வை அவரால் அகற்ற இயலுமா?

வீர முழக்கம்—தியாகத்தின் சிகரம்

1920-ம் ஆண்டு, ஆகஸ்டு திங்கள் காந்தியடிகள் ஒத்துழையாமை இயக்கத்தைத் தொடங்கினார். அதன் காரணமாக மக்கள்தம் உணர்ச்சி அலை கள் ஒன்று திரண்டு பேருருக்கொண்டன. அவ் வெழுச்சி சுபாஷின் இதயத்தில் ஆழப்பதிந்தது, எனவே, ஐ.ஸி.எஸ். தேர்வில் வெற்றி பெற்றதும் தமது பட்டத்தைத் துறந்தார், "எனது தேசம் ஒரு பக்கம். ஆங்கில அரசு ஒரு பக்கம். இரண்டுக்கும் நான் தொண்டு புரிவது எப்படி முடியும்? என் உயிரை விட, வாழ்வை விட எனக்குச் சிறந்தது என் தாயகமே. ஆகவே, நான் பட்டத்தைத் துறந்தேன். எக்காரணத்திற்காகவும் எனது குறிக்கோளைக் கைவிட எனக்கு எண்ணம் இல்லை" என முழங்கினார்

சீமையிலேயே ஐ.ஸி.எஸ். பட்டத்தைத் துறந்து விட்டு, 1921-ம் ஆண்டு பம்பாய் வந்து சேர்ந்தார். காந்தியடிகளையும் மற்ற தலைவர்களையும் சந்தித்து உரையாடிய சுபாஷ், அரசியலில்—தேசிய இயக்கத்தில் முழுமையாக ஈடுபடத் தொடங்கினார்.

அரசியலில் தீவிரமாக ஈடுபட்டதனாலும், அதில் கடுமையாக உழைத்தமையாலும் சுபாஷின் உடல் நிலை பாதிக்கப்பட்டது. எனவே, அவர் அயல் நாடு களுக்குச் சென்று சிகிச்சை பெற்றுக்கொண்டிருந் தார். அப்போது (1938) ஹரிபுராவில் 51-வது காங்கிரஸ் கூடுவதாக இருந்தது. அதன் தலைமை தாங்க சுபாஷ் அழைக்கப்பட்டார். சுபாஷும் இந்தியா வந்தடைந்தார். முறையே 1938, 1939-ம் வருடத்திய காங்கிரஸ் மகாசபைக்கு சுபாஷே தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

மகாத்மாவுடன் கருத்து வேறுபாடு

பின்னர், காந்தியடிகளுக்கும் சுபாஷிற்கும் ஆரம்ப முதலே இருந்து வந்த கருத்து வேறுபாடு முற்றியது, அதன் விளைவாக, "முன்னேற்றக் கட்சியை" சுபாஷ் ஆரம்பித்தார். இரண் டாவது உலகப்போரைப் பயன்படுத்தி, இந்தியாவின் விடுதலையை நிர்ணயிக்கத் தீர்மானித் தார். அதற்காக சட்ட மறுப்புப் போரைத் தீவிர மாக்க வேண்டும் என்று கூறினார் தமது கருத்தை காந்தியடிகளிடம் வெளியிட்டார், அடிகளார் அதை ஏற்கவில்லை. எனவே, சுபாஷ் வேறு ஒரு வழி காணத் தலைப்பட்டார். ஜெர்மன், இத்தாலி, ஜப்பான் ஆகிய நாடுகளின் துணையுடன் படை திரட்டி, இந்தியாவில் புகுந்து, அந்நிய ஆதிக்கத்தி லிருந்து நாட்டை விடுவிக்கக் கருதினார். வெளி நாடு செல்லும் திட்டத்திற்குத் தம்மைத் தயார் படுத்திக்கொள்ளத் தொடங்கினார்.

தமக்கு உடல்நிலை கெட்டு விட்டதாக உற்றார் உறவினர்க்கு அறிவித்தார். எனினும் யாரும் தம்மைக் காணக்கூடாது என்று கண்டிப்பாக உத்தரவிட்டு விட்டுத் தனிமையில் இருந்தார். இப்படி சில காலம் தங்கியிருந்ததால் நன்கு தாடி யும் மீசையும் வளர்ந்தன. அது சுபாஷ் புறப்படு வதற்கு நல்வாய்ப்பாயமைந்தது.

தாயகத்தை விட்டுப் புறப்பட்டார்

1941-ம் ஆண்டு ஜனவரி 15-ம் நாள் இரவு 8 மணி அளவில் முகம்மதிய மௌல்வியைப் போல் உடை உடுத்திக்கொண்டு கிளம்பினார். முன்னேற் பாடாக காத்துக்கொண்டிருந்த காரில், இரவோடு இரவாக, கல்கத்தாவில் இருந்து 40 மைல் தூரத்தில் இருந்த ரயில்வேஸ்டேஷனை அடைந்தார். இரயில் மூலம் பெஷாவர் நகரை நோக்கிப் பயண மானார் ஜெயதீன் என்ற மாற்றுப் பெயரில்.

பெஷாவர் நகரில் இரண்டு தினங்கள் தங்கி பின், தம் நண்பர்கள் சிலருடன் காபூலுக்குச் சென்றார்.

மயிர் கூச்செரியும் சம்பவங்கள்

அங்கிருந்து, காபூல் நதியைக் கடந்து ஆப்கான் எல்லையை அடைந்தார். அங்கிருந்து லாரி ஒன்றில் இரவு முழுதும பிரயாணம் செய்து பட்கார் என்னும் இடத்தை அடைந்தார். அங்கு, அவர் தம் பிரயாணச் சீட்டு பரிசோதனைக்குட்பட்டது. "எதற்காக இங்கு பிரயாணம் செய்கிறீர்கள்?" என்று பரிசோதகர் கேட்டார். அதற்கு, "ஜெயதீன் என் மூத்த சகோதரர். இவருக்குக் காது கேட்காது, வாயும் பேசாது. சாஹி சாகிபு என்னும் மசூதிக்கு யாத்திரை நிமித்தம் இவரை அழைத்துப் போகிறேன். நாங்கள் எல்லைப்புறப் பிரதேசத்தில் வசிப்பவர்கள்" என்று பதிலுரைத்து தம்மிடம் இருந்த அறிமுகக் கடிதத்தைக் அவர்களுக்குக் காட்டினார், அவருடன் வந்த ரஹ்மத்கான். அந்தக் கடிதத்தைக் கண்டதும் தக்க மரியாதை காட்டி, வேண்டிய உதவிகளைச் செய்தனர், அப் பரிசோதகர்கள்.

சுபாஷ் அங்கு தங்கியிருந்தபோது, ருஷ்யா, இத்தாலி நாட்டுத் தூதுவர்களின் உதவியைக் கோரி கடிதம் எழுதினார். உடனே எவ்வித பதிலும் அவருக்குக் கிடைக்கவில்லை. சில நாட்கள் கழித்து, 1941 மார்ச்சு மாதம் 16-ம் தேதி, இத்தாலியத் தூதுவரிடமிருந்து "18-ம் தேதி புறப்படுவதற்கு ஏற்ற நாள்" என்று குறிப்பிட்டுக் கடிதம் வந்தது. அதைத் தொடர்ந்து. அத்தூதுவரின் மனைவியார் 17-ம் தேதியன்று வந்து சுபாஷை

அழைத்துப் போனார். அன்று இரவை அவர்தம் இல்லத்திலேயே கழித்து விட்டு, மறுநாள் காலை பெர்லின் நோக்கிப் பயணமானார் சுபாஷ். அவருடன் ஓர் இத்தாலியரும், ஜெர்மானியரும் இருந்தனர். சுபாஷ் தம்முடைய பெயரை காரண் டைன் என்று அப்போது மாற்றிக்கொண்டார்.

ரஷ்ய எல்லையை அடைந்ததும் சுபாஷின் நண்பர்கள் இந்தியாவுக்குத் திரும்பி விட்டனர். ரஹ்மத் கான் என்ற பெயரில் சுபாஷுடன் சென்றவரும் ஓர் இந்துவேயாகும்.

மார்ச் மாதம் 27-ம் தேதி சுபாஷ் மாஸ்கோவை அடைந்தார். மறுநாள் அங்கிருந்து பெர்லினுக்குக் கிளம்பினார். அவர் பெர்லினை அடைந்ததும்; ஹிட்லர் தக்க மரியாதைகளுடன் அவரை வரவேற்று, விருந்தளித்து, அளவளாவினார்.

சுபாஷ் அங்கு தங்கியிருந்தபோது ஜெர்மன், இத்தாலி, ஜப்பான் ஆகிய நாடுகளுடன் இந்திய விடுதலைப் போருக்கான ஒப்பந்தம் ஒன்றினைச் செய்து கொண்டார். இரண்டு ஆண்டுகள் அங்கு தங்கி, தமது நோக்கத்தை அறிக்கைகள், கட்டுரைகள், சொற்பொழிவுகள் மூலம் வெளிப் படுத்தினார். அதன் மூலம் தமக்கு ஆதரவு திரட்டி, ''இந்திய சுதந்திரச் சங்கம்'' ஒன்றை அங்கே நிறுவினார். சுதந்திரப் படையொன்றும் திரட்டினார்.

அதன்பின் ஜப்பானின் தலைநகரான டோக்கியோ சென்று, தமது கருத்தை வெளிப்படுத்தி, அங்கும் ஆதரவு திரட்டினார். அங்கிருந்து சிங்கப்பூர் சென்றார். அங்கும் தமக்குப்போதிய ஆதரவைத் தேடிக்கொண்டார். சில மாதங்களுக்குள் ''தேசியச் சேனை'' என்ற பெயரில் இரண்டு லட்சம் வீரர்களைத் திரட்டி, போர் புரிவதற்கான சூழ்நிலையை எதிர்நோக்கிக் கொண்டிருந்தார்.

சுதந்திர வேள்வி—அடிமை விலங்கொடிய . . .

தேசியச் சேனையைத் திரட்டியதுடன், ஆங்கில ஆட்சியை எதிர்த்து 1943 அக்டோபரில் ''இந்தியச் சுதந்திர அரசு'' ஒன்றைத் தோற்றுவித்தார். அந்த அரசின் பிரதமர், யுத்த, அயல்நாட்டு, போக்குவரத்து மந்திரி பதவிகளை ஏற்று தேசியச் சேனையின் சேனாதிபதியாகவும் சுபாஷ் இருந்தார். அரசின் காரியாலயம் ஆரம்பத்தில் சிங்கப்பூரிலும், தற்காலிகமாக இரங்கூனுக்கும் மாற்றப்பட்டது. ஜப்பான், தாம் கைப்பற்றி இருந்த அந்தமான் நிக்கோபார் தீவுகளை அச் சுதந்திர அரசுக்குத் தந்துதவி, போதிய ஆதரவு கொடுத்தது.

அரசின் பண உதவிக்காக ''ஆஸாத் பாங்க்'' ஏற்படுத்தப்பட்டது. ஒரு கோடீஸ்வரர் அதற்கு 50 லட்சம் தந்தார். 1944 ஜூலையில் பாங்கின் மூலதனம் 1 கோடி 60 இலட்சமாயிற்று. நாணயங்கள், கரன்சிகள் ஆகியவற்றை அரசே சொந்தமாக அச்சிடத் தொடங்கியது. 1945-ல் பாங்கின் மூலதனம் 35 கோடியாயிற்று. சுபாஷ், தமக்குப் போடப்பட்ட மாலைகளை ஏலத்தில் விட்டார். கிடைத்த தொகையை பாங்கிற்கு அனுப்பினார். ஒரு சமயம் ரூ. 12 இலட்சத்துக்கு மாலையொன்று ஏலம் போயிற்று!

சுபாஷின் தேசியச் சேனை, 1944 மார்ச் மாதம் இந்திய எல்லைக்குள் புகுந்தது. நாகமலைப் பிரதேசத்தின் தலைநகரான கோஹிமாவையும், மணிபுரா சமஸ்தானத்தின் தலைநகரான இம்பால் நகரையும் குறிகொண்டு படையினர் முன்னேறினர். இம்பால் பள்ளத்தாக்கைக் கடந்து, விஷ்ணுபுரத்தை வெற்றி கண்டனர். ஆனால், சூழ்நிலை சூறையாடத் தொடங்கிற்று. பெருமழை விடாது பெய்து தேசியச் சேனையைத் திணறடித்தது.

அதே சமயத்தில் அமெரிக்காவும் பிரிட்டனும் சேர்ந்து, ஜெர்மன், ஜப்பான் நாடுகளின் மீது போர் தொடுத்தன. எனவே, சுதந்திரச் சேனைக்கு ஜெர்மன், ஜப்பான் ஆகிய நாடுகளின் உதவி தடைப்பட்டது. ஜப்பானும் ஜெர்மனும் தோல்வியுற்று ஓடத் தொடங்கின. அதனால், தேசியச் சேனைக்குக் கிடைத்து வந்த உணவு, உடை ஏதும் கிடைக்க வழியில்லாது போயிற்று. இச்சூழ்நிலையும், இயற்கை கோளாறும் தேசியச் சேனையைப் பின் வாங்கச் செய்தன.

தொடர்ந்து ஒன்றரை ஆண்டுகளாய் நடந்து கொண்டிருந்த போர்—சுதந்திரப் போர் நிறுத்தப் பட்டது. வேதனையோடு தேசியச் சேனை பின் வாங்கியது. சுபாஷ் தொடுத்த முதல் போர் வெற்றிக்கிடையே தோல்வியுடன் முடிந்தது.

போரின் முடிவு கண்டு மனமுடைந்தார் சுபாஷ். எனினும், தமது எண்ணத்தை நிறைவேற்ற சுதந்திரக்கொடியை இந்திய மண்ணில் பறக்கவிட, மீண்டும் டோக்கியோ நோக்கிக் கிளம்பினார். 1944 ஆகஸ்டு 16-ம் நாள் சிங்கப்பூரில் இருந்து அவர் புறப்பட்டார்.

ஆனால், அந்தத் துரதிர்ஷ்டம் பிடித்த விமானம், அன்று பகல் இரண்டு மணிக்கு விபத்துக்குள்ளானதாக அறிவிக்கப்பட்டது. சுதந்திரக் கனல்—விடுதலை வேங்கை—வீறு கொண்டெழுந்த தீரன் சுபாஷ் விபத்துக்குள்ளாகி ஜப்பானிய மருத்துவ மனையொன்றில் சேர்க்கப்பட்டு, சிகிச்சையளிக்கப் பட்டும் பயனின்றி, விபத்துக்குள்ளான அன்றைய நள்ளிரவிலேயே கண் மூடி விட்டார் என்ற வேதனைச் செய்தியும் அத்துடன் அறிவிக்கப்பட்டது.

ஆம், சுதந்திரச் சிற்பி மறைந்தார்! இந்திய விடுதலைப்பிழம்பு அணைந்தது!!

"தன்வினை தன்னைச் சுடும்"

(திரு இரா. சங்கரசுப்பு, கிராமசேவக், நீரேத்தான் கிராமம், டி. வாடிப்பட்டி, மதுரை மாவட்டம்.)

> "தன்வினை தன்னைச் சுடும்.. வீட்டப்பம் ஓட்டைச் சுடும்" என்பார்கள். நாசவேலை புரிந்த நாகுப் பிள்ளை விஷயத்தில், இது முழுக்க முழுக்க உண்மையாகிவிட்டது !..

காட்சி 1

களம்.—கிராமம்

காலம்.—இரவு

கூத்து.—ஊரார் பலர், சொக்குப்பிள்ளை

ஒருவர்.—எங்கேயப்பா இத்தனை அவசரமா ஓடுறீங்க?

மற்றவர்.—எங்கே.. எங்கே.. ஓடுறீங்க ?

பலர்.—தீ.. தீ.. தீ (நெருப்பை அணுகிவிட்டனர்)

ஒருவர்.—என்னய்யா அநியாயம் ?

மற்றவர்.—கொடுமைக்கு உதாரணம் வேணுமா ? கொழுந்துவிட்டு எரியுதப்பா நெருப்பு !

இருவர்.—தாவி வாங்கப்பா.. என்ன வேடிக்கை பாக்கிறீங்க., அணையுங்க. அணையுங்க.. தண்ணீர்.. தண்ணீர்.

ஒருவர்.—தானே பிடிச்ச நெருப்போ !

மற்றவர்.-அதுக்கு ஏதப்பா இத்தனை தைரியம்? தாவித்தாவி விழுங்கும் நெருப்பை பாரு.. யாரோ வச்ச தீதான் இது.

ஒருவர்.—அரும்பாடுபட்டு படைச்ச படப்பு— நிமிஷத்திலே அழிச்சிப் போடுறாங்க பாவிங்க.

மற்றவர்.—சொக்குப்பிள்ளை கண்ணீர் வடிக்கிறார் பாவம் ! எல்லோரும் கண்ணீர் விட்டாக்கூட இந்த நெருப்பு அணையாதப்பா !

காட்சி 2

காலம்.—நடுநிசி

களம்.—சொக்குப் பிள்ளை இல்லம்

கூத்து.—சொக்குப் பிள்ளை, பண்ணையாள், மற்றும் நண்பர்கள்.

சொக்குப் பிள்ளை.—(மனைவியை) எதுக்கு அழறே.. ..உன்னைத் தேற்றுவதற்குக்கூட எனக்குத் தைரியம் அற்றுவிட்டது.

பண்ணையாள் ஒருவன்.—நம்ம வீட்டுக்குத் துரோகம் செய்றவங்க வாழமாட்டாங்க எஜமான்.

சொ.பி.—சே, சே, அப்படிச் சொல்லாதே.... யாரையும் கெட்டுப் போகணும்னு நினைப்பது கூடத் தப்பு.

நண்பர்.—என்ன பிள்ளைவாள்.. இரக்கம் காட்டுவதற்கு வேறு இடம் இருக்குதுங்க. இதற்கெல்லாம் இடம் கொடுத்தா அழிவுக்கு, அயோக்கியத்தனத்துக்கு இடம் கொடுக்கிற மாதிரித்தான்.

ஒருவன்.—நீங்க ஒண்ணும் செய்யவேணும்.. சுட்டுவிரலை ஆட்டுங்க, சூறையாடிப் போடுறோம்.

(சொக்குப்பிள்ளை அமைதியாக சிரிக்கிறார்)

—ஏனுங்க உங்களுக்கு யாராவது விரோதிங்க இருக்கிறாங்களா ?

சொ.பி.—என்ன அது ? விரோதியா ? எனக்கா ? ஒருவேளை மற்றவங்களுக்கு நான் விரோதியாக இருக்கிறேன் போல இருக்கு.

நண்பர்.—உங்களுக்கு ரொம்ப நல்ல மனசுங்க.

மற்றவர்.—இப்படி விட்டு விட்டு, அராஜகம்தான் ஊருக்குள் பெருகுது.

சொ.பி.—என்னால் தானப்பா ?

இருவர்.—பிறகென்னங்க.. எங்களை அவிழ்த்து விடுங்கள். ஒரு முடிவு கட்டிப் போடுறோம்.

சொ.பி.—நீங்க என்ன பண்ணுவீங்க..மேலும் ஒரு படப்பை கொளுத்துவீங்க.. அழிவுக்கு மேல் அழிவு. அதுதானே !

ஒருவர்.—பிறகென்னங்க செய்யச் சொல்றீங்க.

சொ.பி.—இப்போதைக்கு எதுவும் செய்யவேண்டாம். அமைதியாப் போய் வாங்க.

இருவர்.—அதென்னமோ எங்க நெஞ்சிலே இருக்கிற சுமை இறங்கவில்லே. (போகிறார்கள்)

காட்சி 3

காலம்.—(மறுநாள்) நடுப்பகல்

களம்.—நாகுப்பிள்ளை இல்லம்

கூத்து.—நாகுப்பிள்ளை, (அவரது மகன்) ரவி, கணக்கர், நண்பர்கள்.

(ஏகச் சிரிப்பு..கும்மாளம்..இவற்றின் மத்தியில்)

நாகுப்பிள்ளை.—எல்லாரும் மெதுவாச் சாப்பிடணும் திருப்தியாகச் சாப்பிடணும்.

மலர்.—அதுக்கென்னங்க..சாப்பாட்டில் வஞ்சமா வைக்கப் போறோம்.

நா.பி.—விருந்து எப்படி ?

ஒருவர்.—நமக்கெல்லாம் இன்று சந்தோஷமான நாள் பாருங்க..விருந்தும் மனம் போல அமைஞ்சிருக்கு..கனஜோருங்க.

நா.பி.—கையைக் கழுவிவிட்டு எல்லோரும் மாடிக்குப் போங்க.

(மாடிக்குச் செல்கின்றனர்)

நா.பி.—அடுத்து நடக்க வேண்டியதென்ன ?

சிலர்.—அடுத்துக்கெடுக்கும் திட்டந்தான் கச்சிதமா முடிஞ்சி போச்சே.

கணக்கர்.—இல்லீங்க.. ஒருவேளை விஷயம் வெளியாயிட்டா

நா.பி.—உசிருக்குப் பயந்தவன் பேசிற பேச்சடா இது.

கணக்கர்.—உசிருக்குப் பயப்படாதவங்களெல்லாம் சாகாமலா இருந்திடுவாங்க.

ஒருவர்.—(சிரித்துக்கொண்டே) அடேடே நம்ம கணக்கர் தத்துவம் பேசிறாரு.

கணக்கர்.—சாகப் பயப்படாவிட்டாலும், நல்லது கெட்டதுக்குப் பயந்து நடக்க வேணுங்க. சாகிறது பெரிசில்ல. நல்லவண்ணு வாழறது தான் பெரிசு. (கை தட்டல்)

நா.பி.—சே, சே நிறுத்துமய்யா உமது உளறலை (மற்றவரை நோக்கி) நீர் என்ன சொல்லப் போகிறீர் ?

ஒருவர்.—சொக்குப்பிள்ளை, பஞ்சாயத்தில் ஏதோ வழக்குத் தாக்கல் செய்யப் போறாராமே.

நா.பி.—சே.. சே.. அவருக்கேதுங்க அவ்வளவு தைரியம் ? அந்தத் தைரியத்தில் தானே நாம் இதைச் செய்தோம்.

ஒருவர்.—ஆமாங்க. அவர் சும்மா காந்தி படத்தைத் தான் சுத்தி வர்ராரு. ஊர்க்காரங்க தூபம் போடுறாங்களாமே.

நா.பி.—யாரப்பா அந்த ஊர்க்காரங்க.. நமக்கு தெரியாதவங்க.

மீனளம்

மூன்றாவது திட்டக் காலத்தில் 400 இயந்திரப் படகுகளை அமைத்து, உதவித் தொகை—கடன் அடிப்படையில் மீனவர்களுக்கு வழங்கும் நோக்கமுள்ள வேலைத்திட்டத்தின் கீழ், 1963-64 இறுதி வரை, 150 படகுகள் கட்டப்பட்டு மீனவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. நடப்பு ஆண்டில், 214 படகுகள் கட்டப்பட்டு வருகின்றன. இவற்றில் 123 படகுகள் கட்டி முடிக்கப்பட்டு மீனவர்களுக்கு வழங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எஞ்சிய 81 படகுகள் 1965-66-ல் முடிவுறும்.

நடப்பு ஆண்டிலும் அடுத்த ஆண்டிலும் மேற்கொண்டும் 190 படகுகளைக் கட்டுவதற்கான விரைவு திட்டத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஒருவர்.—இல்லீங்க. நமக்கு ரொம்ப வேண்டியவங்க தான். பட்டாளத்திலிருந்து வந்திருக்கிற நம்ம சின்னையாதான் சொக்குப்பிள்ளையைத் தொந்தரவு செய்றாராம்.

நா.பி.—நம்ம ரவிப் பயலா ?

ரவி.—(வீட்டுக்குள் அப்பொழுதுதான் வந்துகொண்டே) இதோ வந்து விட்டேனப்பா.. கூப்பிட்டீங்களா ?

நா.பி.—ஆமடா..ஓடிவா..கொஞ்சிறேன்.

ரவி.—அது உங்களுக்கு தெரியாத கலையாச்சே.

நா.பி.—சும்மா நிறுத்தடா கழுதை.. இப்ப எங்கிருந்து வர்ரே.

ரவி.—வேறு எங்கிருந்து.. வழக்கம் போலத்தான். சொக்குத் தாத்தா வீட்டிலிருந்து வர்ரேன்.

நா.பி.—அங்கென்னடா உனக்கு வேலை?

ரவி.—கேள்வி அசங்கியமா இருக்குதப்பா. படப்பு தீப்பட்டுப் போச்சு. நொந்துபோய் கிடக்கிறாரு. எனக்குத் தெரிஞ்ச ஆறுதலைச் சொல்லி வந்தேன்.

நா.பி.—அவருக்கென்னடா.. பெரும் பணக்காரர்.

ரவி.—பணம் கிடக்குதப்பா..பொருள் போச்சப்பா. உபயோகமில்லாமப் போச்சப்பா.

நா.பி.—அது கிடக்குது.. அவர் பஞ்சாயத்தில் தாவா செய்யப் போறாராம். அடிக்கடி நீ அங்கே போனால் உன்னையும் சாட்சிக்கு இழுப்பாங்கடா.

ரவி.—அவரென்ன இழுக்கிறது.. நான் தானே அவரைப் பஞ்சாயத்திற்கு இழுக்கிறேன்.

நா.பி.—வீண் தொல்லையை விலைக்கு வாங்காதேடா, பெரியவன் சொல்றேன்.

ரவி.—விஷயம் பெரிசாயிருந்தால் சொல்லுங்க.
(நாகுப்பிள்ளை தடியை ஓங்குகிறார்—வெளியே ஓடிய ரவி உடனே தபால் ஒன்றுடன் உள்ளே வருகிறான்) அப்பா! சென்னையிலிருந்து சீனு அண்ணு லட்டர் எழுதியிருக்கிறார்.. நானே படிக்கிறேன், கேளுங்க. (கடிதத்தை படிக்கிறான்) "அன்புள்ள அப்பாவுக்கு..சென்ற வாரம் நீங்கள் மதுரை சென்றிருந்தபொழுது சொக்குத் தாத்தாவின் மகன் விசுவத்திடமிருந்து சொற்ப விலையில் அவர்களது வைக்கோல் முழுவதையும் வாங்கிவிட்டேன்.." (கடிதம் படிப்பதை நிறுத்திக்கொண்டு) என்னப்பா கதை மாறுது?

நா.பி.—(சீறி எழுந்தார்) என்னடா கதை மாறுது? சூடு ஏறுதுண்ணு சொல்லுடா? பாருடா என்ன நடக்கப் போகிறதென்பதை.. கூப்பிடு கணக்கரை.

கணக்கர்.—இதோ வந்திட்டேனுங்க.

நா.பி.—ஓய் ஓடும்..பாரும் பஞ்சாயத்துத் தலைவரை! —போடும் வழக்கை!

கணக்கர்.—என்னங்க வழக்கு.

நா.பி.—எங்கய்யா இருக்கிற நீ. சொக்குப்பிள்ளை மீதுவழக்கு..வேண்டுமென்றே செய்த சதி.. இரண்டு நாட்களுக்கு முன்னால் அவங்க வைக்கோல் பூராவையும் நமக்கு விற்றுவிட்டு, நேற்று இரவோடு இரவாக நெருப்பையும் வச்சிட்டான்னு தாண்டா"

கணக்கர்.—"இருந்தாலும் யோசிச்சு கொஞ்சம்

நா.பி.—ஓய், இங்கு யாரும் என்னைத்தவிர யோசிக்கக் கூடாது. தெரியுமா? இன்னும் என்ன யோசனை ஓடுமய்யா, ஓடும்.

காட்சி 4

காலம்.—பிற்பகல் 2 மணி

களம்.—சொக்குப்பிள்ளை வீடு

கூத்து.—சொக்குப்பிள்ளை (கடிதம் படித்தல்)

சொக்குப்பிள்ளை.—(கடிதம் படிக்கிறார்) "அன்புள்ள அப்பா, தாங்கள் சென்ற வாரம் மதுரை சென்றிருந்தபொழுது நம்மிடம் இருந்த வைக்கோல் முழுவதையும் நாகு மாமாவின் பையன் சீனுவிடம் விற்றுவிட்டேன்.."

(மேலே படிக்காமல்..நாகுப்பிள்ளையின் வீட்டிற்கு ஓடுகிறார்)

காட்சி 5

களம்.—நாகுப்பிள்ளை வீடு

காலம்.—பிற்பகல் ஒரு மணி

கூத்து.—சொக்குப்பிள்ளை—நாகுப்பிள்ளை.

நா.பி.—(சொக்குப்பிள்ளை ஓடிவருவதையும் பொருட்படுத்தாமல் அவர் காதுகேட்க..பண்ணையாள் ஒருவனிடம்) "யாரப்பா சொக்குப்பிள்ளையா வர்றது, அவர் என் வீட்டுக்குள் நுழையக் கூடாது..என்னை அவர் பஞ்சாயத்தில் சந்திக்கட்டும்-வெளியே போகச் சொல்"

(குனிந்த தலையோடு சொக்குப்பிள்ளை திரும்புகிறார்.)

காட்சி 6

களம்.—பொது இடம் (வெளி)

காலம்.—மாலை

கூத்து.—ஊர்த்தோட்டி,

(டாம் டாம் அறிவிப்பு)

பொதுமக்கள் கவனிக்கவும்—நாளை மாலை ஏழு மணிக்கு பொதுச் சாவடியில் கிராமக் கூட்டம் நடைபெறும். கூட்டத்தில் நாகுப்பிள்ளை, சொக்குப்பிள்ளை தாவா விஷயமாய்ப் பேசப் போறாங்க..எல்லாரும் கலந்துக்கலாம்.. இது பஞ்சாயத்துத் தலைவர் அறிவிப்பு. (....டம..டம..டம..)

காட்சி 7

களம்.—பொதுச் சாவடி

காலம்.—மாலை

கூத்து.—பஞ்சாயத்து தலைவர், சொக்குப்பிள்ளை, நாகுப்பிள்ளை, மற்றும் சிலர்.

ஒருவன்.—ஊருக்குள் என்னப்பா வேலை..வேலை கிடக்குது..சாவடி கூடிருச்சு..வாங்க, வாங்க.

மற்றவன்.—ஆமாண்டா இரண்டு தலைகள் மோதுது. புறப்படுங்க, புறப்படுங்க.

(பொதுச்சாவடி)

சிலர்.—(கூட்டத்தில்) ரத்தம் சிந்த பாடுபட்டு படைச்ச படப்புக்களை அழிக்கிறதையே விளையாட்டா வச்சிட்டாங்க. இதுக்கு ஒரு முடிவு கட்டியாகணும். இல்லேண்ணு இந்தப் பஞ்சாயத்தும் சேர்ந்து அழியட்டும்.

(தலைவர் வருகிறார்)

"நிலத்தை உழுது பாடுபட்டு, உணவு அளிக்கும் சமுதாயம் தான், சமூகத்தில் தலை நிமிர்ந்து நடக்கும் உரிமை பெற்றதாகும்."

—சர்தார் வல்லபாய் படேல்.

ஒருவன்.—தலைவர் வந்திட்டாரு—சத்தம் போடாம உட்காருங்கப்பா—எதுக்கப்பா நீங்க சப்தம் போடுறீங்க—இதுவரைக்கும் இந்தப் பஞ்சாயத்து தீர்ப்பில் பழுது பட்டதில்லே—உட்காருங்க—உட்காருங்க.

தலைவர்.—(தலைவர் உட்காருகிறார்)

இப்ப ஏற்பட்டிருக்கிற தாவா—சொல்லவும் நாக்கு கூசுகிறது. தாவா கொடுத்தது யார்?

நா.பி.—நான் தானுங்க?

தலைவர்—விவரம் என்ன ?

நாபி.—இதோ சொக்குப்பிள்ளை எங்கள் வைக்கப் படப்பில் தீயை வச்சிட்டாருங்க

தலைவர்.—சாட்சி?

சொ.பி.—நான் தானுங்க!

பலர்.—என்ன ஆச்சரியம் !

தலைவர்.—என்னையா சொல்கிறீர்?

சொ.பி.—ஆமாங்க நான் தானுங்க நெருப்பை வைத்தேன்.

தலைவர்.—காரணம் ?

சொ.பி.—காரணம் என்னங்க, தண்டனையைக் கொடுங்க.

தலைவர்.—நெருப்பை வச்சதுக்குத் த்ண்டனை கிடையாது. காரணத்தைப் பொருத்துத்தான் தண்டனே.

சொ.பி.—காரணம் பெருமை, தற்பெருமை.

தலைவர்.—என்னையா பெருமை.

சொ.பி.—ஆமாங்க இந்தக் கிராமத்தில் நான் தானுங்க பெரும்புள்ளி. சொத்து, சுகம், பிள்ளை குட்டிகளோடும் பெருவாழ்வு வாழ்கின்ற குஷியிலே அடுத்தவங்க வைக்கோலிலே நெருப்பை வச்சேன்.

தலைவர்.—இதில் என்னையா லாபம் உனக்கு?

---

133 பஞ்சாயத்து யூனியன்களில் தீவிரச் சாகுபடித் திட்டம்

1965-66-ல் ரூ. 15·50 லட்சம் செலவில், செங்கற்பட்டு, கோயம்புத்தூர், மதுரை, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் தீவிரச் சாகுபடித் திட்டம் மேற்கொள்ளப்பட்டது. பண்ணைத் திட்டங்களைத் தயாரித்தல், பண்ணை கருவிகள், கடன் வசதிகள் செய்து கொடுப்பது, தீவிரப்பிரச்சாரம், நவீன வேளாண்மை சாகுபடி முறைகளைச் செய்து காட்டுதல் ஆகிய வேலைகளை மேற்கொள்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும். மொத்தத்தில் இத்திட்டத்தின் கீழ், 133 பஞ்சாயத்து யூனியன்கள் எடுத்துக் கொள்ளப்படும்.

சொ.பி.—சும்மா விளையாட்டுத்தான்

தலைவர்.—என்னையா, தீ வச்சு விளையாடுறதா?

நாகுப்பிள்ளையின் பையன்.—(தலைவர் பக்கத்தில் இருப்பவன்) என்ன தாத்தா தீ விளையாட்டா,

தலைவர்.—ஆமடா கண்ணு, தீ விளையாட்டா?

பையன்.—சரி தாத்தா, சீக்கிரம் விளையாடச் சொல்லு

தலைவர்.—ஐயோ, இல்லேடா கண்ணு இது உனக்குத் தெரியாது.

பையன்.—எல்லாம் எனக்குத் தெரியும் தாத்தா: நேத்திக்கு ராத்திரி எங்க அப்பா நம்ம மீசைக்கார பச்சை அண்ணட்டே சொக்குத் தாத்தா படைப்பிலே தீயை வைக்கச் சொல்லுச்சே.. உனக்குத் தெரியாதா.

எல்லோரும்.—என்ன..தம்பி சொல்வது உண்மையா? என்ன அக்கிரமம் ?

(நாகுப்பிள்ளை தலைகுனிகிறார்)

தலைவர்.—பாத்திங்களா..பாவம் ஒரு பக்கம், பழி மற்றொரு பக்கம். (சொக்குப் பிள்ளையைப் பார்த்து) ஏய்யா சொக்குப்பிள்ளை நீர் நல்லவர் தாங்கிறது எல்லோருக்குமே தெரியும். ஆனல் அது கெட்டவங்களை வளக்கிறதுக்கு உபயோகப்படுத்தக்கூடாது. நாகுப்பிள்ளை வைத்த தீயை நீர் தான் வைத்ததாக இதுவரை பிடிவாதம் செய்தீர். நாகுப்பிள்ளையைக் காட்டிக் கொடுக்கக்கூடாது என்பதற்காக நீர் உம்மையே குற்றம் சாட்டிக் கொண்டீர். அது உமது பெருந்தன்மையைக் காட்டலாம். ஆனல் அது ஒரு கெட்டவனைத் திருத்தாது; மேலும், அவனைக் கெட்ட வழியில் வளர்ப்பதாகத் தான் முடியும். நாகுப் பிள்ளையின் பையன் விளையாட்டாகச் சொன்னதினல் தான் விஷயம் வெட்ட வெளிச்சமாச்சு. இல்லேன்ன, நிரபராதியான சொக்குப்பிள்ளை தண்டிக்கப்பட்டிருப்பார்.

(நாகுப் பிள்ளையைப் பார்த்து) நாகுப்பிள்ளை, நீர் செய்த சிறு தவறு உன்னை அழித்து விட்டது முக்கியமல்ல. கால்நடைகளுக்கு உணவாகும் பொருளையல்லவா நீர் அழித்து விட்டீர். இந்தக் குற்றத்தை ஊர் பொறுக்காது. ஆகவே, ஊர்ப்பொதுவிலிருந்து உம்மை ஒதுக்கிவைக்கிறோம். ஓராண்டுக்காலம் கிராமக் கண்காணிப்பில் உமது நடவடிக்கைகள் கவனிக்கப்படும். பிறகு தான் மக்கள் பொதுவில் உம்மை நடமாட விட ஆலோசிக்கப்படும்.

[நாணித் தலை குனிந்து செல்கிறார் நாகுப்பிள்ளை]

(சபை கலைகிறது)



முதலமைச்சர் திரு எம். பக்தவத்ஸலம், 1—3—1965-ல், தமிழ்நாடு சட்ட மன்றத்தில், 1965–66 ஆண்டு நிதிநிலை அறிக்கையினைச் சமர்ப்பித்தார்.

(நிதிநிலை அறிக்கையின் சாரத்தை பக்கங்கள் 2–7-ல் காணலாம்.)

தமிழகத்தில் அபரிமிதமாகக் கிடைக்கும் "வேர்க்கடலை", உடலுரத்துக்கேற்ற உணவு வகைகளில் ஒன்றாகும்.

(விவரம் 34-ம் பக்கம் பார்க்க.)

முழுக்க முழுக்க பயன் அளிக்கும் தென்னை மரங்களை, பஞ்சாயத்து நிறுவனங்கள் ஏராளமாக வளர்க்கவேண்டும்.



"கோழி வளர்ப்பு" பஞ்சாயத்து ஏற்று நடத்த வேண்டிய பணிகளில் ஒன்றாகும். சத்துணவு வகைகளில் ஒன்றான 'முட்டை உணவு' ஏராளமாகக் கிடைக்க, புதிய பஞ்சாயத்து ஆட்சி வகை செய்யவேண்டும்

மீன், சத்துணவு வகைகளில் சிறந்தது. மீனவர்களுக்கு, மீன் பிடிக்க இயந்திரப் படகுகள் வசதி அரசினரால் செய்து தரப்பட்டுள்ளது.

சிறு தொழில்களில், மண் பாண்டத் தொழிலும் ஒன்ருகும். மண்ணிலிருந்து உருவாகும் வண்ணப் பொருட்கள் அழகுணர்ச்சியை அளிப்பதுடன் மட்டுமல்லாமல், கிராம மக்களுக்கு வருவாய் அளிக்கும் ஒரு வழிவகையுமாகும்.

(விவரம் எதிர்ப்பக்கம்)

மண்ணிலிருந்து உருவாகும் வண்ணப் பொருட்கள்

(திரு என். சி. எஸ். சௌந்தரராஜ், சென்னை–17.)

மட்பாண்டத் தொழில் என்பது மனிதனின் கைத்திறனையும், மதிநுட்பத்தையும் நன்கு புலப்படுத்துகின்ற கலையாக விளங்குகிறது. கிரேக்க மொழியில் இதை 'கெராமிக்' (keramic) எனக் குறிப்பிட்டனர். காலப்போக்கில், இச் சொல் மருவி–உருமாறி 'செராமிக்' (ceramic) என இன்று வழங்கி வருகிறது.

மண் தொழில் கலை:—கண்ணாடி செய்தல், மட்பாண்டங்கள் செய்தல் என இருவகையாகப் பிரிக்கப்படுகிறது. ஆதிகால மனிதர்கள் மலைகளிலும், காடுகளிலும் அலைந்து திரிந்து கொண்டிருந்தபொழுது அவர்கள் மண்ணின் பயனை மெல்ல மெல்ல உணர ஆரம்பித்தார்கள். உணவுப் பண்டங்களை வேக வைக்கவும், பொருட்களை எடுத்துச் சேமித்து வைக்கவும் மட்பாண்டங்கள் தேவைப்பட்டன. அன்றைய மனிதன் எவ்விதக் கருவியின் உதவியையும் நாடாது கைகளினலேயே மட்கலன்களை உருவாக்கினன். அவன் அன்று இட்ட வித்துதான், இன்று வேரூன்றிப் பெருமரமாகக் கிளைத்து நிற்கும் மட்பாண்டக் கலையாக மிளிர்கிறது.

பூமியிலுள்ள பலரக மண்ணில் மட்பாண்டத் தொழிலுக்கு ஏற்றது களிமண். இது உலகின் பல பாகங்களில் பெருவாரியாகக் கிடைக்கின்றது. இது வெள்ளைக் களிமண் (white clay), சாதாரணக் களிமண் (red clay) என இருவகைப்படும். இக் களிமண் உறுதி பெறுவதற்குப் பல கலவைகள் சேர்க்கப்படுகின்றன. இதனல் மண்ணுக்கு இயற்கையாக உள்ள உறுதித்தன்மையை விட அதிகக் கெட்டித்தன்மை ஏற்படுகிறது. பொதுவாக மண்கலவையுடன் பெல்ஸ்பார், (felsfar) குவார்ட்ஸ் (Quartz) முதலிய உலோகச் சத்துள்ள மூலகங்கள் சேர்க்கப்படுகின்றன.

உள்ளத்தைக் கிரங்கவைக்கும் உருவெடுக்கும் அதிசயம்

கிராமிய மட்பாண்டத்தொழிலாளர்கள் உபயோகிக்கின்ற களிமண் ஆறு, குளம், குட்டை, ஏரி, வாய்க்கால் போன்ற நீர்ப்பற்றுள்ள இடங்களில் எளிதாகக் கிடைக்கிறது. நீர்நிலையோரங்களில் சாதாரணக் களிமண்ணைக் காட்சி தருகின்ற இது தான், கண்ணுக்கும், கருத்திற்கும் அழகு தருகின்ற கவர்ச்சிப் பொருட்களாகவும், கவின் பெறு கலைப்பேழைகளாகவும் உருவாகிறது. அகழ்வாராய்ச்சியாளர்கள் இத்தகைய மட்பாண்டங்களிலுள்ள கலைத்திறனையும், சித்திர எழுத்துக்களையும் வைத்தே, பண்டைய நாகரிகத்தை நிர்ணயிக்கின்றனர்.

மட்பாண்டங்களைச் செய்வதில் பலமுறைகள் பின்பற்றப்படுகின்றன. அவை :

(1) திரிவைத்தல் முறை அல்லது பிரிவைத்தல் முறை (wick system).

(2) மனைதல் : மண்ணைச் சக்கரத்தில் வைத்துப் பாண்டமாக வனைதல் (throwing sytem).

(3) அடித்தல் : சிறு மரக்கட்டைக் கருவி கொண்டு தட்டி அடித்துப் பாண்டம் சமைத்தல் (beating system).

(4) அச்சுகளில் செய்தல் (moulding system) மண்ணை அச்சுகளில் வார்த்து உருவமைத்தலே அச்சு முறையாகும்.

திரிவைத்தல்.—திரிவைத்தல் அல்லது பிரி வைத்தல் என்ற முறையில் தண்ணீர்த் தொட்டிகள். பூந்தொட்டிகள், குதிர்கள், சிலைகள் முதலியன தயாரிக்கப்படுகின்றன, இம் முறையில் பாத்திரங்களின் பரப்பு ஒழுங்காகவும். சீராகவும், அழகாகவும் இருக்காது. இம் முறைதான் முதன் முதல் தோன்றியது. சாதாரணமாக, வைக்கோல் கூழத்தை மண்ணுடன் கலந்து தொட்டிகள், குதிர்கள் செய்வதைப் பார்த்தவர்கள் இதை இலகுவில் புரிந்துகொள்ளலாம்.

மணிதல் :—இதை வனைதல் என்று சிலர் சொல்லுவார்கள். சக்கரத்தில் மண்ணை வைத்து அதைச் சுற்றிவிட்டுக் கையால் ஒரே அழுத்தில் வார்த்தெடுத்து, அளவுக்குத் தக்க விதத்தில் உருவத்தை அமைக்கும் முறைக்கு மணிதல் அல்லது வனைதல் என்று பெயர். இம்முறை மூலம் வட்ட வடிவமும், முட்டைவடிவமுமாக உள்ள பண்டங்களை மட்டுமே செய்ய முடியும். பொதுவாகச் சமையல் பாத்திரங்கள் இம்முறையால் உருவாக்கப்படுகின்றன.

அடித்தல் :—இம்முறை எளிதானது. பரவலாக எல்லா இடங்களிலும் நடைபெற்று வருகின்றது. பக்குவப்படுத்தப்பட்ட களிமண்ணைப் பாண்டமாக வனைவதற்குச் சக்கரம், பலகை, வழவழப்பான கல் ஆகிய மூன்றும் வேண்டும். தேவையான களிமண்ணை சக்கரத்தின் மத்தியில் வைத்துச் சுற்றிக் கையால் உருவத்தை உண்டாக்கி, உட்புறத்தை வழவழப்பான கல்லாலும், வெளிப்புறத்தைக் கட்டையாலும் தட்டிப் பெரிதாக்கிப் பாத்திரங்களாக்கும் முறைக்கு அடித்தல் முறை என்று பெயர். இம்முறை மூலம் அதிகமாகச் சமையல் பாத்திரங்களே செய்யப்படுகின்றன. பாத்திரங்களின் கழுத்தடியில் காணப்படும் கோடுகளை சக்கரத்தை மெல்லச் சுழற்றி நகத்தால் மண்ணைக் கீறுவதன் மூலம் உண்டாக்குகின்றனர்.

அச்சு :—அச்சுகளின் உதவியால் பொருட்களைச் செய்வது மிகவும் எளிது. பல வகையான உருவங்களை உண்டாக்கப் பலரக அச்சுக்கள் நிரந்தரமாகச் செய்யப்படுகின்றன. இம்முறையில் மண்பாண்டங்களை உருவாக்க அதிக அளவு தொழில் ஞானமோ, நுணுக்கத்திறனோ, கை வன்மையோ தேவை இல்லை என்றே சொல்லலாம்.

மண், சிமெண்ட், கல்தார், மரக்கட்டை முதலியவற்றால் செய்யப்பட்ட அச்சுகளில் மண்ணை வார்த்து உருவத்தை உண்டாக்குகின்றனர். பெரும்பாலும் கிராமங்களில் செங்கல் அறுப்பதற்கு மர அச்சுகள் பயன்படுத்தப்படுகின்றன. நாகரிகம் வளர்ந்தோங்கியுள்ள இந்நாளில் பொம்மைகள், குவளைகள், காப்பிக் கோப்பைகள் (Cup and saucer) முதலியன அச்சுக்களில் செய்யப்படுகின்றன.

உடல்நலன் பேணும் மட்பாண்டச் சமையல்

சுடப்பட்ட மட்பாண்டங்களில் நுண்ணிய துவாரங்கள் (Pores) உண்டு. எனவே, இப்பாண்டங்களில் திரவப்பொருளை இட்டால் கசியும். ஆனால் சமையல் செய்வதற்கு இத்தகைய பாத்திரங்களே சிறந்தவை. கிராமங்களில் இன்றும் மட்பாண்டங்கள் தாம் சமையலுக்குப் பயன்படுத்தப்படுகின்றன. நகர மக்கள் துரு ஏறா எஃகு பாத்திரங்களை (Stainless steel vessels) இப்போது பெருமளவு உபயோகிக்கின்றனர். மட்பாண்டத் தொழிலின் வளம் குன்றுவதற்கு, இதுவும் ஒரு காரணம் என்றால் மிகையாகாது.

சுகாதார நெறிப்படி மட்பாண்டம் சிறந்ததென்றாலும், திரவப் பொருட்களையும் உப்புப் பொருட்களையும் தேக்கி வைக்கும்போது விரைவில் வலுவிழந்து பொருட்களையும் நசித்துப்போகச் செய்கிறது. இக்குறைகளை நீக்கும் பொருட்டு பலவழிகள் கையாளப்பட்டபோதிலும் முற்றிலும் தவிர்க்க முடிவதில்லை.

அரக்கு பூசுதல் (lacquring), மெருகு கொடுத்தல் (glazing) ஆகிய முறைகளால் துவாரங்கள் அடைபடுவதோடு பளபளப்பும், அழகும் கிடைக்கிறது. இவைகளைத் தவிர உறுதியும் உண்டாகிறது. இத்தகைய முலாம் பூசப்பட்ட மட்பாண்டங்களைச் சாதாரணக் கிராமச் சூளையில் சுட முடியாது. இதற்கெனப் பிரத்தியேகச் சூளைகள் உள்ளன.

அம்மோனியா திரவம், அரக்கு, தண்ணீர் ஆகியவற்றை 1:8;32 என்ற விகிதத்தில் கலந்து உஷ்ணப்படுத்தித் தயாரிக்கும் குழம்புக்கு அரக்கு கலவை என்று பெயர். சுத்தமாகத் தூசின்றித் துடைக்கப்பட்ட சுட்ட மண்பாண்டங்களின் மீது இக்கலவையை மெல்லிய துணி அல்லது பஞ்சில் நனைத்துப் பூச வேண்டும். வாரை வாரையாகப் பூச்சுக் கொடுக்கக்கூடாது. பூச்சுக்கொடுக்கப்பட்ட பாத்திரங்களைப் பிரத்தியேகச் சூளையிலிட்டு (அரக்குச்சூளை) உஷ்ணப்படுத்தவேண்டும். அரக்குக் கலவை உருகி கெட்டியாகப் பிடித்துக்கொள்ளும். இப்போது அழகும், வழவழப்பும் ஏற்படுகிறது. இம்மாதிரி நவீன மட்பாண்டங்களை ஊறுகாய் போட்டு வைக்கும் கொள்கலன்களாகப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

மட்பாண்டப்பொருட்கள் கட்டிட நிர்மாண சாதனங்கள் (building materials), வீட்டுத் தேவைக்கான பாண்டங்கள் (household articles), அழகுப் பொருட்கள் (fancy articles) என்று பலவகைப்படும்.

கட்டிடம் நிர்மாணிக்கச் செங்கல், குழாய்கள், நாழி ஓடுகள், சீமை ஓடுகள் முதலியன இத்தொழிலாளர்களால்தான் செய்யப்படுகின்றன. வீட்டை அலங்கரிக்கும் பூத்தாங்கிகள் (flower vases) காகிதப் பளுக்கள் (paper weights) பொம்மைகள் (toys) பத்தி தாங்கிகள் முதலிய பொருட்களும் மண்ணால் உருவாக்கப்படுகின்றன.

அள்ள அள்ளக்குறையாத மண்ணையும், நீரையும் கலந்து பாண்டம் செய்து வீறகால் சுட்டுக் கொள்ளலாம். இத்தகைய கிராமிய மட்பாண்டத் தொழிலை ஆதரிப்பது நம் கடமை.

தபால் நிலைய சேமிப்பு பாங்கு

திரு எஸ். சி. ஜெயின்,
[தபால் தந்தி போர்டு உறுப்பினர்.]

[பெருவாழ்வின் அடிப்படை சிறுசேமிப்பே. "சிறுகக் கட்டி பெருக வாழ்" என்பது தமிழ் மூதுரை. நாட்டின் வளர்ச்சிப் பணிகளுக்கு சிறு சேமிப்புகளின் மூலம் பெரும் உதவி செய்ய முடியும். சிறுசேமிப்பு நிறுவனங்களில் ஒன்றான தபால் நிலைய சேமிப்பு பாங்கு பற்றி சுருக்கமாக கூறுகிறது இக்கட்டுரை.]

தபால் நிலைய சேமிப்பு பாங்கு (Post Office Savings Bank) இந்நாட்டில், மாபெரும் சேமிப்பு நிறுவனமாக தன்னிகரற்று விளங்குகிறது. நாடு முழுவதிலும் கிட்டத்தட்ட 42,500 தபால் நிலையங்கள் பணியாற்றி வருகின்றன. இவற்றில், 34 ஆயிரத்துக்கும் மேலான தபால் நிலையங்கள் கிராமப் பகுதிகளில் அமைந்துள்ளன. இந்த அளவில் ஏராளமான கிளைகளைக் கொண்ட சேமிப்பு ஸ்தாபனம் வேறு எதுவும் கிடையாது; அத்துடன், தபால் நிலையங்களைப் போல், கிராமங்களில் பணியாற்றும் ஸ்தாபனமும் இல்லை.

மக்கள் ஆதரவு

தபால் நிலைய சேமிப்பு பாங்குக்கு மக்கள் அளிக்கும் பேராதரவு அளவிடற்கரியது. தபால் நிலைய சேமிப்பு பாங்கில் போடப்பட்டிருந்த டெபாசிட்டுகளின் மொத்த தொகை, 1964 மார்ச் 31-ம் தேதியன்று, 530·78 கோடி ரூபாயாகும். ஆனால், அதே தேதியில், எல்லா ஷெட்யூல்டு பாங்குகளிலும் சேமிப்புப் பிரிவில் செலுத்தப்பட்டிருந்த தொகை 479·04 கோடி ரூபாயே ஆகும். 1964 மார்ச் 31-ம் தேதியன்று, தபால் நிலைய சேமிப்பு பாங்கில் இருந்த மொத்த டிபாசிட்டுகளும் தபால் சேமிப்புப் பத்திரங்கள் மூலம் பெறப்பட்ட டெபாசிட்டுகளும் மொத்தம் 1,154.54 கோடி ரூபாயாகும். இந்தத் தொகை எல்லா ஷெட்யூல்டுபாங்குகளிலும் 1964 ஏப்ரல் முதல் தேதியன்று இருந்த டெபாசிட்டுத்தொகையில் சுமார் பாதியாகும்.

நாட்டில் உள்ள ஷெட்யூல்டு பாங்குகளைக் காட்டிலும் மிக அதிகமான தபால் நிலைய சேமிப்பு பாங்குகள் இருக்கின்றன. 1964 மார்ச் 31-ம் தேதியன்று தலைமை, துணை கிளை தபால் நிலைய சேமிப்புப் பாங்குகள் மொத்தம் 42,594 இருந்தன. ஆனால் ஷெட்யூல்டு பாங்குகளும் அவற்றின் கிளைகளுமாக நாட்டில் மொத்தம் 5,128 பாங்குகளே இருந்தன. கடந்த பத்தாண்டுக் காலத்தில் டெபாசிட்டுகளின் தொகையும் அதிகரித்து வந்துள்ளது, 1949–50-ம் ஆண்டில் ரூ. 88·96 கோடி டெபாசிட் செய்யப்பட்டது: 1963–64-ல் டெபாசிட்டுகளின் தொகை ரூ. 264·96 கோடியாக உயர்ந்தது. 1949–50-ம் ஆண்டில் இறுதியில் இருந்த நிலுவைத் தொகை ரூ. 169·36 கோடி இது 1963-64-ம் வருட இறுதியில் மூன்று மடங்காக அதிகரித்திருந்தது.

தபால் சேமிப்புப் பத்திரங்கள் விஷயத்திலும், இதே போன்று உயர்வு காணப்பட்டது. 1963-64-ல், இந்த முதலீடு 108·69 கோடி ரூபாய்க்கு உயர்ந்தது. தபால் சேமிப்புப் பாங்குகளில் நிதி செலுத்தியவர்களின் எண்ணிக்கையும் இந்தக் காலத்தில் அதிகரித்து வந்துள்ளது 1909–10-ம் ஆண்டில், டெபாசிட் செய்தவர்கள் 13,79,000 பேர். 1947–48-ல் இந்த எண்ணிக்கை 31,53,000 ஆக அதிகரித்து இருந்தது, 1963–64-ம் ஆண்டில் ஒரு கோடிக்கும் அதிகமானவர்கள் டெபாசிட் செய்திருந்தனர். சுதந்திரம் பெற்ற பிறகு முதல் 16 ஆண்டுக் காலத்தில் டெபாசிட் செய்தவர்களின் எண்ணிக்கை 200 சதவிகிதம் அதிகரித்தது: அதே காலத்தில் செய்யப்பட்ட டெபாசிட்டுகள் சுமார் 180 சதவிகிதம் அதிகரித்தன என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

கிராமங்களுக்கு முதலிடம்

தபால் தந்தித் துறை நாட்டில் சேமிப்பு மனப்பான்மையை வளர்த்து, எல்லா நிலைகளிலும் மூலதனம் உருவாக உதவி வருகிறது. ஷெட்யூல்டு பாங்குகள் கிராமங்களில் கிளைகள் அமைக்கத் தயங்குகின்றன, கணிசமான லாபம் பெற முடியாது என்பதே இதற்குக் காரணம். ஆனால், கிராம மக்களிடையே சேமிக்கும் பழக்கத்தை ஏற்படுத்துவதில், தபால் தந்தித் துறை குறிப்பிடத்தக்க வகையில் பணியாற்றி வருகிறது. அதன் வளர்ச்சித் திட்டத்தில் கிராமப் பகுதிகளுக்கு முதலிடம் அளிக்கப்பட்டுள்ளது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட கால இறுதிக்குள், தபால் சேமிப்பு பணியாற்றும் நிலையங்கள் 42 ஆயிரத்துக்கும் அதிகமாக அமைக்கப்பட்டு விடும்: இவற்றில் பெரும்பாலானவை, பஞ்சாயத்து தலைமைக் காரியாலயங்களிலும் சமுதாய அபிவிருத்தி நிலையங்களிலும், தேசிய வளர்ச்சித்திட்ட வட்டாரப் பகுதிகளிலும் இடம் பெற்றிருக்கும்.

பிணி தீர்க்கும் தேன்

"பாலும் தெளிதேனும் பாகும், பருப்பும் இவை நாலும் கலந்துனக்கு நான் தருவேன்" என்று ஆண்டவனை நோக்கி ஔவையார் பாடியுள்ளார். "மாசறு பொன்னே, வலம்புரி முத்தே, காசறு விரையே, கரும்பே, தேனே ...." என்றெல்லாம் கோவலன், "தீதிலா வடமீன் போன்ற தெய்வக் கற்பினளான" கண்ணகியைப் போற்றிப் புகழ்வதாக, 'சிலப்பதிகாரம்' பறை சாற்றுகிறது. 'தித்திக்கும் தேன்மொழி' என்று அடைமொழி கொடுத்து, தமிழ்மொழி போற்றப் படுகிறது. தேன், தித்திக்க மட்டும் தானா செய்கிறது ?

திருமதி ஆ. கௌசல்யா சங்கர்
கீழ்வேளூர் பஞ்சாயத்து யூனியன்
தஞ்சை மாவட்டம்

சில ஆண்டுகளுக்கு முன்வரை, காட்டிலும் மலைகளிலும் தோட்டமரங்களிலும் கட்டிய தேன் கூடுகளை அழித்தே தேனை எடுத்தனர். இது நல்ல தேனாக அமைவதில்லை. ஏனெனில், இந்தத் தேன் கூட்டை அழித்தே தேன் பிழிந்து எடுத்தனர். அப்படி அழிக்கும்போது அந்தக் கூட்டில் புழுப் பருவத்திலுள்ள தேனீக்களும் நசுக்கப்பட்டு, அதன் சாறு தேனில் கலந்துவிடும். ஆனால், தற்காலத்தில், விஞ்ஞான முறைப்படி தயாரிக்கும் தேனில், தேனீக்களின் உடற் சாறு கலப்பதில்லை. தேனீ பூச்சிகளும் அழிவதில்லை. தூய்மையான பூக்களில் இருந்து எடுத்த தேனே, நமக்கு விஞ்ஞான முறைப்படி எடுக்கும் தேனில் கிடைக்கிறது.

அதிசயிக்கத் தக்க வாழ்க்கை முறை

தேனீக்களின் பழக்க வழக்கங்கள் வாழ்க்கை முறைகள் மிக வியக்கத்தக்கவை. உழைப்பாளி ஈக்களின் வாழ்வின் ஒழுங்கும் கட்டுப்பாடும் நம் இராணுவத்தைக் காட்டிலும் மிக மிகக் கண்டிப்பானவை. உழைப்பாளி ஈக்களின் செயல் ஒழுங்கும், வேகமும் திறமையும் மிக வியக்கத்தக்கது. இந்த ஈக்கள் தம் கால்களில் 'பை'களைக் கொண்டுள்ளன. இந்தப்பைகளில் தான் இவை, பூந்தாதுக்களை சுமந்து செல்கின்றன. தேனீக்களுக்கு 5 கண்கள் உள்ளன. இதில் 2 கூட்டுக்கண்கள். இவைகளினால் வெகு தொலைவில் உள்ளவைகளையும் காணமுடியும். 3 தனிக்கண்கள், இவை அருகில் தன்னைச் சூழ்ந்துள்ளவைகளைக் காண. இந்தத் தேனீக்கள் சுமார் ஒரு கிலோ மீட்டர் பரப்பளவு வரை சென்று, தேனை எந்தக் காலத்திலும் சேகரிக்கும். 100 கிராம் தேனைத்தயாரிக்கத் தேனீக்கள் பத்து லட்சம் பூக்களை நாடுகின்றன. மணிக்கு 65 கி. மீட்டர் வேகத்தில் பறந்து செல்லும்.

தேனீக்கள் பூக்களிலிருந்து தேனை உறிஞ்சுகின்றன. இதில் நீர் கலந்திருக்கும். இந்தத் தேனை தேனீக்கள் உண்டு சர்க்கரையை முறித்து 'டெக்ஸ்ரோ 1' 'லெவுலோஸ்' என்னும் எளிதில் ஜீரணமாகும் தன்மையில் வெளியிடுகின்றன. இன்னும் பல மாறுதல்கள் தன் உடம்பினால் அடையச் செய்து பின், நல்ல தேனாக கூட்டில் வைக்கும். தேனில் நீர்ப்பாகம் இருந்தால் புளித்து விடும். ஆகவே, நீரை அகற்ற தன் இறக்கைகளின் மூலம் காற்றை உண்டாக்கி நீரை அகற்றிவிடும். தேனீயின் இந்த வியக்கத்தக்க வாழ்க்கை முறையில் சேகரிக்கப்படும் தேனின் தன்மை குறைந்ததாகவா இருக்கும் ?

அரிய பயன் அளிக்கும் அருமருந்து

இனி இந்த அரிய தேனின் பயனைச் சிறிது பார்ப்போம். தேனீ கொட்டினால், தன் கொடுக்கை கொட்டிய இடத்திலேயே முறித்து விட்டுச் சென்று

விடும். அதன் பின் அக்கொடுக்கிலுள்ள பை சுருங்கிச் சுருங்கி விரியும், அப்படி விரியும்போது அப்பையிலுள்ள தேனீயின் விஷம் சிறிது சிறிதாக கொடுக்கு வழியாக நம் உடலில் பாய்கிறது. இந்த தேனீ விஷம் 'பாரிச வாயு' என்ற நோய்க்கு அருமருந்து ஆகும். 'பாரிச வாயு' ஏற்பட்டுள்ள இடத்தில் தேனீக்களை விட்டு கொட்டச் செய்தும், தேனீ விஷத்தை ஊசி வழியாகச் செலுத்தியும் நோயைக் குணப்படுத்துகின்றனர்.

ஆயுர்வேத மருத்துவ முறையிலும் தற்கால மேனாட்டு மருத்துவ முறையிலும் மிகப் பல வியாதிகளுக்குத் தேன் பயன்படுகிறது. புண்களுக்கும் தொற்றுப் புண்களுக்கும் தேன், மீன் எண்ணெய் ஆகிய இரண்டின் கலவையை 10, 11 நாட்களுக்குப் பயன்படுத்தலாம். இதற்கு மற்றொரு முறையையும் பயன்படுத்தலாம். தேன் 80 கிராம், மீன் எண்ணெய் 20 கிராம். ஸெரோபார்ம் 3 கிராம் எடுத்துக்கொள்ள வேண்டும். தேனும் ஸெரோபார்மும் கலுவத்தில் நன்கு அரைத்துப் பின் மீன் எண்ணெய் சேர்த்து நன்றாகக் கலந்து புண்களின் மேல் தடவி வந்தால் விரைவில் குணமடையும்.

நீர்ப்பிடிப்பிற்கு (ஜலதோஷம்) 3 தேக்கரண்டி தேனில் ஒரு எலுமிச்சம் பழச்சாறு கலந்து சாப்பிடலாம். அல்லது, ஒரு கப் தேநீர் (டீ) ஒரு மேசைக்கரண்டி தேன் கலந்து சாப்பிடலாம், அல்லது, சரிபாதி குதிரை முள்ளங்கிச் சாறும் தேனும் கலந்து சாப்பிடலாம். இதற்கெல்லாம் நீர்ப்பிடிப்பு அகலும் வரை நோயாளி 2 நாட்கள் வீட்டிலேயே அல்லது படுக்கையிலேயே இருப்பது அவசியம்.

க்ஷயத்திற்குப் பாலுடன் கலந்த தேன் தலைசிறந்தது. தேன், இருமலைக் குறைக்கவும் கோழையை நீக்கவும் பயன்படும். க்ஷயரோகிகளுக்கு நாள் தோறும் 3 அல்லது 4 தேக்கரண்டி தேன் அளித்தால் எடை அதிகரிக்கும். இருமலின் கடுமையும் குறையும். க்ஷயத்தின் துவக்கத்திலேயே தேனும் ரோஜாப்பூவும் கலந்து கொடுப்பது நன்மையளிக்கும்.

நுரையீரல் ரத்தப் பெருக்கினால் ரத்தம் கக்கும் நோய்களுக்குத் தேனைத் தனித்தோ அல்லது காரட்டு அல்லது முள்ளங்கிச்சாறுடன் கலந்தோ கொடுக்கலாம். இதயக்கோளாறு, நெஞ்சுவலி முதலிய நோய்களுக்கு தேனும் 70 கிராம் மாதுளைச் சாறும் உட்கொள்வது சாலச்சிறந்தது.

மலச்சிக்கலுக்குத் தேன் நல்ல மருந்து. இது வயிற்றிலுள்ள அமிலத்தைப் போக்குகின்றது. தேனை வெதுவெதுப்பான நீரில் கலந்து உண்டால் இரப்பைச் சீதம் கரைவதை எளிதாக்குகிறது. குளிர்ந்த நீரில் (ஐஸ்) கலந்து உண்டால் வயிறு காலியாவதைத் தாமதப்படுத்தி குடலை உறுத்தும். ஒரு குவளை தண்ணீரில் கொஞ்சம் தேன் கலந்து படுக்கைக்கு முன் அருந்தினால் அமைதியான உறக்கம் வரும்.

வாய், முன் தொண்டை முதலியவற்றைப் பிடிக்கும் பல்வேறு வியாதிகளுக்கு 10 அல்லது 15 சதவிகிதம் நீர்க்கரைப்புத் தேனைக்கொண்டு வாயைக் கொப்பளித்துத் தூய்மைப்படுத்தலாம்.

குழந்தைக்கு 20, 25 கிராம் சர்க்கரையைக் காட்டிலும் ஒரு தேக்கரண்டி தேன் அதிகப் பயனுள்ளது. தாய்மையுற்றவர்கள் தேனைப்பயன்படுத்துவது தாய்க்கும் பிறக்கப்போகும் குழந்தைக்கும் மிக நல்லது. வலிவற்ற குழந்தைகளின் நலனைத் தேன் அதிகமாக்குகிறது. தேனில் அயச் சத்து இருப்பதால், இயற்கைப் பசி அதிகமாகி செறிமானம் ஊக்குவிக்கப்படுகின்றது.

சிகப்பு கேரட் சாறு, மூத்திர விருத்தி, மூத்திரக் கல்லடைப்பு, ரத்த சோகை ஆகியவைகளுக்கு அருமருந்தாகும். இதனுடன் தேன் கலந்து சாப்பிட்டால், இரத்த விருத்தியும் உடலழகும் மேம்படுகின்றது.

தேன் உபயோகப்படுத்தும்போது தேனின் அளவும் கால அளவும் கண்டிப்பாகக் கையாள வேண்டும். நாள் ஒன்றுக்கு பெரியவர்களுக்கு 4 அல்லது 5 தேக்கரண்டி 3 வேளைக்கும், குழந்தைகளுக்கு நாளொன்றுக்கு 3 வேளைக்கு ஒரு தேக்கரண்டி வீதமும் கொடுக்கலாம். தேன் சிகிச்சை (உள்ளுக்குச் சாப்பிடுதல்) ஒரு மண்டலம் அல்லது ஒன்றரை மண்டலம் வரை நீடிக்கவேண்டும். அப்பொழுது தான் தேனின் பயனை முழு அளவில் பெற முடியும்.

இவ்வளவு உயர்ந்த, பெருமை பெற்ற, விலை மதிப்பற்ற தேனின் பயனை நாம் ஒவ்வொருவரும் அடைதல் வேண்டும். நமக்கு வேண்டிய தேனை நாமே நமது சிறு முயற்சியினால் எளிதில் பெறலாம்.

போற்றி வளர்க்கவேண்டிய கிராமத்தொழில்

தேனீ வளர்ப்பு வியாபார முறையில் செய்தால் குடிசைத்தொழிலாக மேற்கொள்ளலாம். ஓரளவு செலவிற்குரிய வருமானத்தை எதிர்நோக்கினால் தேனீ வளர்ப்பை ஒரு துணைத் தொழிலாகவும் கொள்ளலாம். இலாபக் கருத்து ஏதுமின்றி பொழுதுபோக்குத் தொழிலாகவும் நாம் இதைச் செய்து, நமக்கும் நம்மைச் சார்ந்தவருக்கும் இதன் நன்மையைப் பகிர்ந்தளிக்கலாம். இதற்கு நம் அரசினரும் வட்டார வளர்ச்சி அலுவலகங்களின் வழியாக வேண்டிய உதவியை அளிக்கின்றனர். இதைப் போற்றி வளர்க்க வேண்டியது கிராமப் பொருளாதார வளர்ச்சியில் அக்கறை கொண்டுள்ள ஒவ்வொருவருடைய கடமையுமாகும்.

விவசாயி விளைவித்த விநோதம்

"முன்னொரு காலத்தில் ஒரு அரசன் இருந்தான்: அவன்.." இவ்வாறு ஆரம்பமாகும் பல கதைகளை, விசித்திரமான கதைகளைக் கேட்டிருக்கிறோம்: ஆனால், சில சமயங்களில், உண்மைச் சம்பவங்களே கட்டுக் கதைகளை விட சுவை மிக்கதாய் உள்ளன. அற்புதங்கள், அந்தக் காலத்தில் மட்டுமல்ல, இப்போதும் நிகழ்கின்றன. இன்றைய அற்புதங்களைச் செய்பவர்கள் மன்னர்கள் அல்ல. சாதாரண மக்கள்தான். ராஜஸ்தான் மாநிலம், பந்தி மாவட்டம், துகாரி கிராமத்தைச் சேர்ந்த ராம் நாராயண் என்ற ஏழை விவசாயியும், அதிசயிக்கத்தக்க ஒரு விநோதம் புரிந்திருக்கிறார்.

ராம் நாராயண், விவசாய குடும்பத்தில் வந்தவரல்ல. அவர், மட்பாண்டம் செய்யும் வகுப்பைச் சேர்ந்தவர். அவரிடம் ஏதோ சிறிதளவு நிலம் இருந்தது. ஆக, அவர் அக் கிராமத்தில் ஒரு சாதாரண நபர்—எத்தனையோ ஏழைகளில் அவரும் ஒருவர். அத்தகையவர் கிராம விவசாயம் முழுவதும் வளம்பெற ஒரு புதிய பாதையைக் காட்டுவார் என யாரும் எதிர் பார்க்கவில்லை.

எனினும் அந்த அற்புதம் நடைபெறத்தான் செய்தது. சுமார் பத்தாண்டுகளுக்கு முன், ராம் நாராயணின் கிராமத்தில், கண்காட்சி—கேளிக்கை களோடு கூடிய விசேஷ சந்தை—திருவிழா ஒன்று நடந்தது. மற்றவர்களைப்போன்றே, ராம் நாரா யணனும் சென்றிருந்தார். கேளிக்கை விளையாட்டுப் பகுதிகளை ஆண்களும் பெண்களும் திரளாகக்கூடி வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்க, ராம் நாரா யணின் மனம் விவசாயக் கண்காட்சிப் பகுதியில் லயித்தது. அரசாங்க விவசாய இலாகாவால் ஏற்பாடு செய்யப்பட்ட அப்பகுதியில் நவீன விவசாயக் கருவிகளையும் மற்றவற்றையும் அவர் அக்கறையோடு கவனித்தார். முக்கியமாக, ஒரு சாக்குப்பையில் நல்ல தரமுள்ள கோதுமை வைக்கப்பட்டிருந்ததை ஆவலோடு, கண்கொட்டா மல் பார்த்தார். அங்கிருந்த ஒரு அதிகாரியை அணுகி, "இதென்ன காட்சிக்கு மட்டுந்தான் வைக்கப்பட்டிருக்கிறதா, அல்லது இந்த விதை களை ஜனங்களுக்கு விநியோகமும் செய்வீர்களா?" என்று கேட்டார்.

"விதைகளை, இனமாக விநியோகம் செய்ய ஆரம்பித்தால், ஒரே நிமிடத்தில் இந்த மூட்டை காலியாகி விடுமே!" என்றார் அதிகாரி.

"இனமாக யாருக்கு வேண்டும், விலைக்குக் கொடுங்கள்" என்று ரோஷத்துடன் பதில் தந்தார் ராம் நாராயணன்.

இந்த நபர் உண்மையான அக்கறையுடன் தான் கேட்கிறார் என அறிந்து கொண்ட அதிகாரி, "சரி, விலை வேண்டாம். அரசாங்கத்தின் பரிசாக இதை உமக்குத் தருகிறேன்" என்று சொல்லி ஒரே ஒரு கோதுமை விதையைத் தந்தார்.

அதைப் பெற்றுக்கொண்ட ராம் நாராயண், குதூகலத்தோடு தம் நிலத்திற்கு விரைந்தார். நிலத்திற்குச் சென்ற பிறகு சற்று நிதானித்து நின்றார். "கிடைத்திருப்பதோ ஒரே ஒரு விதை. அந்த அதிகாரியும், மற்றவர்களும் கேலி பேச இடந்தராமல்; இந்த விதையை நன்றாக முளைக்கச் செய்தே ஆகவேண்டும்" என்று முடிவு செய்த அவர்; தம் நிலத்தில் தக்கதொரு இடத்தைத் தேர்ந்தெடுத்து, விதையை நட்டார். நட்ட இடத்திற்கு நன்றாக உரம் வைத்தார். தினசரி வந்து பார்வையிட்டார். ஐந்தாம் நாள் முளை வெளிக் கிளம்பியது. காலம் ஓடியது. செடி செழிப்பாக வளர்ந்து கதிரும் விட்டது. வளம் மிக்க கோதுமை மணிகள் கைநிறைய கிடைத்தன. அவற்றை மிக ஜாக்கிரதையாக; பத்திரப்படுத்தி வைத்தார்.

மற்ற விவசாயிகளும் வேண்டிக்கேட்டனர்

அடுத்த ஆண்டு, கோதுமை சாகுபடிக்கான பருவம் வந்ததும்; தம்மிடமிருந்த அரிய பொக்கிஷமான அந்த விதைகள் முழுவதையும் நிலத்தில் போட்டார்; நல்ல பலன் கிடைக்க வேண்டும் என்பதற்காக ரசாயன உரமும் பயன்படுத்தினார். இரு வாரங்களுக்கு ஒருமுறை நீர் பாய்ச்சினார். நாலரை மாதங்கள் கூட ஆகவில்லை. கோதுமை பயிர் சுமார் 6 அடி உயரம் வளர்ந்து விட்டது. இந்த அற்புதத்தைக்காண, விவசாயிகள் கூட்டம் கூட்டமாக வந்தனர். அவர்களில் சிலர், தங்களுக்கும் சிறிது விதை தரும்படிக் கேட்டனர். ஆனால்; இப்போது தாம் தருவதற்கில்லை என்று சொல்லிவிட்டார் ராம் நாரயண். அந்த முறை கிடைத்த ஐந்து சேர் கோதுமையையும், பத்திரப் படுத்தி, மறுபடி அதைக்கொண்டு பயிர் செய்தார். பொறுக்கு விதைகளினால் ஏற்படும் பலனை உணர்ந்த அவர், திருந்திய விவசாயமுறைகளைக் கையாண்டால் மேலும் பலன் கிடைக்கும் என எண்ணி அவ்விதமே செய்தார். இந்த முறை ஒன்றரை மணங்குக்கும் அதிகமான மாசூல் கிடைத்தது. தம் சிறுநிலத்திற்கு 30 சேர் விதை போதும். ஆகையால் அந்த அளவை நிறுத்திக்கொண்டு மிச்சத்தை மற்ற விவசாயிகளுக்கு வழங்கினார். அவரது அந்தச் சிறிய நிலத்திலிருந்து மட்டும், அடுத்த ஆண்டு; 19 மணங்குக்கும் அதிகமான மகசூல் கிடைத்தது.

ராம் நாராயணின் லட்சியம் நிறைவேறியது. அவருடைய புகழ் சுற்று வட்டாரம் எங்கும் பரவியது. பக்கத்து கிராமத்திலிருந்து வந்து விதை கேட்டவர்களுக்கெல்லாம், தாராளமாக வழங்கினார்; இந்த முறையில் 12 கிராமங்களைச் சேர்ந்த 16 விவசாயிகள் நல்ல பலன் அடைந்தனர்.

ஆக, ஒன்றிலிருந்து (ஒரு விதையிலிருந்து) ஒரு கோடியாக்கும் விநோதத்தை திரு ராம் நாராயண் செய்து காட்டியுள்ளார்.

இலட்சிய கிராமம் உருவாகும்

நேபாவில் இலட்சிய கிராமம் ஒன்று விரைவில் உருவாக்கப்படும். இத்திட்டத்தின் படி, நல்ல ரோடு வசதிகள், தபால் வசதிகள் கல்வி வசதிகள் பெருக்கம், சாக்கடை போன்ற துப்புரவு ஏற்பாடுகள் அபிவிருத்தி, திருந்திய விவசாயம், புதுவகையான பயிர்கள் சாகுபடி, சுகாதார ரீதியான வீடுகள் அமைத்தல் போன்ற பலவற்றிற்கும் ஏற்பாடு செய்யப்படும்.

நேபாவில் முதன்முறையாக நிர்மாணிக்கப் படவிருக்கும் இந்த இலட்சிய கிராமம், சியாங் எல்லைப்பிரிவின் தலைநகரான அலாங் என்ற இடத்திலிருந்து 7 மைல் தூரத்திலுள்ள ஜின்னிங் என்ற இடத்தில் அமையும்.

'பர்தா' முறையால் தேர்தலில் தோல்வி

நம் நாட்டில் சில சமூகத்தாரிடையே இருந்து வரும் பர்தா முறை பழக்கத்தால், பஞ்சாயத்துத் தேர்தலில் போட்டியிட்ட ஒருவர் தோல்வியுற நேரிட்டது. இச் சம்பவம் ராஜஸ்தான் மாநிலத்தைச் சேர்ந்த குர்தா பாரத்சிங் என்ற கிராமத்தில் நிகழ்ந்தது.

தேர்தலில் போட்டியிட்ட ரஜபுத்திரரான ஒரு வேட்பாளரை, அவ்வூர் முஸ்லீம்கள் ஆதரித்தனர். தேர்தலில் வெற்றி பெறுவதற்கான வழிமுறைகள் பற்றி ஆராய்வதற்காக ரஜபுத்திர சமூகத்தினரும், முஸ்லீம் சமூகத்தினரும் கூடினர். இரண்டு சமூகங்களையும் சேர்ந்த பெண்கள் பர்தா முறையை அனுஷ்டிப்பவர்கள்தான். எனினும் "தேர்தலில் நாம் வெற்றி பெற வேண்டுமானால், நமது பெண்கள் பெருவாரியாகச் சென்று வாக்களிக்க வேண்டும்" என்று முஸ்லீம்கள் யோசனை கூறினர். ஆனால் இதற்கு ரஜபுத்திரர்கள் சரிவர சம்மதம் தெரிவிக்கவில்லை. தேர்தல் நாள் வந்தது. ரஜபுத்திரப் பெண்கள் ஓட்டுச்சாவடிக்குச் செல்லக் காணோம். "சரி, நமக்கு மட்டும் என்ன?" என்று முஸ்லீம்களும், தங்கள் பெண்களை அனுப்பாமல் இருந்து விட்டனர்.

இவர்கள் இவ்வாறு நடந்துகொள்ள, போட்டி அபேட்சகர் பக்கம், பெண் வாக்காளர்கள் பர்தா முறையை ஒதுக்கி வைத்து, அன்று பெருவாரியாக வந்து வாக்களித்தனர். எனவே, அந்த அபேட்சகர் வெற்றி பெற்றார். முஸ்லீம்கள் யோசனை கூறியும், அதை ஏற்க மறுத்த ரஜபுத்திர அபேட்சகர் தோல்வியுற்றார்.

"பஞ்சாயத்து ராஜ்" இதழிலிருந்து இடம் பெறுபவை:
பக்கங்கள் 8, 9, 10, 11, 12, 13, 30, 31—(8 பக்கங்கள்)
Articles reproduced from "Panchayati Raj" on pages 8, 9, 10, 11, 12, 13, 30 and 31 (8 pages.)

1964 நவம்பர் 'கிராம நல' இதழில் வெளியான 'திருப்பிப்பார்' பகுதிக்குச் சரியான விடைகள் :—

(1) தமிழ்நாடு (2) 49,503 (3) ஜே.சி. குமரப்பா, (4) காசாங்காடு (5) காந்தி கிராமம் (6) பாரதியார் (7) 1919 (8) சிந்து (9) லாலா லஜபதிராய் (10) நீரிறைல் (11) துவரம்பருப்பு (12) சாந்தி நிகேதனம் (13) காலராவுக்கு (14) அம்மை நோய் (15) 26—1—1950.

நோக்கமும் பலனும்

பொது அறிவு வளர்ச்சிக்காகவும் அன்றாட வாழ்க்கைக்குப் பயன் படக்கூடியனவாயும் உள்ள பல தகவல்கள், ''கிராம நலத்தில்'' வெளியாகும் கட்டுரைகளில் தரப் படுகின்றன. அவற்றை ஊன்றி கவனிக்கத் தவறியவர்கள், மீண்டும் ஒரு முறை படித்துப் பலன் பெற வேண்டும் என்ற நோக்கத் துடன், 'திருப்பிப்பார்' எனும் பகுதி, 1964 நவம்பர் இதழில் ஆரம்பிக்கப்பட்டது.

எதிர்பார்க்கப்பட்டதற்கு அதிக மாகவே, இதில், நூற்றுக்கணக் கானவர்கள் உற்சாகத்துடன் பங்கு கொண்டிருப்பது மகிழ்ச்சிக்குரிய தாகும். எல்லாக் கேள்விகளுக்கும் சரியான விடை எழுதிய 90 பேர்களின் விவரம் இங்கு தரப் படுகிறது. அவர்கள் அனைவருக்கும் எமது பாராட்டுக்கள்.

இந்தச் சந்தர்ப்பத்தில் இன்னொரு வார்த்தை சொல்லாமல் இருப்பதற் கில்லை. 'திருப்பிப்பார்' (நவம்பர் மாத) பகுதியில் இடம் பெற்ற கேள்விகளுக்கான சரியான விடை களைக் கண்டறிய, பெரிதாக எங்கும் தேடி அலைய வேண்டியதில்லை. 1964 ஜனவரி, பிப்ரவரி, மார்ச் இதழ்களை மட்டும் புரட்டிப் பார்த் தால் போதும். எல்லா விடை களும் கிடைக்கும். இவ்வளவு எளிய முறை இருந்துங்கூட, பலர்

திருப்பிப் பார்!

சரியான விடை எழுதி அனுப்பியவர்கள் விவரம்

1. திருமதி ஐயாவு தேவகி, சேவூர் (வட ஆர்க்காடு).
2. திரு ஞானவேல் முருகன், முள்ளணம் (வட ஆர்க்காடு).
3. திரு சு. ஐயாவு, சேவூர் (வட ஆற்காடு).
4. திரு கே. தெய்வசிகாமணி, வைலாமூர் (வட ஆர்க்காடு).
5. திரு நா. காளிங்கராஜ், எணுகி (தஞ்சாவூர்).
6. திரு என். முனிசாமி, பட்டுக்கோட்டை (தஞ்சாவூர்).
7. திரு ஆ. சண்முகம், கொங்கணுபுரம் (சேலம்).
8. திரு எம். கோவிந்தராஜன், அரக்கோணம் (வட ஆர்க்காடு).
9. திரு எஸ். கம்பீரம், மொரப்பந்தாங்கல் (வட ஆர்க்காடு).
10. திரு பி. முருகேசன், இருகூர் (கோயம்புத்தூர்).
11. திரு ஊ. ரா. பழனிச்சாமி, திம்மணையாம்பாளையம் (கோயம்புத்தூர்).
12. திரு இரா. அருணாசலம், கழுநீர்க்குளம் (திருநெல்வேலி).
13. திரு சு அன்பழகன், செட்ஹில்ஸ் (சென்னை).
14. திரு மு. சங்கர், பாகலூர் (சேலம்).
15. திருமதி வி. சந்திரா வெண்மணச்சேரி, (தஞ்சாவூர்).
16. திரு எம். சந்தானம், எட்டரைக் கிராமம் (திருச்சிராப்பள்ளி).
17. திருமதி க. ரா. வனஜா, அருர் (சேலம்).
18. திரு எம் எஸ். மூப்பிடாதி, சின்னசேமூர் (கோயம்புத்தூர்).
19. திரு எஸ். என். கிருஷ்ணன், வடுகப்பட்டி (மதுரை).
20. திருமதி பாசு, ஸ்ரீ பெரும்புதூர் (செங்கற்பட்டு).
21. திரு எம். செல்லத்துரை, காட்டாம்பட்டி (திருச்சிராப்பள்ளி).
22. திரு ஜி. வெங்கயா, ஒட்டப்பிடாரம் (திருநெல்வேலி).
23. எஸ் ராமையா, சிலைமான் (மதுரை).
24. திரு பா. மரியதாஸ், இராதாநல்லூர் (தஞ்சாவூர்).
25. திரு ஆர். எஸ். வெள்ளையப்பன், பெரியமதியாக்கூடலூர் (திருச்சிராப்பள்ளி).
26. திரு மு. பொறையன், புதுப்பேட்டை (தென் ஆர்க்காடு).
27. வெ சின்னயா, நரிப்பட்டி (மதுரை).
28. திரு வி. இராமச்சந்திரன், குண்டத்தூர் (இராமநாதபுரம்).
29. திருமதி சு. ராஜலட்சுமி, பாலக்கோடு (சேலம்).
30. திரு எஸ். ராமானுசம் சென்னக்கரை, மண்ணச்சநல்லூர். (திருச்சிராப்பள்ளி).

31 திருமதி ஜா. கமலம், கணியம்பாடி (வட ஆர்க்காடு).

32. திரு க. நாகவேனு, செய்யானூர் (இராமநாதபுரம்).
33. திரு எஸ். எஸ். தங்கராஜ், பட்டுக்கோட்டை (தஞ்சாவூர்).
34. திரு பெ. கிருஷ்ணசாமி செட்டியார், ஆவினங்குடி (தென் ஆர்க்காடு).
35. திருமதி வி. சரோஜா, வெல்லபொம்மன்பட்டி (மதுரை).
36. திரு வி. தர்மராஜ், நெடுவயல், (இராமநாதபுரம்).
37. திரு கோ. இராமச்சந்திரன், தொத்தங்குடி, ஆலத்தம்பாடி அஞ்சல்.
38. திரு எம். வேதமாணிக்கம், எம். அம்மாப்பட்டி (மதுரை).
39. திருமதி பா. கனகவல்லி, குன்னத்தூர் (சேலம்).
40. திரு டி. கணேசன், டி கல்லுப்பட்டி (மதுரை).
41. திரு பு. அ. கனகசபை, சந்தைப்புதுப்பாளையம் (வட ஆர்க்காடு).
42. திரு என். சோமசுந்தரம், இளையாங்குடி (இராமநாதபுரம்).

43. திரு எஸ். பானுச்சாமி, அ. வலேயபட்டி (மதுரை).
44. திரு சி. வி. கோவிந்தராஜன், பவானி (கோயம்புத்தூர்).
45. திரு ஆர். அத்தியப்பன், ஓவேன்குறிச்சி (சேலம்).
46. திரு. தி. ரெ சாமிநாதன், திருச்சேறை (தஞ்சாவூர்).
47 திரு ஆ. கலியராமன், தியாகராஜபுரம் (தென் ஆர்க்காடு).
48. கே. கிருஷ்ணசாமி, பெரம்பலூர் (திருச்சி).
49. திரு எட்வர்ட் செல்லேயா, நச்சலூர் (திருச்சி).
50. திரு. கே. டி. தீனதயாளு, அரக்கோணம் (வடஆர்க்காடு).
51 திரு பி. என். துளசிராமன், வேப்பந்தட்டை (திருச்சி).
52. திரு ஆ. ஜெ. தணிகாசலம், வாலாஜா (வட ஆர்க்காடு).
53. திரு கே. பி. ஸ்ரீதரன், ரெட்டியாபட்டி (இராமநாதபுரம்).
54. திரு டி. ராமச்சந்திரன், வேலம்பாளையம் (திருச்சி).
55. திரு மாதவராமானுஜம், இராசபாண்டி (திருநெல்வேலி).
56. திரு ச. இராமர், கொடுவிலார்பட்டி (மதுரை).
57 திரு. வி. ஆர். இராகவன், (சேலம்)..
58 திரு கே. முருகேசன், வைவேஸ்புரம் (மதுரை).
59 திரு. டி. கே. மோகனசுந்தரம், வேடசந்தூர் (மதுரை).
60. திரு. வி. ஆர். ஸ்ரீனிவாஸன். வேப்பந்தட்டை (திருச்சி).
61 திரு உ. குருசாமி, கலிங்கப்பட்டி (திருநெல்வேலி).
62 குமாரி பி. செல்வமரி,காரைப்பட்டி (திருச்சி).
63. திருமதி ஆர். நவநீதம், கூத்தூர் (திருச்சி).
64 திரு ஆர் பார்த்தசாரதி,நாங்குனேரி (திருநெல்வேலி).
65. திரு சரவணபால், தெற்குமடத்தூர் (திருநெல்வேலி).
66. திரு. ஜீ. கே. முத்துக்குமாரராஜ், கோயம்புத்தூர்-6.
67. திரு எஸ். கோபாலன், கோவில்பட்டி (திருநெல்வேலி).
68 திரு. பகவதி பெருமாள். திருநெல்வேலி-6.
69. திரு எஸ். இராகவேந்திரன், தேன்கனிகோட்டை (சேலம்).
70. திரு ந. நாகசுவாமி, கடம்பத்தூர் (செங்கற்பட்டு).
71. திரு பி. லெட்சுமணன், தென்னம்பட்டி (மதுரை).
72 திரு. மா. சீனிவாசன், குளத்தூர் (சேலம்).
73. திருமதி ப. காந்திமதி, கேசரிமங்கலம் (கோயம்புத்தூர்).
74. திரு வீ. ஏ. மாதேசன், குளத்தூர் (சேலம்).
75. திரு வி. வெங்கடராமன், குள்ளப்புரம் (மதுரை).
76. திரு கோ. கேசவன், அணைக்கட்டு (வட ஆர்க்காடு).
77. திரு சி. இராமசாமி, மண்மங்கலம் (திருச்சி).
78 திரு. ஜி. நாராயணசாமி, எஸ். லட்சுமிநாராயணன், எஸ். ராமச்சந்திரன், மாங்கரப் பேட்டை (திருச்சிராப்பள்ளி).
79. திரு. க. ஆதிமூலம், நாச்சம்பட்டி (திருச்சி).
80. திரு ஏ. கணேசன், பெரமங்கலம் (திருச்சி).
81. திரு வெ சுப்பாநாயுடு, அழகர்நாய்க்கன்பட்டி (மதுரை).
82. திரு எஸ் ஆர். அருணாசலம் முத்துராஜா, திப்பிரமகாதேவி (சேலம்).
83. திருமதி மேரி லில்லி புஷ்பம், மங்களகுரிச்சி ஸ்ரீவைகுண்டம்.
84 திரு எஸ், வெங்கடாஜலபதி, வெறிச்சினம்பட்டி (திருச்சிராப்பள்ளி).
85. திரு ஆர் ஆறுமுகம் முத்துராஜா, திப்பிரமகாதேவி (சேலம்).
86. திரு ச. முத்துசாமி, சத்திரப்பட்டி (மதுரை).
87 திருமதி ச. நாலாயிரத்தம்மாள், இருக்கந்துறை (திருநெல்வேலி).
88. திருமதி கே. டி. சரஸ்வதி, அரக்கோணம் (வடஆர்க்காடு.)
89. திரு. கே. டி. உமாபதி, அரக்கோணம் (வடஆர்க்காடு)
90. திருமதி வி. கௌசல்யா, வெண்ணந்தூர், சேலம்.

தவறு செய்திருப்பது வருந்தத் தக்கது. அதிலும், பஞ்சாயத்து எழுத்தராகப் பணி புரியும் ஒருவர் மொத்தம் 15 கேள்விகளில் மூன்றே மூன்று கேள்விகளுக்கு மட்டும்தான் சரியான விடை எழுதியிருக்கிறார். ஒரு ஆசிரியை 8 கேள்விகளுக்குத் தவறான விடை அளித்திருக்கிறார். இவற்றை விட, வியப்புக்குரியது என்னவென்றால், தலைமை ஆசிரிய ராக இருக்கும் ஒருவருக்கு, நமது தேசிய கீதமே தெரியாதிருப்பது தான். தெரிந்திருந்தால், நமது தேசிய கீதத்தில் 'இலங்கை' இடம் பெற்றிருப்பதாக அவர் கூறுவாரா?

பொதுவாக, விவரம் தெரிந்த வர்கள் எனக் கருதப்படும் இந்த வகையினர் கூடத் தவறான விடை கள் அனுப்பியிருக்கிறார்கள் என்றால் அதற்குக் காரணம், அவர்கள் தாங்களே இதில் நேரடி கவனம் செலுத்தாமல், பள்ளிப்பிள்ளை களையோ மற்றவர்களையோ கொண்டு விடைகள் தயாரிக்கச் செய்து, அவை சரியாகத்தான் இருக்கும் என்று நம்பி, கையெழுத்திட்டு அனுப்பியிருப்பார்களோ என்றுகூட எண்ணத் தோன்றுகிறது. எப்படி யிருப்பினும், வாசக அன்பர்களுக்கு எமது வேண்டுகோள் இது தான். இந்தப்பகுதி, பரிசுப் போட்டியோ, லாட்டரியோ அல்ல. பயனுள்ள தகவல்களை அனைவரும் அறியச் செய்வதே நோக்கம். உதாரணமாக, புரோடயரியா மிக்சர் என்பது காலராவுக்குப் பயன்படும் மருந்து என்ற தகவல், அதைத் தெரிந்து வைத்துக்கொள்கிறவருக்குத் தான், தக்க சமயத்தில் பயன்படும். ஆகையால், அந்தச் சொந்த அக்கறையுடன் இப்பகுதிக்கு விடை காண முயல்வது அவசியம். இந்த முறையில் வாசக அன்பர்கள் பலன்பெற விழைகிறோம்.

நவம்பர் மாத 'திருப்பிப்பார்' பகுதியின் சரியான விடைகளும், சரியான விடைகள் எழுதியனுப்பிய வர்கள் பட்டியலும் எதிரில் தரப் பட்டுள்ளன.

டிசம்பர் மாதப் பகுதியின் முடிவு விவரம் ஏப்ரல் இதழில் வெளியிடப்பெறும்.

— ஆசிரியர்

உடலுரத்துக்கு உகந்த உணவு
- வேர்க்கடலை -

தென்னாட்டில் அபரிமிதமாகப் பயிராகும் வேர்க்கடலை ஒரு சத்துள்ள உணவாகும். ‘அதை நாம் நன்கு பயன்படுத்திக்கொள்வதில்லை’ என்கிறார் ஓர் உணவு ஆராய்ச்சி நிபுணர்.

“எவ்வளவோ பொருட்களை உணவாக உபயோகித்து இத் தென்னிந்தியர்கள் பயன் பெறலாம். ஆனால், அவர்கள் அரிசியையே நம்பியிருக்கிறார்கள். என்ன விதமான பலகாரம் செய்தாலும், அவர்களுக்கு அரிசியில்லாமல் செய்யத்தெரியாது” என்று ஒரு சமயம் காந்திஜி “ஹரிஜன்” பத்திரிகையில் எழுதினார். சத்துள்ள ஆகாரம் வேர்க்கடலையில் இருக்கிறது என்பதை அவர் உணர்ந்து, அதை தன் முக்கியமான ஆகாரமாகவும் கொண்டிருந்தார். ஆனால், அந்த வேர்க்கடலையை நாம் தக்கபடி பயன்படுத்துவதில்லையே” என்று கூறுகிறார் திருமதி லீலா பட்னீஸ் என்கிற உணவு சத்து நிபுணர்.

அமெரிக்காவில் நான்கு வருட காலம் உணவு சத்து பற்றிய ஆராய்ச்சிகளை எல்லாம் செய்து முடித்தபின், இப்போது பம்பாயில் லேடி தேக்கர்ஸே நடத்தும் எஸ். என். டி. டி. கல்லூரியில் உணவு சத்துத்துறை ரீடராக, இவர் பணியாற்றி வருகிறார்.

நமது தாவர உணவுப் பொருட்கள் நம் போஷாக்குக்குப் போதுமானவை யென்றும், மாமிச உணவில் கிடைக்கும் பெரும் அளவு புரதச்சத்தை வேர்க்கடலையில் இருந்து நாம் பெறலாம் என்றும் அவர் கூறுகிறார்.

நம் உடலுக்குத் தேவைப்படும் உணவு சத்து பற்றி மேலும் அவர் கூறுகிறார் —“சாதாரணமான உடலுழைப்பு வேலை செய்யும் ஒருவருக்கு, தினம் 82 கிராம் புரதச்சத்து உணவில் இருக்கவேண்டும். இதில் 29 சதவிகிதம் பிராணி சம்பந்தப்பட்ட புரதச் சத்தாக இருக்கவேண்டும் என்று நிபுணர்கள் கூறுகின்றனர். அதாவது பால், மீன், முட்டை இவைகளிலிருந்து கிடைப்பதாக இருக்கவேண்டும். விவசாயிகளின் உணவு பற்றி ஆராய்ந்த விவசாயத் தொழில் விசாரணைக் கமிட்டியினர், ஒரு விவசாயின் உணவில் புரதச் சத்து தேவையாக இருக்கவேண்டிய 82 கிராமிற்கு 18 சதவிகிதம் குறைவாகவே இருக்கிறது என்று கண்டுபிடித்திருக்கின்றனர். இக்குறையை வேர்க்கடலையை உணவாக உபயோகிப்பதன் மூலம் ஈடு செய்துவிடலாம்.

எண்ணெய் நீக்கிய வேர்க்கடலை சத்தைக் கொண்டு பலவித உபயோக (Multi-purpose) உணவு ஒன்றை பெங்களூரிலுள்ள மத்திய உணவு டெக்னாலாஜிகல் ஸ்தாபனம் தயாரித்துள்ளதென்றும், தக்க உணவுச் சத்து கிடைக்க ஏழைகளும் இதை உபயோகிக்கலாம் என்றும் அவர் கூறுகிறார். தமிழ் நாடு அரசாங்கம் இந்த உணவை பள்ளிகளில் மதிய உணவு விநியோகிப்பதிலும் பயன்படுத்துவதை அவர் சுட்டிக் காட்டுகிறார்.

“அரிசி சாப்பிடுவதால் அதிகக் குழந்தைகள் பிறக்கிறது என்கிறார்களே, உங்கள் கருத்து என்ன” என்று கேட்டதற்கு, “இதுவரை ஆராய்ச்சி பூர்வமாக அதற்கு ஆதாரம் எதுவும் கிடைக்கவில்லை. இன்னும் இது விஷயமாக ஆராய்ச்சிகள் முடிந்தபாடில்லை”. என்கிறார் அவர்.

மனிதர்களின் உணவில் முக்கியமாக இருக்கும் பத்து அமினோ அமிலங்கள் அரிசியிலும் கோதுமையிலும் குறைவாக இருக்கிறதென்றும், வேர்க்கடலையை உபயோகிப்பதன் மூலம் அக்குறைபாட்டை நீக்கமுடியுமென்றும் அவர் கூறுகிறார். இந்த வேர்க்கடலையையும்தான் நாம் இப்போது முதற்கொண்டு பயன்படுத்த ஆரம்பிப்போமே!

‘நந்தலால்’

பதநீரைப் பனிக்கட்டியாக உறைய வைக்கலாம்!

சென்னை மாநிலப் பனைவெல்லக் கூட்டுறவுச் சம்மேளன ஆராய்ச்சிப்பிரிவு, பதநீரை குறைந்த குளிர் நிலையில் உறையவைத்தால், அதன் சுவையும் மணமும் மாறாது எனக் கண்டு பிடித்துள்ளது. பதநீரை உறையவைத்து, நீண்ட நாட்கள் வரை கெடாமல் வைத்துக் கொள்ளலாம்.

பனிக்கட்டியாக்குவதால், பதநீரின் மணமும், சுவையும் அதிகரிக்கிறது. அதிகமாக உள்ள சுண்ணாம்புக்காரம் எரிப்பதில்லை. புத்தம் புதிய பதநீரைப் பருகுவது போல் சுவையாக உள்ளது.

கிராம நலம்
பகுதி-2
GRAMANALAM
PART 2

பஞ்சாயத்து அரசிதழ்
PANCHAYAT GAZETTE

(பஞ்சாயத்து அபிவிருத்திபற்றிய அரசாங்க ஆணைகள், விதிகள் முதலியவற்றின் சுருக்கம் இந்தப் பகுதியில் இடம்பெறுகிறது.)

சில பஞ்சாயத்துக்களின் அங்கத்தினர்கள் பஞ்சாயத்து யூனியன் மன்றத்தின் அங்கத்தினர்களாக ஆக்கப்படுகிறார்கள்.

Act—Madras Panchayats Act, 1958—Specified panchayats—Notified.

(G. O. Ms. No. 385, R.D. and L. A., dated 20th February 1965.)

இவ்வாணையின் பிற்சேர்க்கையிலுள்ள அறிவிப்பு, செயின்ட் ஜார்ஜ் கோட்டை அரசிதழில் பிரசுரமாகும்.

பிற்சேர்க்கை

அறிவிப்பு

1958-ம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்துச் சட்டத்தின் (1958-ம் ஆண்டு தமிழ்நாடு சட்டம் 35), பிரிவு 12-ல் உள்ள, உட்பிரிவு 2-ன் விதி (1)-ல் கண்டுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி, தமிழ்நாடு கவர்னர் அவர்கள், கீழ்க்கண்ட அட்டவணையில் (2)-வது பத்தியில் கொடுக்கப்பட்டுள்ள பஞ்சாயத்து யூனியனில், அதற்கு நேராக (3)-வது பத்தியில் கொடுக்கப்பட்டுள்ள, பஞ்சாயத்துக்களின் அங்கத்தினர்கள் (தலைவர், துணைத்தலைவரையும் சேர்த்து) அதற்கு நேராக 4-வது பத்தியில் கொடுக்கப்பட்டுள்ள பஞ்சாயத்து யூனியன் மன்றத்தில் 1965-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ம் தேதி முதல் அங்கத்தினராக ஆவார்கள் என்று உத்தரவு பிறப்பிக்கிறார்.

அட்டவணை

வரிசை எண். (1)	பஞ்சாயத்து யூனியன் பெயர். (2)	பஞ்சாயத்துக்களின் பெயர். (3)	பஞ்சாயத்து யூனியன் மன்றத்தின் பெயர். (4)
		I. கன்னியாகுமரி மாவட்டம்	
1.	அகஸ்தீஸ்வரம்	(1) கன்னியாகுமரி	அகஸ்தீஸ்வரம்
		(2) அகஸ்தீஸ்வரம்	
		(3) அழகப்பபுரம்	
		(4) மருங்கூர்	
		(5) தாமரைக்குளம்	
		(6) சுசீந்திரம்	
2.	இராஜக்கமங்கலம்	(1) புத்தளம்	இராஜக்கமங்கலம்
		(2) இராஜக்கமங்கலம்	
		(3) நீண்டகரை-வடசேரி	
		(4) தெங்கம்புதூர்	
		(5) தர்மபுரம்	
3.	முஞ்சிரா	(1) கொல்லங்கோடு	முஞ்சிரா
		(2) ஏழுதேசம்	
		(3) ஆறுதேசம்	
		(4) மெதுகும்மல்	
		(5) பைங்குளம்	
		(6) குன்னத்தூர்	

வரிசை எண். (1)	பஞ்சாயத்து யூனியன் பெயர். (2)	பஞ்சாயத்துக்களின் பெயர். (3)	பஞ்சாயத்து யூனியன் மன்றத்தின் பெயர். (4)
4.	கிள்ளியூர்	(1) கீழ்குளம்	கிள்ளியூர்
		(2) கிள்ளியூர்	
		(3) மிடாலம்	
		(4) கீழ்மிடாலம்	
		(5) நட்டாளம்	
5.	மேல்புரம்	(1) விளவங்கோடு	மேல்புரம்
		(2) பாகோடு	
		(3) அருமனை	
		(4) பளுகல்	
		(5) இடைக்கோடு	
6.	குருந்தன்கோடு	(1) கொளச்சல்	குருந்தன்கோடு
		(2) மணவாளகுறிச்சி	
		(3) கடியபட்டணம்	
		(4) தலக்குளம்	
		(5) வில்லுக்குறி	
7.	தோவாளை	(1) அழகியாண்டபுரம்	தோவாளை
		(2) பூதப்பாண்டி	
		(3) தாழக்குடி	
		(4) தோவாளை	
		(5) ஆரல்வாய்மொழி	
8.	தக்கலை	(1) இரணியல்	தக்கலை
		(2) திருவிதங்கோடு	
		(3) வான்வச்சகோஷ்டம்	
		(4) கோதநல்லூர்	
9.	திருவட்டார்	(1) ஆத்தூர்	திருவட்டார்
		(2) திருவட்டார்	
		(3) மேக்கோடு	
		(4) பொன்மனை-அருவிக்கரை	
		(5) திர்ப்பரப்பு	
		II. திருநெல்வேலி மாவட்டம்	
10.	செங்கோட்டை	(1) அச்சன்புதூர்	செங்கோட்டை
		(2) சாம்பவர்வடகறை	
		(3) கற்குடி	
		(4) ஆயக்குடி	
		(5) இலத்தூர்	
		(6) புலியறை	

(கிராம நல-தல நிர்வாகத்துறையின் 1965-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 20-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 385.)

விருத்தாசலம் பஞ்சாயத்து யூனியனில் சில கிராமங்கள் சேர்க்கப்படுகின்றன.

Panchayat Union—Constitution—South Cuddalore Development District—Vridhachalam Panchayat Union—Inclusion of Certain Villages—Orders issued.

(G.O. Ms. No. 249, R. D. and L. A., dated 2nd February 1965.)

"விஜயமா நகரம்" பஞ்சாயத்திலுள்ள "மூப்பரூர்" என்ற பாதுகாக்கப்பட்ட காட்டுப்பகுதியும் "புது கூரப்பேட்டை" பஞ்சாயத்திலுள்ள "குப்பநத்தம்" என்ற பாதுகாக்கப்பட்ட பகுதியும், தென் ஆர்க்காடு அபிவிருத்தி மாவட்டத்திலுள்ள விருத்தாசலம் பஞ்சாயத்து யூனியனில் சேர்க்கப்படுகிறது என்று அரசாங்கம் ஆணை பிறப்பிக்கிறது.

(கிராம நல தல நிர்வாகத் துறையின் 1965—ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 2—ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 249—ன் சுருக்கம்.)

சென்னிமலை (கோயம்புத்தூர் மாவட்டம்) வட்டாரத்தின் தலைமையிடம் பெருந்துறையிலிருந்து சென்னிமலைக்கு மாற்றப்படுகிறது.

Panchayat Development—Coimbatore District—Chennimalai Block—Fixation of Headquarters at Chennimalai—Orders issued.

(G. O. Ms. No. 307, R.D. and L.A., dated 10th February 1965.)

கோயம்புத்தூர் மாவட்டம், ஈரோடு தாலுக்காவிலுள்ள பெருந்துறை I, பெருந்துறை II, ஊத்துக்குளி வட்டாரங்களின் எல்லைகள் கீழ்க்கண்டவாறு மறு நிர்ணயம் (Re-delimited) செய்யப்பட்டுள்ளது என்று கிராம நல-தல நிர்வாகத்துறையின் 1963-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 19-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 1850-ல் அரசாங்கம் ஆணை பிறப்பித்துள்ளது.

வட்டாரத்தின் பெயர்	அடங்கியுள்ள இடம்
1. பெருந்துறை	பெருந்துறை பிர்க்கா (Firka)
2. சென்னிமலை	சென்னிமலை பிர்க்கா
3. ஊத்துக்குளி	ஊத்துக்குளி பிர்க்கா

இவ்வாறு எல்லை மறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள அபிவிருத்தி வட்டாரங்களை, பஞ்சாயத்து யூனியன்களாக ஏற்படுத்தி, 1958-ம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்துச் சட்டத்தின் கீழ், தேவையான அறிவிப்புகளை, கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1964-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 1015-ல், அரசாங்கம் வெளியிட்டுள்ளது. இந்த அபிவிருத்தி வட்டாரத்தை, சென்னிமலை பஞ்சாயத்து யூனியன் என்று பெயரை மாற்றி உத்திரவுகள் பிறப்பிக்கப்பட்டிருந்த போதிலும், இவ்வட்டாரத்தின் தலைமையிடம் பெருந்துறையிலேயே தொடர்ந்து இருந்து வந்துள்ளது. இந்த வட்டாரத்தின் தலைமையிடத்தை சென்னிமலையிலேயே அமைத்து விடலாம் என்று கோயம்புத்தூர் கூட்டு ஆட்சித் தலைவர் சிபாரிசு செய்துள்ளார். தகுந்த அலுவலகக் கட்டிடங்கள் கட்டி முடிக்கப்படும் வரை, சென்னிமலை பஞ்சாயத்து யூனியனின் அலுவலகத்தை, தற்காலிகமாக ஒரு வாடகை கட்டிடத்தில் அமைக்கலாம் என்றும், அதற்கேற்ப உத்தரவுகளை பிறப்பிக்கலாம் என்றும், அவர் மேலும் கூறியுள்ளார். இந்த வட்டாரத்தின் தலைமையிடத்தை, சென்னிமலையிலேயே ஏற்படுத்தலாம் என்ற கூட்டு ஆட்சித் தலைவரின் யோசனையை, சென்னிமலை பஞ்சாயத்து யூனியனும் ஒப்புக்கொண்டுள்ளது.

2. கோயம்புத்தூர் கூட்டு ஆட்சித் தலைவரின் சிபாரிசுகளை அரசாங்கம் பரிசீலனை செய்தது. அதன் பேரில், சென்னிமலை வட்டாரத்தின் தலைமையிடம் சென்னிமலையிலேயே இருக்கவேண்டும் என்று அரசாங்கம் ஆணை பிறப்பிக்கிறது. அலுவலகக் கட்டிடங்கள் கட்டி முடிக்கப்படும் வரை, இப்பஞ்சாயத்து யூனியனின் அலுவலகத்தை, தற்காலிகமாக ஒரு வாடகை கட்டிடத்தில் ஏற்படுத்த கூட்டு ஆட்சித் தலைவருக்கு அரசாங்கம் அனுமதியளிக்கிறது.

(கிராம நல—தல நிர்வாகத்துறையின் 1965-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 10-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 307.)

முக்கிய அறிவிப்பு

பஞ்சாயத்து தலைவர் தேர்தல் மீண்டும் ஒத்திவைப்பு

1965-ம் ஆண்டு மார்ச் மாதம் 29, 30, 31 தேதிகளில் நடைபெறுவதாக இருந்த பஞ்சாயத்துத் தலைவர்கள் தேர்தலை, 1965, ஏப்ரல் 17-ம் தேதி முதல் 19-ம் தேதிகளுக்கு மீண்டும் ஒத்திவைத்து அரசாங்கம் உத்தரவிட்டிருக்கிறது.

1965, ஏப்ரல் 20-ம் நாள், பஞ்சாயத்து யூனியன் அங்கத்தினர்கள் பதவி ஏற்பார்கள்.

பஞ்சாயத்து யூனியன்கள் விற்பனை செய்யும் பொருள்கள் மீது விற்பனை வரி வசூலித்தல்

Panchayat Unions—Collection of sales-tax on sales made by the Panchayat Unions—Accounting procedure—Instructions issued.

(Memorandum No. 103043, R.D. and L.A., dated 30th January 1965.)

பஞ்சாயத்து யூனியன்கள் விற்பனை செய்யும் விவசாயக் கருவிகள்மீது விற்பனைவரி விதிக்கப்பட்டு வசூலிக்கப்படவேண்டும் என்று வருவாய்துறையின் 1964-ம் ஆண்டு மே மாதம் 25-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 1485-ல் அரசாங்கம் ஆணை பிறப்பித்துள்ளது. இவ்வாறு வசூலிக்கப்படும் விற்பனை வரிகளை, பஞ்சாயத்து யூனியன்கள் அரசாங்கக் கணக்குகளில் செலுத்தவேண்டும். இதற்காக, கீழ்க்கண்ட கணக்கு நடைமுறைகளை பின்பற்றி, வசூலிக்கப்பட்ட விற்பனை வரிகளை ஒழுங்காக அரசாங்கத்திற்கு செலுத்தவேண்டும் என்று பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர்களுக்கு உத்தரவு இடப்படுகிறது.

2. பொருள்கள் விற்பனை செய்யப்பட்டு, விற்பனை வரி வசூலிக்கப்படும்போது, விற்பனை வரி தவிர்த்து, எஞ்சியுள்ள விற்பனை தொகையை, பஞ்சாயத்து யூனியனின் சம்பந்தப்பட்ட கணக்கில் வரவு வைக்கவேண்டும்; விற்பனை வரியை, பஞ்சாயத்து யூனியன் படிவம் எண் 82-ல், "E. Deposits and Advances—Account—Receipts—1. Deposits" என்ற கணக்குத் தலைப்பின்கீழ் வசூலிக்கப்பட்ட விற்பனை வரி (Sales Tax collected) என்ற விரிவான கணக்குத் தலைப்பில் எழுதவேண்டும். விற்பனைத் தொகையையும், விற்பனைவரித் தொகையையும் தனித்தனியாக ரொக்கப் பதிவேட்டில் (Cash Book) காண்பிக்கவேண்டும். ஒவ்வொரு மாதமும் 15-ம் தேதிக்கு முன், சென்ற மாதம் நடைபெற்ற விற்பனையை பொறுத்து, ஒரு அறிக்கை தயாரிக்கவேண்டும். இந்த அறிக்கையின்படி, சென்ற மாதம் வசூலிக்கப்பட்டுள்ள விற்பனை வரியின் மொத்த தொகைக்கு, தலநிதி டெபாசிட் கணக்கு 1-ன் பேரில், தன் பெயரிலேயே உண்டியல் எழுதி, அந்தத் தொகையை சம்பந்தப்பட்ட கருவூலத்தில், அரசாங்கக் கணக்கில், பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர்கள் செலுத்தவேண்டும். பஞ்சாயத்து யூனியன் கணக்குகளை பொறுத்தவரை, இவ்வாறு அரசாங்கத்திற்கு செலுத்தப்படும் தொகைகள், பஞ்சாயத்து யூனியன் படிவம் எண் 82-ல் "E. Deposits and Advances-Account–Expenditure—1. Deposits" என்ற கணக்குத் தலைப்பின்கீழ் "அரசாங்கத்திற்கு செலுத்தப்பட்ட விற்பனை வரி" என்ற விரிவான கணக்கில் பற்று வைக்கப்படும்.

3. அரசாங்க துறைகளுக்கு வரியை பொறுத்த மட்டில் மதிப்பீடு செய்யத் தேவை இல்லை என்றும், துறைகள் வசூலித்த விற்பனை வரிகளை அவைகள் கருவூலத்தில் செலுத்தி, கீழ்க்கண்டவைகளை பொறுத்து ஒரு மாதாந்திர அறிக்கையை அந்தப் பகுதி மதிப்பீடு அதிகாரிக்கு (Assessing Officer) அனுப்பிவிட்டால் போதுமானது என்றும், அரசாங்கம் வருவாய்த்துறையின் 1962-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 1-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 3644-ல் உத்தரவு பிறப்பித்துள்ளது.

1. அலுவலகத்தின் பெயரும், இடமும்;
2. பொருள்கள் வாங்கியவரின் பெயர்;
3. விற்கப்பட்ட பொருள்களின் தன்மை;
4. மதிப்பு;
5. வரி விகிதம்;
6. செலுத்தப்பட்ட விற்பனை வரித் தொகையும், தேதியுடன் கூடிய செலான் எண்ணும்.

வருவாய்துறையின் 1963-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ம் தேதியிட்ட அரசாங்க அறிக்கை 44846-ல் மேற்கண்ட உத்தரவுகள் பஞ்சாயத்து யூனியன்கள் செய்யும் விற்பனைக்கும் பொருந்துமாறு செய்யப்பட்டுள்ளது. ஆகவே, தொடருகிற மாதம் 25-ம் தேதிக்கு முன்பாகவே, ஒரு மாதாந்திர அறிக்கையை, மேற்கண்ட படிவத்தில், அந்தப் பகுதி மதிப்பீடு அதிகாரிக்கு பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர்கள் அனுப்பிவைக்கவேண்டும்.

(கிராம நல–தல நிர்வாகத்துறையின் 1965-ம் ஆண்டு ஜனவரி மாதம் 30-ம் தேதியிட்ட அரசாங்க அறிக்கை 103043).

பஞ்சாயத்து யூனியன்களும், பஞ்சாயத்துக்களும் நன்கொடை அளிப்பது பற்றி விளக்கம்.

Contributions—Panchayat Unions and Panchayats—Payment to Local institutions—Instructions issued.

(G.O. Ms. No. 353, R.D. and L.A., dated 17th February 1965.)

பஞ்சாயத்து யூனியனோ அல்லது பஞ்சாயத்தோ, தர்மநிதி அல்லது ஏழை மக்களுக்கு நிவாரணம் அளிக்கும் காரியங்கள் ஆகியவற்றிற்கு, ஆய்வாளரின் (Inspector) ஒப்புதலுடன் நன்கொடை அளிக்கலாம் என்று 1958-ம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்துச் சட்டத்தின் 139(4) (ii) பிரிவில் கூறப்பட்

டுள்ளது. தற்சமயம், சந்தர்ப்பத்திற்கேற்ப, அரசாங்கம், கூட்டு அபிவிருத்திக் கமிஷனர் அல்லது மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோரின் நிலையான உத்திரவுகளின்படி, பெருவாரியான நிறுவனங்கள், தலத் துறைகளின் உதவிகளைப் பெற்று வருகின்றன. நடைமுறையில் உள்ள உத்தரவுகளின் அடிப்படையில் இதர நிறுவனங்களும் அவைகளுக்கு வருடாந்திர நன்கொடை அளிக்க, தலதுறைகளுக்கு உரிமை அளிக்கும்படி அரசாங்கம், கூட்டு அபிவிருத்திக் கமிஷனர், மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோரை அணுகுகின்றன.

2. பெருவாரியான நிறுவனங்கள் இவ்வாறு உதவிக் கோரும் நிலையை முன்னிட்டு, தற்போதைய சூழலில் உதவிப் பெற்று வரும் நிலையை, மறுபரிசீலனை செய்யவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. தற்போது நிலவி வரும் 'உதவிப் பெரும் ஒப்புதல் முறையில்' நிதிக் கோரிவரும் நிறுவனங்களின் கோரிக்கைகளை—குறிப்பாக அவைகளின் நிதி நிலைமை, அரசினரிடமிருந்து உதவி கிடைப்பதாய் இருந்தால் அத்தகைய நன்கொடை ஆகியவற்றின் அடிப்படையில்—ஆழ்ந்து பரிசீலனை செய்ய இயலுவதில்லை. இத்தலத்துறைகளின் பொருளாதார நிலைமை ஒரு வரம்புக்கு உட்பட்டு இருக்கும் நிலையில், அவைகளின் செலவினங்களோ, படிப்படியாக உயர்ந்துக்கொண்டேயிருக்கின்றன. எத்தகைய நியாயமான செயலுக்கு நிதி கோரிய போதிலும் பஞ்சாயத்து யூனியன்களோ, பஞ்சாயத்துக்களோ தர்ம ஸ்தாபனங்களுக்கு நிதியளிக்கும் தாராள சிந்தையில், அவைகளின் முக்கிய பொறுப்புக்களை பாதிக்கும்படியாக நன்கொடை அளிக்கப்படலாகாது. மேலும் பஞ்சாயத்து யூனியன்களும், பஞ்சாயத்தும் கணிசமான தொகையை, கடனாகவும், உதவித் தொகையாகவும் அரசாங்கத்திடமிருந்து பெறுகின்றன. அத்தகைய தொகையை அவர்களால் தர இயலாத தர்ம காரியங்களுக்கு வேற்றுமையின்றி அளிப்பதன் மூலம், அவைகளின் நிதி, சிதறிப் போகும்படி செய்யலாகாது. இத்தகைய, சூழ்நிலையில் இந்த விஷயத்தைப் பற்றி, இதுவரை வெளியிடப்பட்டுள்ள எல்லா முந்தைய உத்தரவுகளுக்கும் மேலாக, பஞ்சாயத்து யூனியன்களும், பஞ்சாயத்துக்களும் இதற்கு முன்னர் எந்த நிறுவனங்களுக்கு நன்கொடை அளித்திருந்தாலும் கூட, சந்தர்ப்பத்திற்கேற்ப, கூட்டு அபிவிருத்திக் கமிஷனரிடமும், மாவட்ட ஆட்சித் தலைவரிடமும் இனி நன்கொடையளிக்க முன்னதாக ஒப்புதல் பெறவேண்டும் என்று அரசாங்கம் ஆணை பிறப்பிக்கிறது.

3. 1958-ம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்துச் சட்டத்தின் பிரிவு 139 (4)(ii)-ன் கீழ், நன்கொடையளிக்க ஒப்புதல் பெறுவதற்காக கோரிக்கைகள், இந்த உத்தரவுடன் இணைக்கப்பட்டுள்ள அமைந்த படிவத்தில், (Pro forma) தேவையான விபரங்களை, முறையாக பூர்த்திச் செய்து, கூட்டு அபிவிருத்திக் கமிஷனரின் பரிசீலனைக்காகவும், ஒப்புதலுக்காகவும் அனுப்பவேண்டும். பஞ்சாயத்துக்களுக்கு ஒப்புதல் அளிக்கும்போது, இதே முறையை பின்பற்றும்படி மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக்கொள்ளப்

தற்காலிக பஞ்சாயத்துத் தலைவருக்குள்ள அதிகாரங்களின் வரைமுறைகள்

1958-ம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்துச் சட்டத்தின் (1958-ம் ஆண்டு தமிழ்நாடு சட்டம் 35) 34-வது பிரிவைச் சேர்ந்த (3) உட்பிரிவின்படி நியமிக்கப்பட்டுள்ள தற்காலிக பஞ்சாயத்துத் தலைவர்கள், தலைவர்களின் கடமைகளை நிறைவேற்றும்போது கீழ்க்கண்ட காரியங்களைச் செய்ய அவர்களுக்கு அதிகாரம் இல்லை :—

(1) பஞ்சாயத்தில் பணிபுரியும் எந்த அதிகாரி, அல்லது அலுவலரை நியமித்தல், உத்தியோக உயர்வு அளித்தல், தண்டித்தல் ;

(2) மார்க்கெட்டுகள், ஆடு மாடுகள் கொல்லுமிடங்கள், மீன் பிடிப்பு மற்றும் இதர இனங்களைப் பொறுத்து வருடாந்திர ஏலங்களை விடுதல் ;

(3) பஞ்சாயத்தின் சார்பாக ஒப்பந்தங்கள் செய்தல் ; மற்றும் சம்பளப்பட்டியல்கள், மின்சாரக் கட்டணங்கள் ஆகியவற்றைத் தவிர மற்ற காரியங்களுக்காக பஞ்சாயத்து நிதியிலிருந்து உண்டியல்கள் மூலம் பணம் பெறுதல்.

(4) நிர்வாகத்தைப் பொறுத்து பொது மக்களிடமிருந்து வந்துள்ள விண்ணப்பங்கள், குறைகள் போன்றவற்றின்மீது, முடிவான உத்தரவுகளைப் பிறப்பித்தல் ;

(5) பஞ்சாயத்து அதிகாரிகளுக்கும், அலுவலர்களுக்கும், சில்லறை விடுமுறையைத் (Casual leave) தவிர, மற்ற விடுமுறைகளை அளித்தல் ;

(6) வீட்டு வரியில் திருத்தம் கோரி வந்துள்ள விண்ணப்பங்கள் மீது உத்தரவுகள் பிறப்பித்தல் ;

(7) பஞ்சாயத்து உறுப்பினராகச் சேர்த்துக்கொள்வதற்காக, பஞ்சாயத்துக் கூட்டத்தைக் கூட்டுதல்.

(கிராம நல-தல நிர்வாகத்துறையின் 1965-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 26-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 476, 1965-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 4-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 532 ஆகியவற்றின் சுருக்கம்.)

படுகிறார்கள்; பஞ்சாயத்து யூனியன்கள் இந்த முறைகளை சரியானபடி பின்பற்றுவதில் பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர்கள் தங்கள் தனிப்பட்ட முறையில் பொறுப்புடையவர் ஆவார்கள்.

இணைப்பு

பஞ்சாயத்து யூனியன்கள், பஞ்சாயத்துக்கள் உள்ளூர் நிறுவனங்களுக்கு நன்கொடை அளிக்க அனுமதி கோரும் கோரிக்கையோடு இணைக்கப்படவேண்டிய அமைந்தபடிவம் (Pro forma).

1. பஞ்சாயத்து யூனியன்/பஞ்சாயத்தின் பெயர்;

2. நன்கொடையை பெற இருக்கும் நிறுவனத்தின் பெயர்;

3. அது அமைந்திருக்கும் இடம்;

4. (a) அந்த நிறுவனம் அரசாங்கத்திடமிருந்து ஏதேனும் உதவிப் பெறுகிறதா? அப்படியெனில் எத்தகைய உதவி;

(b) இதர வருமான அம்சங்கள்; அதாவது, நன்கொடைகள் போன்றவை;

(c) பஞ்சாயத்து யூனியன்/பஞ்சாயத்திலிருந்து நன்கொடையாக எதிர்பார்க்கும் தொகை;

(d) ஆண்டு ஒன்றுக்கு, அந்த நிறுவனத்தை நிர்வகிக்க எதிர்பார்க்கும் செலவு.

5. நிறுவனங்களின் செயல்கள் (அந்த நிறுவனத்தின் அண்மை ஆண்டு நிர்வாக அறிக்கை யிருப்பின், அதன் ஒரு நகலைப் பெற்று இணைத்து அனுப்புதல் வேண்டும்.)

6. (a) பஞ்சாயத்து யூனியன்/பஞ்சாயத்து ஆகியவை அதன் பொறுப்புகளுக்குக் குந்தகம் விளையாவண்ணம் நன்கொடை யளிக்க இயலுமா?

(b) அப்படியெனில், வரவு-செலவு திட்டத்தில் (Budget) கூறப்பட்டுள்ளபடி, நிதி நிலைமையின் விவரங்களைத் தருக.

7. பஞ்சாயத்து யூனியன்/பஞ்சாயத்து, நிதி ஆண்டில் இதே போன்று வேறு நிறுவனங்களுக்கு நன்கொடை அளித்துள்ளதா? ஆமெனில், அதற்குறிய விபரங்கள் :

8. வருவாய்க் கோட்ட அதிகாரியின் குறிப்புகள்: குறிப்பாக, நன்கொடையைக் கோரும் இயக்கத்தின் நிதி நிலையைப்பற்றி.

9. மாவட்ட ஆட்சித் தலைவரின் சிபாரிசு.

(கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1965-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 17-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 353.)

கோழி வளர்ப்புக்கு உதவித்தொகை அளிப்பதில் மாற்றங்கள்.

Panchayat Development—Animal Husbandry—Grant of subsidy for poultry development—Orders in G.O. Ms. No. 157, R. D. and L. A., dated 21st January 1963—Modified.

(Memorandum No. 51176, R.D. and L.A., dated 27th January 1965.)

தனிப்பட்டவர்கள், கோழி வளர்ப்புச்சாதனங்களை வாங்குவதற்கு ஏற்படும் செலவில், 50 சதவீதத்தை—அதிக அளவாக ரூ. 100 வரை உதவித் தொகையாக (subsidy) அளிக்கவேண்டும் என்றும், அவ்வாறு உதவித்தொகைகளை பெறுபவர்கள், இரண்டு ஆண்டுகளுக்கு 20-க்கு, குறையாமல், கோழிகளை தங்கள் பண்ணைகளில் வளர்க்கவேண்டுமென்றும், உதவித்தொகைகளை கொண்டு வாங்கிய அச்சாதனங்களை, தேவைப் படும்போது பரிசோதனைக்காக காண்பிக்கவேண்டும் என்றும், கிராம நல-தல நிர்வாகத்துறையின் 1963-ம் ஆண்டு ஜனவரி மாதம் 21-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 157-ல் அரசாங்கம் ஆணை பிறப்பித்துள்ளது.

2. கிராம நல-தல நிர்வாகத்துறையின் 1961-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 8-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 2460-ல் கூறப்பட்டுள்ள, எந்த நிபந்தனைகளுக்கும் உட்படாமல், தனிப் பட்டவர்கள் கோழி வளர்க்க, கோழிவளர்ப்புச் சாதனங்களும் கோழிகளும், பாதி விலைக்கு அளிக்கப்படவேண்டும் என்று 1964-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 25-ம் தேதி அன்று கூடிய வடக்கு வேலூர் மாவட்ட அபிவிருத்தி மன்றத்தின் கூட்டத்தில் சிபாரிசு செய்யப்பட்டுள்ளது. இந்த சிபாரிசு, 1964-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29-ம் தேதி அன்று ஒசூரில் நடந்த பிராந்திய வளர்ச்சி அதிகாரிகள் (கால்நடை பராமரிப்பு) மகாநாட்டில், ஆலோசனை செய்யப்பட்டது. அதில், தற்போது தரப்படும் உதவித் தொகை மிகவும் குறைந்ததாய் இருப்பதால், இந்த திட்டம் நல்ல பயனளிக்கக்கூடியதாய் இல்லை என்பதே அங்கு நிலவிய எண்ணமாகும். கோழிகளும், கோழிவளர்ப்புச் சாதனங்களும் உடையவர்களுக்கு, உதவித்தொகையை பணமாகவே அளிக்கவேண்டும் என்றும், அல்லது கோழி வளர்ப்பு பண்ணையை துவங்க வசதியுள்ளவர்களுக்கு, உதவித்தொகையை பொருளாகவே அளிக்கவேண்டும் என்றும் கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கால்நடை பராமரிப்பு இயக்குநருடன் அரசாங்கம் கலந்தாலோசித்தது. அதற்கு அவர், பஞ்சாயத்து யூனியனில் தனிப்பட்ட கோழி வளர்ப்பவர்களுக்கு மொத்தத் தொகையில், இரட்டிப்புத் தொகைக்கு ரசீது கொண்டுவரும்படி வற்புறுத்துவதைவிட அவர்கள் வளர்க்கும் கோழிகள், கம்பி வலைகள் உட்பட வைத்திருக்கும் கோழி வளர்ப்புச் சாதனங்களின் மொத்த மதிப்பீட்டின் பேரில், உதவுத் தொகையை அளிக்கலாம் என்றும், அல்லது கோழிப்பண்ணையை துவக்க விரும்புகிறவர்களுக்கு, கோழிகளும், கோழி வளர்ப்புச் சாதனங்களும் பாதி விலைக்குத் தந்து, அதை குறைந்தது இரண்டாண்டுகளுக்கு பராமரிக்கவேண்டும் என்றும், முட்டைகளையும், கோழிக்குஞ்சுகளையும், பஞ்சாயத்து யூனியனுக்கே விற்பனை செய்யவேண்டுமென்றும் வற்புறுத்தலாம் என்றும் கருத்துத் தெரிவித்துள்ளார்.

3. கால்நடை பராமரிப்பு இயக்குநரின் கருத்தை பரிசீலனை செய்தபின், அவருடைய இரண்டாவது கருத்தை அரசாங்கம் ஏற்றுக் கொள்கிறது. அதன்படி, கோழிவளர்ப்புச் சாதனங்களுடன் கோழிகளுக்கும் உதவித்தொகை அளிக்கலாம் என்று அரசாங்கம் ஒப்புக்கொள்கிறது. கோழிப்பண்ணையை துவக்க விரும்புகிறவருக்கு, பாதிவிலையில்—ரூ. 100-க்கு மிகாமல்—கோழி வளர்ப்புச் சாதனங்களை அளிப்பதுடன், கோழிகளையும் அளிப்பது எனவும், அத்தகைய உதவித் தொகையை பெறுகிறவர்கள், கோழிப்பண்ணையை குறைந்தது இரண்டாண்டுகளுக்கு பராமரிக்கவும், முட்டைகளையும், குஞ்சுகளையும், சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து யூனியனுக்கே விற்பனை செய்ய வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட வேண்டும் எனவும், கிராம நல தல நிர்வாகத்துறையின் 1963-ம் ஆண்டு ஜனவரி மாதம் 21-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 157-ன் பாரா 2-ல் உள்ள உத்தரவுகளுக்கு, பகுதி-திருத்தமாக அரசாங்கம் தற்போது ஆணை பிறப்பிக்கிறது. உதவித் தொகையை அளிக்கும் நடைமுறையில் எந்த மாற்றமும் இல்லை.

(கிராம நல-தல நிர்வாகத்துறையின் 1965-ம் ஆண்டு ஜனவரி மாதம் 27-ம் தேதியிட்ட அரசாங்க அறிக்கை 51176)

கொல்லிமலை (சேலம் மாவட்டம்) அபிவிருத்தி வட்டாரத்திற்கான திருத்தப்பட்ட திட்டம் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

Panchayat Development—Salem District—Kolli Hills Tribal Development Blocks—Revised Master Plan—Proposals of the Collector—Approved—Instructions—Issued.

(Memorandum No. 259115, R.D. and L.A., dated 22nd January 1965.)

தேவையான இடங்களில் செலவினங்களைக் குறைத்து (முக்கியமாக சாலைகள் அமைப்பதிலும், அலுவலர்களுக்கு குடியிருப்புகள் கட்டுவதிலும்) ரூ. 33 லட்சத்திற்குப் பிரதான திட்டத்தை (Master Plan) திருத்தியமைக்குமாறு, கிராம நல-தல நிர்வாகத்துறையின் 1964-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 13-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 590-ன் பாரா (2) (1)-ல், சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக்கொள்ளப்பட்டார்.

2. அதன்படியே, சேலம் மாவட்ட ஆட்சித் தலைவரும், சில சாலைகள் அமைக்கும் வேலைகளை நீக்கிவிட்டு, திட்டத்தை ரூ. 32.79 லட்சத்திற்கு உட்படச்செய்து, ஒரு திருத்தப்பட்ட பொருளாதார அறிக்கையை அரசாங்கத்திற்கு அனுப்பியுள்ளார். கிராம நல-தல நிர்வகத் துறையின் 1964-ம் ஆண்டு மார்ச் மாதம் 13-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 590-ல் அங்கீகரிக்கப்பட்ட கொல்லிமலை வட்டாரத்தின், பல்வேறு வளர்ச்சிக்கான செலவினங்கள், இவ்வறிக்கையின் இணைப்பு 1-ல் உள்ள நிதி அறிக்கைக்கு தக அமைய வேண்டும் என உத்திரவிடப்படுகிறது. கொல்லிமலை வட்டாரத்தில் நிறைவேற்றப்படவேண்டிய சாலைகளின் பட்டியலும் இவ்வறிக்கையின் இணைப்பு II-ல் (அது இங்கு பிரசுரிக்கப்படவில்லை) கொடுக்கப்பட்டுள்ளது. ஆசிரியைகளுக்கான குடியிருப்புகளை, அரசாங்கத்தின் கல்வி நிதியிலிருந்து கட்ட வேண்டுமேயல்லாது, பஞ்சாயத்து அபிவிருத்தி திட்ட வரவு-செலவு திட்டத்திலிருந்தும், மலைஜாதி முன்னேற்ற மானியத்திலிருந்தும் அல்ல, என்று சேலம் மாவட்ட ஆட்சித் தலைவருக்குத் தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு I.

கொல்லிமலை அபிவிருத்தி வட்டாரம்

நிதி அறிக்கை

வரிசை எண்.	திட்டத்தின் பெயர்	தொகை (லட்சத்தில்).
1.	போக்குவரவு ..	.. 11.48
2.	தண்ணீர் விநியோகம்	.. 3.76
3.	பள்ளிக்கூடக் கட்டிடங்கள்	.. 6.00
4.	சமூகக் கல்வி ..	.. 0.09
5.	மகளிர், குழந்தைகள் நலம்	.. 0.07
6.	விவசாயம்.. ..	.. 3.12
7.	கால்நடை பராமரிப்பு	0.53
8.	கிராமக்கலை, தொழில்	.. 0.96
9.	அலுவலகக் கட்டிடங்கள் கட்டுதல்.	.. 0.90
10.	அலுவலர் குடியிருப்பு	.. 4.00
11.	ஆதார சுகாதார நிலையம்	.. 1.00
12.	கால்நடை மருந்தகம்	.. 0.25
13.	வாகனங்கள் ..	.. 0.28
		32.44

(கிராம நல-தல நிர்வாகத் துறையின் 22—1—1965 தேதியிட்ட அரசாங்க அறிக்கை 260115-ன் சுருக்கம்.)

தமிழ்நாடு பூதான இயக்க போர்டுக்கு, கூட்டு அபிவிருத்திக் கமிஷனர் ஒரு அங்கத்தினராக நியமனம்.

Bhoodan—Madras State Bhoodan Yagna Board—Appointment of Sri K. Diraviam, I.A.S., Joint Development Commissioner and Ex-Officio Joint Secretary to Government, Rural Development and Local Administration Department as a Member—Notified.

(G.O. Ms. No. 355, R.D. and L.A. dated 17th February 1965.)

திரு ஆசாரிய விநோபா பாவேயுடன் அரசாங்கம் கலந்தாலோசித்து, கூட்டு அபிவிருத்திக் கமிஷனரும், தன் பதவியின் காரணமாக, கிராம நல-தல நிர்வாகத் துறையின் கூட்டுச் செயலாளருமான திரு கா. திரவியம், ஐ.ஏ.எஸ்., அவர்களை தமிழ்நாடு பூதான இயக்க போர்டின் ஒரு அங்கத்தினராக நியமித்து, அரசாங்கம் ஆணை பிறப்பிக்கிறது.

2. கீழ்க்கண்ட அறிவிப்பு செயின்ட் ஜார்ஜ் கோட்டை அரசிதழில் பிரசுரமாகும்.

அறிவிப்பு

1958-ம் ஆண்டு தமிழ்நாடு பூதான இயக்க சட்டத்தின் (1958-ம் ஆண்டு தமிழ்நாடு சட்டம், 15) பிரிவு 4(1)-ன்கீழும், திரு ஆசாரிய விநோபா பாவேவைக் கலந்தாலோசித்தும், தமிழ்நாடு கவர்னர் அவர்கள் கூட்டு அபிவிருத்திக் கமிஷனரும், தன் பதவியின் காரணமாக கிராம நல-தல நிர்வாகத்துறையின் கூட்டுச் செயலாளருமான, திரு கா. திரவியம், ஐ. ஏ. எஸ்., அவர்களை 1965-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 17-ம் தேதி முதல், தமிழ்நாடு பூதான இயக்க போர்டின் ஒரு அங்கத்தினராக நியமிக்கிறார்.

(கிராம நல-தல நிர்வாகத்துறையின் 1965-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 17-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 355.)

பஞ்சாயத்து யூனியன் அலுவலகங்களுக்கு மேஜை, நாற்காலி போன்ற பொருள்கள் வாங்குவதில் வீண் செலவுகளைக் குறைப்பது பற்றி விளக்கம்.

Furniture—Panchayat Union Offices—Purchase of costly furnitures like steel almirahs, etc.—Avoidance of extravagent expenditure—Instructions—Issued.

(Memorandum No. 212742, R. D. and L.A., dated 21st January 1965.)

பஞ்சாயத்து யூனியன்களைத் துவக்கிவைத்த போது, அவைகளுக்குத் தேவையான மேஜை, நாற்காலி போன்ற தளவாடங்களை சீரான முறையில், இலவசமாக அரசாங்கம் விநியோகித்தது. அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்ட அளவுக்கு மேல் தேவைப்படும் தளவாடங்களை, பஞ்சாயத்து யூனியன்கள், அவைகளின் நிதிகளில் இருந்தே பெற்றுக்கொள்ள வேண்டுமென்று கிராம நல-தல நிர்வாகத்துறையின் 1961-ம் ஆண்டு மார்ச் மாதம் 30-ம் தேதியிட்ட அரசாங்க அறிக்கை 49532-ல் அரசாங்கம் ஆணை பிறப்பித்துள்ளது. அலுவலகத்தின் உபயோகத்திற்கென, கோத்ரெஜ் அலமாரிகள், எஃகு மேஜைகள், நாற்காலிகள் போன்றவற்றை வாங்குவதில், பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர்கள் பெருமளவு செலவு செய்யும் விஷயம் அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்துள்ளது. மேஜை, நாற்காலி போன்ற தளவாடங்கள், மற்றும் அலுவலக சாதனங்கள் ஆகியவற்றை வாங்குவதில், அதிகம் உழைக்ககூடிய தன்மையைக் கருத்தில் கொண்டு, சிக்கனத்திற்கு முதன்மை இடம் கொடுத்து, மக்களின் வரிப்பணம் சிக்கனமாகவும் சாதுர்யமாகவும் செலவழிக்கப்படவில்லை என்ற குறைகளுக்கு இடமளிக்காது நடந்துகொள்ள வேண்டுமென்பதை, ஒரு விதியெனக் கொள்ளுமாறு, பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர்களுக்கு அரசாங்கம் வலியுறுத்துகிறது. வட்டாரங்கள் அல்லது தொழில் துறை மற்றும் கூட்டுறவுகள் ஆகியவற்றால் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் மரவேலை பிரிவுகளே (Wood Working Units) பஞ்சாயத்து நிறுவனங்களின் மரச் சாமான்கள் வாங்கும் இடங்களாக இருத்தல் வேண்டும். விலையுயர்ந்த எஃகு மேஜை, நாற்காலிகள் அல்லது சோபாக்கள் வாங்க கோரிக்கை இருப்பின், கூட்டு அபிவிருத்தி கமிஷனரின், முன் அனுமதியைத் தவறாது பெறவேண்டும்.

(கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1965-ம் ஆண்டு ஜனவரி மாதம் 21-ம் தேதியிட்ட அரசாங்க அறிக்கை 212742.)

கிராம சேவக்குகள் குடும்பக்கட்டுப்பாடு பற்றி பயிற்சி பெற வேண்டும்.

Family Planning—Orientation Training—Grama sevaks—Utilising them exclusively for agricultural work—Continuation of training in Family Planning—Instructions issued.

(Memorandum No. 178999, R.D. and L.A., dated 29th January 1965.)

கிராம சேவக்குகள் விவசாய சம்பந்தப்பட்ட வேலைகளுக்கு மட்டுமே பயன்படுத்தப்படவேண்டும் என்று கிராம நல-தல நிர்வாகத்துறையின் 1964-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 949-ல் அரசாங்கம் ஆணை பிறப்பித்துள்ளது. இவ்வாணையின் காரணமாக, குடும்பக்கட்டுப்பாடு பற்றி ஒரு வாரத்திற்கு, கிராம சேவக்குகளுக்கு அளிக்கப்பட்டு வரும் பயிற்சியை நிறுத்திவிடலாமா என்று செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் அரசாங்கத்தை கேட்டுள்ளார்.

2. குடும்பக் கட்டுப்பாடு பற்றிய பயிற்சியை கிராம சேவக்குகள் தொடர்ந்து பெற்றுவர வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது. குடும்பக்கட்டுப்பாடு பற்றி, வட்டாரத்திலுள்ள மற்ற அலுவலர்களுக்கும் பயிற்சி அளிப்பது பற்றிய உத்தரவுகள் தனியாக பிறப்பிக்கப்படும்.

(கிராம நல-தல நிர்வாகத்துறையின் 1965-ம் ஆண்டு ஜனவரி மாதம் 29-ம்தேதியிட்ட அரசாங்க அறிக்கை 178999.)

"மாநில கதர், கிராமத் தொழில் போர்டு" அலுவல்கள் உணவு விவசாயத் துறையிலிருந்து கிராம நல-தல நிர்வாகத் துறைக்கு மாற்றப்படுகிறது.

Business Rules and Secretariat Instructions—Transfer of subject "State Khadi and Village Industries Board" from Food and Agriculture Department to Rural Development and Local Administration Department—First Schedule to Business Rules—Amended.

[G.O. Ms. No. 2078, Public (Services-A) dated 19th December 1964.]

மாநில அலுவல்களான, "கதர்", "மாநில கதர், கிராமத் தொழில்கள் போர்டு" மற்றும் "மாநில கதர், கிராமத் தொழில்கள் போர்டு அலுவல்களின் கீழுள்ள கிராமத் தொழில் கூட்டுறவுகளையும் சேர்த்து குடிசை, கிராமத் தொழில்கள்" ஆகிய அலுவல்கள் உணவு விவசாயத் துறையிலிருந்து கிராம நல-தல நிர்வாகத் துறைக்கு மாற்றப்படுகிறது.

(கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1964-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 19-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 2078-ன் சுருக்கம்.)

சமுதாயக் கல்வி திட்டத்திலிருந்து சில இனங்கள் அகற்றப்படுகின்றன.

Social Education Programme—Model re-oriented Programme for Social Education—Discontinuance of certain items of Programme—Instructions—issued.

(Memorandum No. 232655, R.D. and L.A. dated 20th January 1965.)

தற்போதுள்ள தேசிய நெருக்கடியை முன்னிட்டு, எஞ்சியுள்ள மூன்றுவது திட்டக் காலத்தில் சமுதாய கல்வி திட்டத்திலுள்ள சில நிகழ்ச்சிகளை அகற்றி விடலாமா என்பது பரிசீலனை செய்யப்பட்டது. அதன்படி, "சமுதாயக் கல்வி" யில் சேர்க்கப் பட்டுள்ள கீழ்க்கண்ட மூன்றுவித நிகழ்ச்சிகளும், எஞ்சியுள்ள மூன்றுவது திட்டக் காலத்தில், நிறுத்தப்பட்டுவிட வேண்டும் என்று அரசாங்கம் முடிவு செய்துள்ளது:—

(1) அறிவு தரும் இடங்களை நாடி கிராம வாசிகள் செல்லுதல்.

(2) விளையாட்டுகள், பந்தயங்கள் போன்றவற்றை ஏற்பாடு செய்தல்.

(3) சமுதாய கேளிக்கைகள்.

(கிராம நல-தல நிர்வாகத்துறையின் 1965-ம் ஆண்டு ஜனவரி மாதம் 20-ம் தேதியிட்ட அரசாங்க அறிக்கை 232655.)

பஞ்சாயத்து யூனியன் மன்றங்களுக்கு தேவையான அலுவலர்களை வேலைத்தேடித்தரும் நிறுவனம் மூலம் நியமித்தல்

Establishment—Panchayat Union Councils—Personnel—Recruitment through Employment Exchange—Further instructions—issued.

(Memorandum No. 153444-A, R.D. and L.A. dated 6th February 1965.)

கிராம நல-தல நிர்வாகத்துறையின் 1961-ம் ஆண்டு ஜூலை மாதம் 4-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 1848, மற்றும் அதே துறையின் 1964-ம் ஆண்டு ஜூலை மாதம் 6-ம் தேதியிட்ட அரசாங்க அறிக்கை 131634 (இவ்வறிக்கையின் தமிழாக்கம் ''கிராம நலம்'' ஆகஸ்ட் இதழின்' பகுதி II. பக்கம் V-ல்பிரசுரமாகியுள்ளது) ஆகியவற்றில் பஞ்சாயத்து யூனியன்கள், அவைகளுக்குத் தேவையான அலுவலர்களை—ஆசிரியர்கள் உள்பட—நியமிக்கும் விஷயத்தை பொருத்து விரிவான உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. அவ்வாறு உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டிருந்தும் கூட, ஒரு பஞ்சாயத்து யூனியன் சம்பந்தப்பட்ட வேலைத் தேடித்தரும் நிறுவனத்தை கலந்தாலோசிக்காமலேயே, ஆசிரியர்கள், எழுத்தர்கள் போன்றவர்களை நியமித்துள்ள விஷயம் அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்துள்ளது. இவ்வாறான ஒழுங்கற்ற நியமனங்களைப் பொருத்து அரசாங்கம் கடுமையான கருத்துக்கொள்கிறது. ஆகவே, இம்மாதிரியான தவறுகளை தவிர்த்து, இது சம்பந்தமாக பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவுகளை தவறாது பின்பற்ற வேண்டும் என்று எல்லா பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர்களுக்கும் அரசாங்கம் உத்தரவு பிறப்பிக்கிறது.

(கிராம நல—தல நிர்வாகத்துறையின் 1965-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 6-ம் தேதியிட்ட அரசாங்க அறிக்கை 153444A.)

The following particulars regarding the ownership of " GRAMA NALAM ", the monthly newspaper, are published, as called for, by rule 8 of the Registration of Newspapers (Central) Rules, 1956:—

FORM IV.

(*See* rule 8.)

1	Place of publication	Fort St. George, Madras-9.
2	Periodicity of publication	Monthly.
3	Printer's name	Sri M. K. Gomethakavelu, B.A. (Hons.), Director of Stationery and Printing (in-charge.)
	Nationality	Indian.
	Address	Government Press, Madras-1.
4	Publisher's name	Sri N. Ananthapadmanabhan, I.A.S., Secretary to Government, R.D. & L.A. Department.
	Nationality	Indian.
	Address	Fort St. George, Madras-9.
5	Editor's Name	Sri S. Venkataswamy, M.A., Public Relations Officer, R.D. & L.A. Department.
	Nationality	Indian.
	Address	Fort St. George, Madras-9.
6	Name and addresses of individuals who own the newspaper and partners or share-holders holding more than one per cent of the total capital.	Government of Madras, Fort St. George, Madras-9.

I, N. Ananthapadmanabhan, hereby declare that the particulars given above, are true to the best of my knowledge and belief.

(Signed) N. ANANTHAPADMANABHAN,
Publisher.

Dated 12th March 1965.

Printed by the Director of Stationery and Printing, Madras on behalf of the Government of Madras, Edited by the Public Relations Officer and published by the Secretary, Rural Development and Local Administration Department, Government of Madras. Wrapper printed at Screen Designs, Madras-2.

சாலை மரங்கள் அல்ல — நல்ல தழை உரம் தரும் கிளிரிசிடியா ' செழித்து வளர்ந்துள்ள காட்சி

இன்றைய உழைப்பு-

நினைத்தால், கடை பரப்பும் தொழில் அல்ல, விவசாயம். இத் துறையில் முழுப் பலன் காண, பல அலுவல்களைத் திட்டமிட்டு, முன் கூட்டியே செய்து வர வேண்டும். தழை எரு தரும் மரஞ்செடிகளை வளர்ப்பதும், கலவை எரு தயாரிப்பதும், இவ்வகையில் குறிப்பிடத்தக்கவை.

நாளைய பலன்

திருந்திய முறையில், கலவை உரம் தயாரித்தல் — இப்போது பல கிராமங்களிலும் மேற்கொள்ளப்படுகிறது.

REGD. NO. M. 7277
©
தமிழ்நாடு அரசாங்கம் 1965

இரு நோக்கப் பணிகள்

கைக்குத்தல் அரிசி தயாரிப்பதன் மூலம் பலருக்கு வேலை வாய்ப்பு கிடைப்பதோடு, அரிசியின் ஊட்டச் சத்து வீணாகாமல் காக்கப்படுகிறது.

இடைக்காலத்தில், மங்கி மறைந்து வந்த இத்தொழில், மீண்டும் புத்துயிர் பெற்று வருகிறது.